DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1478 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 2, 2024

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சமஸ்டியை ஏற்கும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்

## - வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்து



ஜனாதிபதி தேர்தலில் சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கும் வேட்பாளருக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்துள்ளார்.

01-08-2024 அன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர்களுக்கு நாம் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றோம். உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சம்'டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். (தொடர்ச்சி 3ம் பக்கம்)

# "இளம் இசையாசிரியை ஆதிரை சிவபாலன் ரொசான் பாரம்பரிய இசைக்குடும்பத்தின் பெருமைக்குரிய வாரிசாகத் திகழ்கின்றார்"

## இசைச் செல்வி அபினாவின் வயலின் அரங்கேற்றத்தில் வயலின் வித்துவான் மூர்த்தி புகழாரம்

"இன்றைய அரங்கேற்றச் செல்வி அபினா அவர்களின் அரங்கேற்றம் ஒரு முழு நீள வயலின் கச்சேரி போன்று எனக்கு இனித்தது. கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டையும் அதனைத் தொடர்ந்து வயலின் இசையையும் கற்றுத் தேர்ந்த அபினா அவர்கள் இந்த அற்புதமான இசைக்கருவியின் நுணுக்கங்களை சிறப்புற உணர்ந்து கற்று தனது குருவான ஸ்ரீமதி ஆதிரை சிவபாலன் ரொசான் அவர்களுக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார். இதற்கு காரணம் இளம் இசையாசிரியையான ஆதிரை சிவபாலன் ரொசான் அவர்கள் பாரம்பரிய இசைக்குடும்பத்தின் பெருமைக்குரிய வாரிசாகத் திகழ்கின்றார்.
(தொடர்ச்சி 16ம் பக்கம்)



தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

# SAME BREW
# A LEGENDARY ROAR

**SINHA beer, your beloved brew, continues to reign supreme, honouring its iconic LION identity, the name by which it is recognised worldwide.**

If you've ever indulged in the inimitable flavour of Sinha Stout, you've likely been captivated by its unique taste. While retaining its unique character, Sinha is now poised to embrace its original identity as Lion, the name that conquered the hearts of beer afficionados around the world. Lion Stout will remain the same signature brew you've come to know and love as Sinha.

Originating from the island of Ceylon, known for its legendary folklore, the legacy of the Lion roared into life in 1881. Unleashing its distinctly bold flavour through time-honoured recipes, the daring taste of Lion made its mark and became a revered name in the island. In 1998, the Lion ventured into uncharted territories, crossing borders to establish its rightful dominion in over 19 countries, triumphing over the palates of beer enthusiasts worldwide.

Today, Lion Brewery stands as a testament to the enduring legacy of time, steeped in tradition, and a relentless commitment to crafting beers that pack a punch. Skillfully fusing age-old recipes with state-of-the-art brewing techniques, Lion will continue its reign of dominance in Canada, bringing you a flavour that transcends generations.

**ONLY** STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ

**ONLY** BEER IN THE WORLD ENDORSED BY MICHAEL JACKSON THE LEGENDARY BEER WRITER

99/100 ratebeer

AVAILABLE IN 473ML CANS AT

LCBO — LCBO.COM

BEER STORE — THEBEERSTORE.CA

FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020 OR
EMAIL FRED@FINEBEERS.CA




பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

## ஜனாதிபதியாக தம்மோடு ஒத்துழைக்கக் கூடிய ஒருவரை தேர்ந்தெடுப்பதில் இலங்கையின் மூவினங்கள் சார்ந்த 'கயவர்களின்' கூட்டு முனைப்பைக் காட்டுகின்றது

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவினால் நடத்தப்பெறும் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. பொருளாதார ரீதியில் ஆட்டம் கண்டு ஊழல் , விரயம், இலஞ்சம். நிர்வாகச் சீர்கேடுகள், நாட்டின் அடிமட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் சேவைகள் சரியாகச் சென்றடையாமல் அரசியல்வாதிகளாலும் உயர் அதிகாரிகளி-னாலும் அவர்களின் தரகர்களினாலும் நிதியும் வளங்களும் சுரண்டப்படுகின்ற ஒரு அமைப்பு ஆண்டாண்டு காலமாக நிலவி வரும் நிலையில் மீண்டும் ஒரு ஜனாதிபதியை காண்பதற்கு நடுத்தர மற்றும் ஏழை மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் வாழ்வதில் எதிர் கொள்ளும் சவால்கள், விலைவாசி அதிகரிப்பு. கட்டணங்களின் உயர்வு, ஆகியவற்றால் நாளாந்தம் முகம் கொடுக்கும் அச்சம் ஆகியவற்றின் மத்தியில் தங்கள் வாக்குகளை நேர்மையான ஒருவருக்கு அளிக்க வேண்டும் என அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்தும் மன நிலையில் உள்ளார்கள்.

ஆனாலும். இவ்வாறான இடர்கள் மிகுந்த காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அதிகரித்து வரும் ஊழல்களினால் தேசத்தின் திறைசேரியில் எஞ்சியிருக்கும் நிதியை தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வதற்கும் ஆட்சியாளர்கள் மூலம் தங்களுக்கு கிட்டவுள்ள சுகபோகங்களை அனுபவிப்பதற்கும் இன்னும்மொரு 'கூட்டம்" அந்தத் தீவின் எட்டுத் திசைகளிலும் தயாராகி வருகின்றது.

இந்த 'கூட்டணி"யில் அங்கம் வகிப்பவர்கள் அனைவருமே தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மையல்ல. நாம் வெட்கப்படும் வகையில் வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் உள்ள மூவினங்களைச் சேர்ந்தவர்களும் மறைமுகமான 'கூட்டணி" போன்ற ஒரு பிணைப்புடன் முனைப்புடன் தங்கள் கபடத்தனமான பிரச்சாரங்களை முடுக்கி விட்டுள்ளார்கள் என்பதை வெளிச்சமாகமே தெரிகின்றது தம்மோடு ஒத்துழைக்கக் கூடிய ஒருவரை தேர்ந்தெடுப்பதில் இலங்கையின் மூவினங்கள் சார்ந்த 'கயவர்களின்" கூட்டு முனைப்பைக் காட்டுகின்றது

இந்தக் 'கயவர்கள்" தங்களுக்கென ஒரு கூடாரத்தை மாத்திரம் வைத்திருக்கவில்லை. ஆங்காங்கே பல கயவர்கள் ஒவ்வொரு பாதையில் பயணித்து தங்களுக்கு ஏற்ற ஒருவரை தேர்ந்தெடுப்பதில் கவனமாக உள்ளார்கள்.

அநுர குமார போன்ற ஓரளவு நம்பகத் தன்மை கொண்டவர்களின் பெயர்கள் சாதாரண மக்கள் மத்தியில் உச்சரிக்கப்படுகையில் அவர் வடக்கையும் கிழக்கையும் பிரித்தார் என்று தமிழர்களை நோக்கி தகவல்கள் வேகமாக அனுப்பப்படுகின்றன.. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தமிழ் பேசும் அரசியல்வாதிகளைக் 'கைகளுக்குள்" வைத்துக் கொண்டு அழித்தர்களையோ அன்றி அவர்களது சகாக்களையோ தெரிவு செய்வ நாட்டுக்கு நல்லது அல்ல என்பதை நன்கு அறிந்து கொண்டாலும் அந்தக் 'கயவர்கள்" தமக்கு ஏற்றவர் ஒருவரை பதவியில் அமர்த்த இரவு பகலாய் கபடத்தனம் புரிகின்றார்கள். கொள்கைகளின் அடிப்படையில் எவ்விதமான தகுதியும் அற்ற ஒருவரை தேர்ந்தெடுப்பதில் நாம் முன்னர் குறிப்பிட்ட மூவினங்களின் பிரதிநிதிகளாக செயற்படும் கயவர்கள் ஒரு பாரிய வலயத்தை தோற்றுவித்துள்ளார்கள். அந்த வலயத்திற்குள் கோடிக்கணக்கான ரூபாய்கள் புரளத் தொடங்கியுள்ளன. இந்தத் தொ-கையை சமனான அளவில் தேர்தலுக்கு முன்னரேயே பங்கிட்டுக் கொடுக்க 'அந்த ' கயவர்களின் தெரிவான வேட்பாளர் இணங்கியுள்ளதாகவும் அறியப்படுகின்றது. தேர்தலுக்கு முன்பாகவே இத்தனை 'இலாபங்களா?" என்று வாயைப் பிளக்கும் 'கயவர்களின்" எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கும் தகவல்களை அவர்களே பரப்புகின்றார்கள்.

கடைசியில் 'அரகலய" போன்ற ஒரு போராட்டத்தையோ அன்றில் தமிழர் பகுதியில் எழுச்சியோடு மக்கள் போராடியது போன்றோ ஒரு நிலை வராதா என்று நடுத்தர மற்றும் ஏழை மக்கள் ஏக்கத்தோடு குரல் எழுப்பும் நிலை தீவெங்கும் தோன்றும் நாள் விரைவில் வரும்!

## கனடா— மார்க்கம் மூத்தோர் சங்கத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பெற்ற... (பின் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் தலைவர் திரு சுந்தரலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. **CONIFA WOMEN'S WORLD FOOTBALL CUP -** 2024 என்னும் பெயரில் நடைபெறும் உலக உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு சென்று பங்கு பற்றி வெற்றிவாகை சூடிய தமிழீழப் பெண்கள் அணியின் சார்பில் கனடிய வீராங்கனைகள் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

எமது தாய் மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து இ இங்கிலாந்துஇ சுவிட்சர்லாந்துஇ நெதர்லாந்துஇ ஜேர்மனிஇ பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் ஈழத்தை பூர்வீகமாகக்கொண்ட இளம் பெண் வீரங்கனைக் கொண்டு இந்த தமிழ் ஈழப் பெண்கள் உதைபந்தாட்டக் அணி உருவாக்கப்பட்டிருந்தது. அனைத்து நாடுகளிலிருந்தும் சுமார் 22 தமிழ் உதைப்பந்தாட்ட வீராங்கனைகள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் கனடாவிலிருந்து உலகப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் ஐந்து உதைப்பந்தாட்ட வீராங்கனைகள் நோர்வேக்கு பயணம் செய்து அங்கு ஏனைய தமிழீழ வீராங்கனைகளோடு இணைந்து சுற்றுப் போட்டியில் பங்குபற்றி இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர்.1. பிரித்திகா ஐங்கரமூர்த்தி 2. மாயா சத்தியன் 3. ஓவியா சத்தியன் 4. பிரீதி சுரேஸ்குமார் 5. மெலனி சுரேஸ்குமார். ஆகியோரே அன்றைய தினம் பாராட்டப்பெற்றனர்.

## ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சமஷ்டியை ஏற்கும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் — வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்து

(முன் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி 2022 ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி சுழற்சி முறையிலான 100 நாட்கள் செயல்முனைவினை ஆரம்பித்து, 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டோம்.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டுவரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழவேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம்.

ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றையே நாம் திடமாக வலியுறுத்தி நிற்கின்றோம். இலங்கையில் நாம் சிறுபான்மையினர் அல்ல இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத்தினராவோம். எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஷ்டி முறைமையின் மூலம் உறுதிசெய்து கொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றோம்.

எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்த செயற்படுவோம். இதற்கு அனைவரும் ஜனநாயக வழிநின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.




TELEMARKETERS WANTED

தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய Telemarketers உடனடியாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416-754 9492

ஒரு சோடிக் குத்துவிளக்குகள் விற்பனைக்குண்டு

வீடுகளில் காட்சிப் பொருளாகவும் பாவிக்கக் கூடிய அழகிய ஒரு சோடிக் குத்துவிளக்குகள் உடன-டியாக விற்பனைக்கு உண்டு. விலையை பேசித்தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு :- 647 339 4019

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாகாணமட்ட ஹொக்கிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை சாதனை!






மாகாணமட்ட ரீதியில் நடைபெற்ற கொக்கி போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையானது முதலாவது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்த இறுதிப் போட்டியானது யாழ்ப்பாணக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றது. 20 வயதின் கீழ் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஏழு பாடசாலைகளின் அணிகள் பங்கு பற்றின.

இதன்போது வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்திற்கும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்குமிடையே கடுமையான போட்டி நிலவியது. அந்தவகையில் 2:1 என்ற எண்ணிக்கை அடிப்படையில் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தை வீழ்த்தி பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலிடம் பெற்றது.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணிக்கான பயிற்றுவிப்பாளராக செல்வி பிந்துசா பிரபாகரன் அவர்கள் கடமை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றி ஆளுநர் சார்ள்ஸ் விபரமாக எடுத்துரைத்தார்

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் 26-07-2024 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த ஊடக மாநாட்டில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் அவர்களும் கலந்துக்கொண்டார்.

கண்ணிவெடி அகற்றல் மற்றும் மீள்குடியேற்ற செயற்பாட்டின் முன்னேற்றம், சிவில் பிரஜைகளின் காணி விடுவிப்பு, சூரிய மின்படல வீட்டுத்திட்டம், குடிநீர் விநியோக திட்டம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி திட்டங்கள், "உரித்து" செயற்றிட்டம், கல்வித்துறை, விவசாயம் மற்றும் நீர்பாசன திட்டங்கள், சுகாதாரத்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு வலய (BOI) திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

# நெடுந்தீவின் அபிவிருத்தியை நோக்கிய "நெடுந்தீவு நெடுவூர் திருவிழா" – படையெடுக்கும் வெளிநாடு வாழ் மக்கள்



"மீண்டும் ஊருக்கு போகலாம்" என்னும் தொனிப் பொருளில் நெடுந்தீவின் நிலைபேறான அபிவிருத்தியை கருத்தில் கொண்டு மாபெரும் நெடுவூர் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நெடுந்தீவில் இடம்பெறும் என நெடுந்தீவு ஊரும் உறவும் நிறுவன ஏற்பட்டாளர் கிருபாகரன் தெரிவித்தார்.

27-07-2024 அன்றையதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுந்தீவானது சுமார் 15 ஆயிரம் மக்கள் வாழ்ந்த பிரதேசம் இன்று அங்கு வாழும் மக்கள் தொகை மிகக் குறைவடைந்துள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் வளப்பற்றாக்குறை ஏனைய வசதி வாய்ப்புகள் இல்லாமை காரணமாக இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும் வேறு பிரதேசங்களுக்கும் சென்றுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மண்ணையும் மக்களையும் பாதுகாத்து நிலைபேறான அபிவிருத்தியை நெடுந்தீவில் ஏற்படுத்தும் பொருட்டு நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பினரால் மாபெரும் நெடுவூர் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட புலம்பெயர் நாட்டில் வசிக்கும் மக்கள் பங்காளிப்புடன் நெடுந்தீவு மக்களும் இணைந்து அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் நெடுவூர் திருவிழாவை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

இந்த காலப்பகுதியில் விவசாய கண்காட்சி மூலிகை கண்காட்சி, கல்வி சார்ந்த காட்சி, உள்ளூர் உற்பத்தி, பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரிய உணவு கொண்டாட்டங்கள், புத்தக வெளியீடு உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பான தளங்களைப் பார்வையிடல், சுற்றுச்சூழல் கண்காட்சிகள், முத்தமிழ் கலை நிகழ்வுகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட சிறுகதை கட்டுரை கவிதை போட்டிகள் பரிசளிப்பு என்பன இடம்பெற உள்ளன.

இந்த நிகழ்வு இடம்பெறும் காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் கடல் பயணத்திற்கான படகு சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஆகவே இலங்கையின் முதல் கிராம சேவையாளர் பிரிவான நெடுந்தீவில் இருந்து நிலைபேறான அபிவிருத்தியை ஏனைய பகுதிகளுக்கும் முன்னெடுத்து செல்வதற்கு அனைத்து தரப்பினரும் வருகை தந்து ஆதரவு வழங்குமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

# கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன் விழாவை முன்னிட்டு நடைபவனி!





கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன் விழாவை முன்னிட்டு பாடசாலை சமுகத்தால் ஆரோக்கியத்தை பேணுவோம் என்ற தொனிப்பொருளில் நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

26-07-2024 வெள்ளிக்கிழமை காலை பாடசாலையிலிருந்து ஆரம்பமாகிய நடைபயணம் திருவையாறு பகுதியை வலம் வந்து பாடசாலையில் நிறைவடைந்தது.

குறித்த நடைபயணத்தில் பாடசாலை பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுக் கட்டமைப்பின் முதலாவது சந்திப்பு!



தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிகளும் 7 தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பின் முதலாவது சந்திப்பு 28ம் திகதியன்று இடம்பெற்றது.

ஜூலை மாதம் 28 ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பில் பொது வேட்பாளரைத் தெரிவு செய்வது, கட்சிச் சின்னத்தைத் தெரிவு செய்வது, நிதியை முகாமை செய்வது, பரப்புரையைத் திட்டமிடுவது போன்றவற்றுக்கான உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன.

# சட்டங்களாலும் விவாதங்களாலும் மாத்திரம் ஊழலை கட்டுப்படுத்த முடியாது என்கிறார் ரெலோ போச்சாளர்

ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்கும் உறுதியான மனநிலை அனைத்து மக்கள் மத்தியிலும் உருவாக வேண்டும். "சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது, திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது, திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற தத்துவ வரிகளே யதார்த்தமானவை.

அண்மையில் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான தேசிய வேலை திட்டத்திற்கு பாராளுமன்ற அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படும் சூழலிலேயே இந்நிகழ்ச்சித் திட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஊழல் தடுப்பு சட்டத்தின் செயல் திறன் எந்த அளவு என்பது ஆராயப்படவில்லை.

இப்படி வேலைத்திட்டங்களையும் சட்டமூலங்களையும் பாராளுமன்றத்தில் அறிவிக்க ஒரு தரப்பு இருக்க இன்னும் ஒரு தரப்பு இது சம்பந்தமான விவாதங்களுக்கு வேட்பாளர்களை அழைக்கின்ற அறைகூவல்களை விடுத்த வண்ணம் உள்ளனர். இவை தொடர்ந்தும் மக்களை ஏமாற்றும் செயல்பாடே மாற்றாக ஊழலுக்கு எதிரான கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அமையாது.

குறிப்பாக வடமாகாண சபை இயங்கு நிலையில் இருந்த பொழுது ஊழல் குற்றச்சாட்டில் முழு அமைச்சரவையும் கலக்கப்பட்டதை இங்கு குறிப்பிட முடியும். இதேபோன்று வடபகுதியில் மருத்துவத் துறையில் ஊழல் நிலவுதாக குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் உள்ளன.

இதையெல்லாம் பகிரங்க விவாதங்களினால் கட்டுப்படுத்த முடியுமா? சம்பந்தப்பட்ட தரப்புகளும் பொது மக்கள் கட்டமைப்புகளும் ஒன்றிணைந்து ஊழலற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் வேலை திட்டத்தை செயல்படுத்த வேண்டும். தேர்தல் காலங்களில் மாத்திரம் விவாத பொருளாக விடயங்களை கையாண்டு விட்டு அந்த விடயங்களை கிடப்பில் போடுவது தமது நமது சுயலாபத்துக்கு வழிவகுமே தவிர ஊழலை கட்டுப்படுத்துவதாக அமையப்போவதில்லை.

கு. சுரேந்திரன்
பேச்சாளர், ரெலோ
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



## கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த சொகுசு பேரூந்து புத்தளத்தில் விபத்து

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

(26-07-2024)





கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் சொகுசு பேரூந்து வெள்ளிக்கிழமை (26) புத்தளம் காக்கா பள்ளி பாதையில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பாதையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதி குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது பேரூந்தில் பயணித்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதுடன் எரிபொருள் நிரப்பும் இயந்திரத்தின் மேற்பகுதியும் பேரூந்தும் பகுதியளவில் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு கடத்த மானாங்குடி கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1.80 கோடி மதிப்பிலான 5 லட்சத்து 70 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் பறிமுதல்



- எஸ்.ஆர்.லெம்பேட் (27-07-2024)

ராமநாதபுரம் அடுத்த மானாங்குடி கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1 கோடி 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான 5 லட்சத்து 70 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் 26-07-2024 வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்து தலைமறைவான சந்தேக நபர் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், மண்டபம் வேதாளை மரைக்காயர் பட்டினம், மானாங்குடி உள்ளிட்ட கடற்கரையில் இருந்து தனுஷ்கோடி கடல் வழியாக கடல் அட்டை, சமையல் மஞ்சள், இஞ்சி, வலி நிவாரணி மாத்திரைகள், கஞ்சா உள்ளிட்ட பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகிறது.

கடல் வழியாக நடக்கும் கடத்தல் சம்பவங்களை தடுக்க மத்திய சுங்கத்துறை, கடலோர காவல் படை, கடற்படை மற்றும் மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்தாலும் அதையும் மீறி சமீப காலமாக அதிக அளவில் கடத்தல் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு கண்காணிப்பாளர் கண்ணதாசனுக்கு ராமநாதபுரம் மாவட்டம் புதுமடம் அடுத்த மானாங்குடி கடற்கரையில் இருந்து போதைப்பொருள் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் குழு புது படத்திலிருந்து மானாங்குடி வரை உள்ள கடற்கரை பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது இலங்கைக்கு கடத்துவதற்காக மானாங்குடி கடற்கரை பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 பெட்டிகள் கைப்பற்றப்பட்டது. அதை திறந்து சோதனை செய்த போது அதில் வலி நிவாரணி மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

இதனை எடுத்து அந்த பெட்டிகளை மண்டபம் சுங்கத் துறை அலுவலகத்திற்கு எடுத்து வந்து ஆய்வு செய்தபோது ஒரு பெட்டியில் 57 ஆயிரம் மாத்திரைகள் வீதம் 10 பெட்டியில் 5 லட்சத்து 70 ஆயிரம் மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து வலி மாத்திரைகள் அடங்கிய பெட்டிகளை சரக்கு வாகனம் மூலமாக ராமநாதபுரம் சுங்கத்துறை தலைமை அலுவலகத்தில் எடுத்து வந்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய முதல் கட்ட விசாரணையில் வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கைக்கு இரவு படகு மூலம் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்துள்ளதாகவும், இந்த கடத்தல் சம்பவத்தில் தொடர்புடையதாக கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகி உள்ளதால் அவரை தீவிரமாக தேடி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



மேலும் கைப்பற்றப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளின் மதிப்பு சுமார் 1 கோடி 80 லட்சம் என்றும் சர்வதேச மதிப்பு மூன்று கோடி ரூபாய் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காவேரிக் கலாமன்றம் நடத்திய நண்டு தொழில் இலக்கிய பண்பாட்டு கூடல்!

**பு. கஜிந்தன்**

காவேரிக் கலாமன்றம் நடத்திய நண்டு தொழில் இலக்கிய பண்பாட்டு கூடலானது இன்றையதினம் வேலணை செட்டிப்புலத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆய்வு உரைகள் இடம்பெற்றன. அந்தவகையில் நண்டு தொழில் முறைப்பார்வை என்ற தலைப்பின் கீழ் அ. இன்பராசா அவர்களும், நண்டும் ஊட்டச்சத்தும் என்ற தலைப்பின் கீழ் திருமதி டெபோரா அவர்களும், நண்டு சந்தைப்படுத்தலும் வியாபார முகாமைப்படுத்தலும் என்ற தலைப்பின் கீழ் பெசில் பெனட் அவர்களும் ஆய்வுரைகளை ஆற்றினர்.





நண்டு தொழில் இலக்கிய பண்பாட்டு கூடலின் தலைவர் ரஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக காவேரிக் கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குனர் ரெபரன்ட் ஈ.எஸ். யோசுவா, சிரேஷ்ட ஊடகவியலாளரும் எழுத்தாளருமான திரு. கருணாகரன், கிராம உத்தியோகத்தர் திரு. கோகிலரூபன், கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. மார்க்கண்டுதாசன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், சமூக மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.



இந்த நிகழ்விற்கு இணை அனுசரணையினை தமிழியல் ஆய்வு நடுவகம், செட்டிப்புலம் வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஐயனார் ஆலய பரிபாலனசபை, ஐயனார் விளையாட்டு கழகம், சனசமூக நிலையம், இளைஞர் கழகம் ஆகிய அமைப்புக்கள் வழங்கின.

# வடக்கு கிழக்கில் தமிழர்கள்சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பாக தேர்தல் விஞ்ஞானத்தில் வலியுறுத்தினால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக தமிழரசுக்கட்சி பரிசீலனை செய்யும் — சிறிதரன்

தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர்களில் யாராவது சமஸ்டியை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் தமிழர்கள்சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பாக தேர்தல் விஞ்ஞானத்தில் வலியுறுத்தினால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக தமிழரசுக்கட்சி பரிசீலனை செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவிப்பு கிளிநொச்சியில் நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனினும் எதிர்வரும் மாதம் 10, 11 ஆம் திகதிகளில் மத்திய குழு கூடி பொது வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தேர்தல் விஞ்ஞானத்தில் சமஸ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா என்று முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

விக்கினேஸ்வரன் வடமாகாண சபையே நடாத்த முடியாதவர் என்று சுமந்திரன் குறிப்பிட்டது தொடர்பாக ஊடக வியலாளர் கேள்வி கேட்ட போது எமது கட்சியைச்சேர்ந்தவரின் கருத்திற்கு வியாக்கினம் வழங்குது சரியான விடயம் அல்ல விக்கினேஸ்வரன் தான் வழங்க வேண்டும்.



இப்போதைய கால சூழல் அனைவரையும் ஒன்றிணைத்து செல்ல வேண்டும் ஒற்றுமையை குழப்பி அதனை விட்டு பேசிக்கொண்டு இருந்தால் அடிப்படை அரசியல் கொண்டு செல்வதில் பிரச்சனை உள்ளது. மகிந்த ராஜபக்ச பிள்ளையானை நம்பி பொலிஸ் அதிகாரம் கொடுக்கலாமா என்று கேட்டிருந்தார். அதற்காகவே முன்னாள் நீதியரசரை களம் இறக்கி பொலிஸ் அதிகாரம் நிதி அதிகாரம் வழங்குமாறு கோரியிருந்தோம் எல்லாருடைய விருப்பத்திலே தெரிவு இடம்பெற்றது, என தெரிவித்தார் சிவஞானம் சிறீதரன்.

# "மாறிமாறி வந்த அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றியது என்பதற்கு அப்பால் தமிழ்க் கட்சிகளும் தம் மக்களை ஏமாற்றினார்கள் என்பதும் உண்மை" ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு



ஏழு கட்சிகள் சிவில் அமைப்புகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் எனக் கூறப்படுவது தோல்விக் கலக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமே தவிர தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஒப்பந்தம் அல்ல என ஈழ மக்கள் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் 30.07.2024 அன்று 30.07.2024 இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சமீபத்தில் சிவில் அமைப்பபுகள் என்று கூறிக்கொள்பவர்களும் சிதறுண்டுபோய் இருக்கின்ற ஏழு குழுக்களும் செய்துகொண்ட ஒப்பந்தமானது மாறிமாறி வந்த அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றியது என்பதற்கு அப்பால் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள் என்பதற்கான உதாரணமாகும்.

இரண்டு நாடுகள் ஒப்பந்தம் செய்வதும் இரண்டு இனம், இரண்டு சமயத்தவர்கள் இரண்டு பிரிவினர் தங்களுக்குள் இணக்கமற்ற சூழல் நிலவுகின்றபோது பொது உடன்படிக்கை செய்துகொள்வது இயல்பானது.

ஆனால் இங்கு ஏழு குழுக்கள் கட்சியாகவும், சிவில் சமூகத்தவர்கள் என்ற சிலரும் இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பெரிதாக ஓர் ஒப்பந்தம் செய்தகொண்டதாக புழகாங்கிதம் அடைந்துவருகின்றனர்.

தமக்குள் ஒற்றுமையின்மை நிலவுவதால் பொது வேட்பாளரை நிறுத்துவதனூடாக சிதறுண்டிருக்கின்ற கட்சிகளை ஒற்றுமைப்படுத்தலாம் என புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனும், சி.வி. விக்னேஸ்வரனும் ஏற்கனவே ஊடகங்களுக்கு தெரிவித்ததன் பின்னர் இப்போது சிவில் அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமத் செய்ததாகவும் ஏதோ இணக்கப்பாடில்லாத இரு தரப்பினரை ஒருநிலைப்படுத்திய பிரமிதத்தில் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

ஆகவே அடுத்தவருடன் நடுப்பகுதிக்கு பின்னர் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை இலக்குவைத்தே உதிரிகள் எல்லாவற்றையும் ஓரணியில் திரட்ட அரங்கேற்றிய நாடகமே தவிர இதனால் தமிழ் மக்கள் இவர்களது சகட்டு மேனி பேச்சுக்களை கண்டுகொள்ள தயாரில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கிடையிலான இசைப்போட்டி!

சாவிகா சங்கீத அறிவாலயமும் புதிய வாழ்வு நிறுவனமும் இணைந்து நடாத்திய வடக்கின் மாற்றுத்திறனாளிகளுக்கான இசைப்போட்டி கடந்த 27ம் திகதி யாழ்ப்பாணம் - மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.







தவத்திரு. வேலன் சுவாமிகள் (முதல்வர், சிவகுரு ஆதீனம்) அவர்களின் ஆசியுரையுடனும் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் (அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) அவர்களின் வாழ்த்துரையுடனும் காலை 9 மணியளவில் ஆரம்பித்த இப்போட்டி நிகழ்ச்சி பிற்பகல் 5.30 வரை தொடர்ச்சியாக நடை பெற்றது.

இப் போட்டி நிகழ்வை சாவிகா சங்கீத அறிவாலய உப தலைவர் செல்வி. கஜந்தினி பாலேந்திரராஜா அவர்கள் தொகுத்து வழங்கியிருந்ததோடு, முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் (முதலாவது பீடாதிபி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி), திரு. யோகானந்தம் ஜெகானந்தம் (அதிபர், ஆனைப்பந்தி மெ.மி.த.க பாடசாலை), செல்வி. திலகவதி துரைச்சாமி (இயக்குநர், புதிய வாழ்வு நிறுவனம்) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர். 70ற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்ட இப்போட்டி நிகழ்ச்சிக்கு நடுவர்களாக பிரபல இசைக்கலைஞர்கள் திருமதி. வாசஸ்பதி ரஜீந்திரன், திருமதி. விக்கினேஸ்வரி நரேந்திரா, திரு. நவரட்ணம் பரந்தாமன், திரு. ரஜீந்திரன் சுரசாகித்தியன், திரு. இராசரத்தினம் நிரோஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இப் போட்டியானது வாய்ப்பாட்டு மற்றும் வாத்தியக் கருவி இசைத்தல் போன்ற பிரிவுகளில் இடம்பெற்றதோடு அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்கி நிகழ்த்தப்பட்ட இசைப்போட்டி என்பது குறிப்பிடதக்கது.







மாற்றுத்திறனாகளின் இசைத் திறமையினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடைபெற்ற இப் போட்டி 20 இற்கு மேற்பட்ட இளம் தன்னார்வலர்களின் அணிசேர் முயற்சியால் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதும் சிறப்பம்சமாகும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தீவகத்தின் கல்வித்தர வீழ்ச்சியை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

## - துறைசார் அதிகாரிகளுடன் விஷேட கலந்துரையாடல்!

தீவக பிரதேச கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கும் அப்பகுதியின் கல்வி தரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் துறைசார் அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தின் தீவக கல்வி வலைய பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் ஆளணி பற்றாக்குறை நிர்வாக பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்துவதில் இவ்வாறான காரணிகள் பல தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் பலதரப்பட்டவர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.



இந்நிலையிலேயே குறித்த கலந்துரையாடல் (28.07.2024) அன்று காலை அமைச்சரின் யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது - தீவக பிரதேசத்தில் காணப்படும் பிரச்சிகைள் குறித்தும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்கான ஏதுநிலைகள் குறித்து இருதரப்பினரும் இதன்போது விரிவாக ஆராய்ந்திருந்தனர்.

இந்நிலையில் தீவக கல்வி வலையங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வித்தர நிலையை மேம்படுத்தி மாணவர்களுக்கு சிறந்ததோர் கல்விச் சேவையை பெற்றுக்கொடுக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தீவக கல்வி வலையத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தற்போது கல்வி நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டகின்றன.

இந்நிலையில் அது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் விசேடமாக ஆராந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி நிலைகளை மேம்படுத்தும் நோக்கில் துறைசார் கல்வி நிலை அதிகாரிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் எடுத்துக் கூறியிருந்தார்.

அத்துடன் கல்வித்துறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எதுநிலைகள் குறித்து துறைசார் அமைச்சின் கவனத்திற்கு கொண்டுசென்று தீர்வகளை காண்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன உயிரிழந்த காரணத்தை கேட்டறிந்த அநுர குமார பதில் எதுவும் கூறாமல் அங்கிருந்து வெளியேறினார்



தனது அரசியல் வாழ்வில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய இடதுசாரி தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவும் வருகை தந்திருந்தார்.

பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மலர்சாலைக்கு வருகைத்தந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் “தோழர் பாகுவிற்கு என்ன நடந்தது?” என நவ சமசமாஜ கட்சியின் தலைவர்களுடனான கலந்துரையாடலில் கேட்டுள்ளார்.

“அந்த கடவத்தை கூட்டத்தில் சுடப்பட்டதுதான் அவருக்கு பாதிப்பை ஏற்படுத்தியது” என அங்கிருந்த கட்சியின் ஆதரவாளர் ஒருவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க பதில் எதுவும் கூறாமல் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

1990 ஆம் ஆண்டு கடவத்தையில் ஐக்கிய சோசலிச முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றும் போது விக்ரமபாகு கருணாரத்ன, மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்ட தேசப்பற்றாளர் மக்கள் இயக்கத்தினரால், LMG ரக இயந்திர துப்பாக்கியால் சுடப்பட்டார்.

தமிழ் மக்களுக்கு ஓரளவு அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதாக நம்பப்பட்ட மாகாண சபைகளை பாதுகாப்பதில் சிங்கள மக்கள் மத்தியில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையே இதற்குக் காரணம்.

வயிற்றில் பொலிந்த குண்டுமழையால் கீழே விழுந்த விக்ரமபாகுவை, அப்போது அவரது பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருந்த இருந்த ஞானசிறி கோத்திகொட தலைமையிலான சகோதரர்கள் உயிரைப் பணயம் வைத்து வைத்தியாலைக்கு கொண்டு சென்றமையால் அவர் மரணத்திலிருந்து தப்பினார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நாடக கலைஞர் தேவ பண்டார சேனாரத்ன துரதிஷ்டவசமாக உயிரிழந்தார்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# தலை மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மாண்புமிகு மலையக எழுச்சி பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு



- எஸ்.ஆர்.லெம்பேட் (28-07-2024)

மாண்புமிகு மலையக எழுச்சி பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு 28-07-2024 ஞாயிற்றுக்கிழமை காலை தலைமன்னாரில் இடம் பெற்றது.

மலையக மக்களின் 200வது வருடத்தை ஒட்டி வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட மாண்புமிகு மலையக எழுச்சி பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் புனித லோரன்சியார் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) காலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு மலையக சிவில் சமூக கூட்டிணைவு அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 50க்கும் மேற்பட்ட மலையக மக்கள் தலைமன்னாருக்கு வருகை தந்து குறித்த திருப்பதியில் கலந்து கொண்டு தமது முன்னோர்களுக்கான நினைவு கூறல் மற்றும் ஓராண்டு பூர்த்தி நன்றியையும் செலுத்தி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலியில் பின்னர் மலையக மக்கள் மற்றும் தலைமன்னார் ஊர்மனை கிராம மக்கள் ஊர்வலமாக சென்று குறித்த கிராமத்தின் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மலையக மக்களின் ஞாபகார்த்த நினைவு ஸ்தூபி இடத்தில் அன்று 7.30 மணியளவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த இடத்தில் மலையக மக்கள் மற்றும் மலையக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கிராமவாசிகள் குறித்த கிராமத்தின் மதகுரு. அருட்சகோதரி மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் உட்பட பிரதிநிதிகள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நினைவேந்தல் மிக எழுச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த குழுவினர் மன்னார் நகர பகுதிக்கு விஜயம் செய்து கடந்து வந்த பாதை பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு,மாண்புமிகு மலையக எழுச்சி பயணத்தின் போது ஆதரவு வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் நட் சான்று பத்திரம் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியால் தீர்வைத் தர முடியுமா?

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் கோரிக்கை

- எஸ்.ஆர்.லெம்பேட் (28-07-2024)



நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் 28-07-2024 அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை 28ம் திகதி காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம்.

இலங்கை அரசாங்கமும் சரி சர்வதேசமும் எங்களை ஒரு தடவையாவது திரும்பி பார்க்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மாத முடிவில் வடக்கு கிழக்கில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வீதியில் நின்று போராடி வருகிறோம்.

ஆனால் எங்களை ஒருவருமே திரும்பி பார்ப்பதாக தெரியவில்லை. எனினும் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வீதியில் இறங்கி போராடி வருகிறோம். ஆனால் நீதிக்காக ஏங்கி போராடி வருகின்ற அம்மாக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் சாட்சிகளும் மறைக்கப்பட்டு கொண்டு செல்கிறது.



அதனையே இந்த அரசும் விரும்புகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை (OMP) மாவட்ட ரீதியாக ஸ்தாபித் துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு 2 லட்சம் ரூபாய் கொடுப்பதாக கூறுகின்றனர். எமது உறவுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த அரசு இந்த பணத்தை வழங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஊடாக உண்மையை கண்டறிவோம் என கூறப்பட்டுள்ள போதும் இது வரை உண்மையை கண்டறிய முன் வரவில்லை. ஆனால் இழப்பீடு வழங்குவதற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர்.

நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக் கொண்டு வீட்டில் இருக்க வேண்டும் என்பதே ஓ.எம்.பியின் நோக்கமாக உள்ளது.

எமது பிள்ளையின் உயிர் 2 லட்சம் பெறுமதி இல்லை. எங்கள் பிள்ளைகளை திருப்பி தந்தால் 4 லட்சம் எங்களால் தர முடியும். உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளையே கேட்கிறோம். தற்போது ஜனாதிபதி தேர்தல் இடம் பெற உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியினால் தீர்வு தர முடியுமா?,நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதி யிடமும் காணாமல் போன எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். நேரடியாக சென்று சந்தித்து கலந்துரையாடியும் உள்ளோம்.

ஆனால் இது வரையில் எந்த ஜனாதிபதியும் எமக்கான பதிலை வழங்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாக வந்தால் காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகளையும், உறவுகளையும் மீட்டுத் தருவாரா? அல்லது எமது உறவுகளுக்கு நீதி கிடைக்குமா?, அல்லது இருக்கின்ற இடத்தை கண்டுபிடித்து தருவாரா?, அந்த எதிர் பார்ப்புக்கள் உடனே இன்று வரை போராடி வருகிறோம்.

இலங்கை அரசியலில் நம்பிக்கை இல்லை. இவ்வாறான காரணங்களினாலேயே சர்வதேச விசாரணை கோரி போராட்டம் முன்னெடுத்து வருகிறோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் மருதமடு அன்னை ஆவணி மாத திருவிழாவுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விசேட கலந்துரையாடல்





- எஸ்.ஆர்.லெம்பேட் (29-07-2024)

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெற உள்ளது.

இந்த நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான முன் ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் 29-07-2024 அன்று திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழமை.

இந்த நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகல விதமான ஏற்பாடுகள் குறித்தும் அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடப்பட்டது.

வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 06 ஆம் மருத மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, 15 ஆம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத்திரு பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை,குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இணையத்தளமூடாக வியாபார பதிவுகளை ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



இணையத்தளமூடாக வியாபார பதிவுகளை (Online Business Registration) ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கௌரவ அனுப பஸ்குவல் மற்றும் கௌரவ ஆளுநர் ஆகியோரின் தலைமையில், ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் 30-07-2024 அன்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எம்.பிரதீபன், ஆளுநரின் உதவிச் செயலாளர், சமுர்த்தி ஆணையாளர் நாயகம் மற்றும் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான வியாபார பதிவுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. கால தாமதமின்றி வியாபார பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையதள பதிவு முறையை (Online Business Registration) அறிமுகப்படுத்துவது சிறந்த செயற்பாடு என தெரிவித்த கௌரவ ஆளுநர் அவர்கள், வடக்கு மாகாணத்தில் அதற்கான செயற்பாட்டை துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் கூறினார். அத்துடன் பொதுச்சேவைக்கான செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதும் அவசியம் என தெரிவித்தார்,

விசேட தேவையுடையோர் பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுதல் வேண்டும் எனவும், அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் கௌரவ ஆளுநர் கோரிக்கை விடுத்தார். இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் கௌரவ அனுப பஸ்குவல் அவர்கள், போக்குவரத்திற்கான பஸ்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக கூறினார். அத்துடன் விசேட தேவையுடையோர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் அசுவெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு இதன்போது கொண்டு செல்லப்பட்டது. அதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ அனுப பஸ்குவல் அவர்கள் தெரிவித்தார்.



# அராலியில் முதியவர் ஒருவர் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் முதியவர் ஒருவர் 30ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று காலை தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த கந்தையா செல்லச்சாமி (வயது 80) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவரும் அவரது மனைவியும் சம்பவம் நிகழ்ந்த வீட்டில் வசித்து வந்துள்ளனர். இந்நிலையில் அவரது மனைவி அன்று காலை வெளியே சென்றிருந்தவேளை அவர் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டப் போட்டியில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்துச் சிறப்பித்தார்!



ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடர் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழக உள்ளக அரங்கில் பூப்பந்தாட்டத் தொடருக்கான ஆரம்ப நிகழ்வு 31-07-2024 அன்று நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் கலந்துச் சிறப்பித்தார்.

12 நாடுகளைச் சேர்ந்த 514 வீர, வீராங்கனைகளின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகியுள்ள ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் இறுதி போட்டிகள் எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறவுள்ளன. 33 பிரிவுகளின் கீழ் இந்த போட்டிகள் நடைபெறுவதுடன், சர்வதேச வீரர்களுக்கான பிரிவும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.



ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினருக்கான உரையை நிகழ்த்திய ஆளுநர் அவர்கள்,

"உலகில் எந்த நாட்டில் வசிக்கின்ற போதிலும், சொந்த மண்ணை என்றும் மறவாதவர்களாக உலக தமிழ் பூப்பந்தாட்டப் பேரவையின் உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். தமது மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக அந்நியர்களின் மண்ணில் பல்வேறு சவால்களை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். அவ்வாறான உதவிகளில் ஒன்றே இந்த பூப்பந்தாட்டப் பேரவையின் முயற்சி ஆகும்.

ஒரு தனி மனித முயற்சியின் பயனாக இன்று உலகளாவிய ரீதியில் இந்த பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை பாராட்டிற்கு உரியதே. இந்த பேரவையின் ஸ்தாபகருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பில், வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் கூறிக்கொள்கின்றேன்.





நல்லவற்றை ஏற்று, அவற்றை பாராட்டி கௌரவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். அதனை அனைவரும் கற்றுக் கொள்ளவும் வேண்டும்.

இளைய சமூகத்திற்கும் அதனை கற்றுக்கொடுக்க வேண்டும். விளையாட்டை உடல் ரீதியான பயிற்சியாக மாத்திரம் அன்றி, உள ரீதியான பக்குவத்தை ஏற்படுத்தும் விடயமாக அதனை கருத வேண்டும். அத்துடன் தாய்நாட்டிற்காக உதவிகளை புரியும் புலம்பெயர் உறவுகளுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்" எனதெரிவித்தார்.

# "சீனாவின் நிதி உதவியை விவசாயிகள், உற்பத்தியாளர்கள் ஆகியோரை ஊக்குவிக்க அரசு பயன்படுத்தவில்லை" மீனவர் அமைப்பு குற்றச்சாட்டு

- நடராசா லோகதயாளன்

சினாவின் 500 மில்லியன் ரூபா உதவி எனக் கத்துபவர்கள் அந்த 500 மில்லியனையும் எமது நாட்டிற்குள் பணமாக கொண்டு வந்து எமது விவசாயிகள், எமது உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து இங்கே அரசி கொள்வனவு செய்து வழங்கியிருந்தால் அனைவரும் மகிழ்ந்திருப்போம் என கடற்றொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த அ.அன்னராசா தெரிவித்தார்.

கறுப்பு ஜீலை நிகழ்வின் 41வது ஆண்டு நினைவு கூறல் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு உரையாற்றினர்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நீதி அமைச்சர் இந்த நாட்டில் இடம்பெற்ற கறுப்பு ஜீலைக்கு வருத்தம் தெரிவிக்கின்றார். வருத்தம் வேண்டாம். நீதி அமைச்சரே எமக்கு நீதி வேண்டும்.

1983 இல் நடந்த சம்பவங்கள் உள்ளது. இவற்றிற்கும் இந்த நாட்டில் இன்றுவரை நீதி இல்லை. இதற்கு அப்பால், 2009 இல் உயிரோடு கையில் கொடுத்தவர்களிற்கும் நீதி இல்லை, அழிக்கப்பட்டதற்கும் நீதி இல்லை அவ்வாறானால் இவற்றிற்கு என்னதான் தீர்வு.

இன்று நாம் சத்தம் இன்றி, யுத்தம் இன்று அழிக்கப்படுகின்றோம்.

வாழ்விற்கும், போரிற்கும் பெரும் பங்காற்றிய கடல் வளம் இன்று திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது.

கடலில் அன்னியச் செலவானி என்னும் மாயை உருவாக்கி அபகரிக்கப்படுகின்றது.

சினாவின் உதவியை 500 மில்லியன் ரூபா உதவி எனக் கத்துபவர்கள் அந்த 500 மில்லியனையும் பணமாக கொண்டு வந்து எமது விவசாயிகள், எமது உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து இங்கே அரசி கொள்வனவு செய்து வழங்கியிருந்தால் மகிழ்ந்திருப்போம்.

அதை விடுத்து அந்நியச் செலவானி என வெளிநாடுகளிற்காகவும் பல தேசியக் கம்பனிகளிற்காகவும் எமது கடல் வளம் திட்டமிட்டு சத்தமின்றி யுத்தமின்றி அழிக்கப்படுகின்றது. இதன் மூலம் அரசும் எமது இருப்பை கேள்விக் குறியாக்கும்போது எம்மவர்களும் அதற்கு உடந்தையாக உள்ளனர்.

இலங்கையிலேயே சட்டவிரோதமான தொழிலை அதிகமாக செய்யும் மாகாணமாக வடக்கு கிழக்கு மாகாணமே உள்ளது என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையின் மலையகத் தமிழ் சமூகத்தை தேசிய இனமாக அங்கீகாரம்!

இலங்கையில் கால்பதித்து 200 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழர்களை தனி தேசிய இனமாக அங்கீகரிக்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.





இலங்கையின் சுதந்திரமான மற்றும் சமமான குடிமக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என ஒரு வருடத்திற்கு முன்னர் நடத்தப்பட்ட நடைபயணத்தின் பத்துக்கும் மேற்பட்ட ஆரம்பக் கோரிக்கைகளில் இரண்டிற்கு சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையக தமிழ் சமூகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது தொடர்பாக, தாம் விடுத்த கோரிக்கையை, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏற்றுக்கொண்டுள்ளதாக மண்புமிகு மலையக சிவில் சமூக கூட்டிணைவின் ஏற்பாட்டாளர் அந்தனி ஜேசுதாசன் தெரிவிக்கின்றார்.

"மாண்புமிகு மலையகம் நடை பயணத்தில் நாம் 11 கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம்.

அவற்றில் மூன்று கோரிக்கைகளில் இரண்டு நிறைவேறியுள்ளதாக குறிப்பிட முடியும். மலையக மக்களை தேசிய இனமாக ஏற்றுக்கொண்டு மலையகத் தமிழர்கள் / மக்கள் என பொதுவான எல்லா இடங்களிலும் குறிப்பிட வேண்டுமென்ற கோரிக்கை விடுத்திருந்தோம், இது வெற்றியளித்துள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்பின்போது மலையகத் தமிழர்கள் எனக் குறிப்பிட வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென கோரியிருந்தோம். ஆகவே இந்தியத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்கள் எனக் குறிப்பிடும் வாய்ப்பு கிடைத்துள்ளது."

இரண்டு நூற்றாண்டுகளாக நாட்டின் பொருளாதாரத்தில் மாபெரும் சக்தியாக விளங்கும் மலையகம் வாழ் தமிழ் மக்களை, இலங்கையின் சுதந்திரமான மற்றும் சமமான குடிமக்களாக ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தி 2023ஆம் ஆண்டு தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை பதினைந்து நாட்கள் நடைபயணம் இடம்பெற்றதின், ஓராண்டு நிறைவை முன்னிட்டு 2024ஆம் ஆண்டு ஜூலை 28ஆம் திகதி தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு அருகில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பலர் பங்கேற்ற நினைவேந்தலில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தனி ஜேசுதாசன், "மலையக மக்களுக்கு முகவரி வழங்குவது தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் தனித்துவமானது," எனக் குறிப்பிட்டார்.

"மலையக மக்களுக்கு தனித்தனி வீட்டு முகவரியை வழங்குவது குறித்து நீதிமன்றத்தின் தீர்ப்பும் இதில் குறிப்பிடத்தக்க விடயம். மலையக மக்களுக்கு காணியுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் பொது வெளியிலும் சாதகமான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன."

2024 பெப்ரவரி 15ஆம் திகதி தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 338 தனிநபர்கள் மற்றும் 60 அமைப்புகளின் பெயர்களுடன் "மலையக மக்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் தொடர்பாக" என்ற தலைப்பில் எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறிக்கைகள், அரசாங்க நியமனங்கள் மற்றும் அமைச்சரவை முடிவுகளில் கூட மலையகத் தமிழர் என்ற அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இத்தகைய பின்னணியில், இலங்கையில் அவர்களுக்கென ஒரு தனித்துவ அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில், P8 இனம் தொடர்பான பகுதியில் "மலையகத் தமிழர்கள்" என அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குமாறு கோரி அதே சமூகத்தை சேர்ந்தவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு கீழ் காணப்படும் வகையில் நாங்களும் எங்கள் முழு ஆதரவையும் தெரிவிக்கின்றோம்." என மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஆவணங்களைத் தயாரிப்பதில், மலையகத் தமிழ் மக்களை, இந்தியத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்கள் என குறிப்பிட மக்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஒப்புக்கொண்டதாக மண்புமிகு மலையக சிவில் சமூக கூட்டிணைவின் ஏற்பாட்டாளர் அந்தனி ஜேசுதாசன் தெரிவிக்கின்றார்.

அஞ்சல் முகவரி

மாவத்தகம மூவன்கந்த தோட்டத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கான தபால் முகவரியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கான தபால் முகவரிகளை வழங்குவதற்கு அரசிடம் உத்தரவிடுமாறு கோரி மாவத்தகம மூவன்கந்த தோட்டத்தைச் சேர்ந்த ஜீவரத்தினம் சுரேஷ்குமார் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா இந்த விடயத்தை நீதிமன்றில் தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி லக்சான் டயஸ், நாடளாவிய ரீதியில் வாழும் முழு தோட்ட சமூகத்தினருக்கும் தபால் முகவரிகளை வழங்குவதே தமது கட்சிக்காரர் இந்த மனுவை சமர்ப்பித்ததன் நோக்கம் என நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதற்கு கணிசமான கால அவகாசம் தேவைப்படலாம் என்பதை தானும் ஏற்றுக்கொள்வதாக சட்டத்தரணி மேலும் தெரிவித்திருந்தார்.

15 நாட்கள் நடைபயணம்

28 ஜூலை 2023 தலைமன்னாரில் விசேட ஆரம்ப நிகழ்வை நடத்திய மலையகத் தமிழர்கள் மற்றும் அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் தரப்பினர், இலங்கையின் சுதந்திரமான மற்றும் சமமான குடிமக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி 11 கோரிக்கைகளை முன்வைத்து, ஜூலை 29ஆம் திகதி காலை தலைமன்னாரில் இருந்து சுமார் 300 கிலோமீற்றர் தூர நடைபயணத்தை மேற்கொண்டு 12 ஒகஸ்ட் 2023 அன்று மாத்தளையில் அதனை நிறைவு செய்தனர்.

இந்த நடைபயணம், 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மக்களின் முன்னோர்கள் இந்தியாவின் தனு'கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு வந்து பின்னர், பல சிரமங்களுக்கு மத்தியில் நடை பயணமாகவே மாத்தளையை வந்தடைந்த அதே பாதையை தெரிவு செய்து, அதற்கு "வேர்களை மீட்டு உரிமை வென்றிட" என பெயரிட்டது.

இந்த நடைபயணத்தின் நோக்கம், மலையகத் தமிழ் சமூகத்தின் வரலாறு, போராட்டங்கள், சாதனைகள், அவர்களின் பங்களிப்பு, தற்போதைய சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் மற்றும் அபிலாஷைகள் பற்றிய அடிப்படை புரிதலை சிங்கள, இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பிற சகோதர மக்களிடையே ஏற்படுத்துவதாகும்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம், சிவில் அமைப்புகள் மற்றும் மலையக சமூகம்சார் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய "மாண்புமிகு மலையக சிவில் சமூக கூட்டிணைவு" இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

இலங்கையில் மிகப் பெரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்கள் மன்னார் மற்றும் மாத்தளை என்பது குறிப்பிடத்தக்கது.

11 கோரிக்கைகள்







1. வரலாறு, போராட்டம் மற்றும் பங்களிப்பினை ஏற்று அங்கீகரித்தல்.
2. ஏனைய பிரதான சமூகங்களுக்கு இணையான ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கொண்ட, சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் ஒரு பகுதி மக்களாக அங்கீகாரம்.
3. தேசிய சராசரிகளுடன் சமநிலையை எட்டுவதற்காக விசேடமாக இச் சமூகத்தை இலக்கு வைத்து விசேட செயற்பாடுகளை செயற்படுத்தி கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான உறுதியான நடவடிக்கை.
4. வாழ்விற்கான ஓர் ஊதியம், கண்ணியமான வேலை, சட்டப்பாதுகாப்பு மற்றும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சமமான ஊதியம்.
5. தொழிலாளர்களிலிருந்து சிறு நில உடமையாளர்களாக மாறும் பொருட்டு வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கான பாதுகாப்பான உரிமைக்காலத்துடனான காணி உரிமை.
6. தமிழ் மொழிக்கு சமமான பயன்பாடு மற்றும் சம அந்தஸ்து.
7. அரசாங்க சேவைகளை சமமான அணுகல்.
8. பெருந்தோட்டங்களிலுள்ள மனிதக் குடியேற்றங்களை புதிய கிராமங்களாக நிர்ணயம் செய்தல்.
9. வீட்டுப் பணியாளர்களின் முழுமையான பாதுகாப்பு.
10. மலையகக் கலாசாரத்தை பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்.
11. அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் ஆளுகையில் ஓர் அர்த்தமுள்ள வகிபங்கை வழங்கும் ஒப்புரவான மற்றும் உள்ளடங்கலான தேர்தல் முறைமை மற்றும் அதிகாரப் பகிர்வு.




கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆதரவில்

நூல் வெளியீட்டு விழா

அன்புடையீர்,

ஆகஸ்ட் 24, 2024 சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு பைரவி நுண்கலைக்கூடக் கல்லூரி மண்டபத்தில் (27 Casebridge Ct Unit 5, Scarborough, ON M1B 4Y4) 'பூவழகு கனிச்சுவை'(கவிதைத் தொகுதி) 'குறுக்கெழுத்துப் புதிர்ப் போட்டித் தொகுதி (பாகம் 11) ஆகிய எனது இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்து ஆதரவு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்

அன்புடன்

மார்க்கம் சந்திரன்

(சந்திரன் வேலாயுதபிள்ளை)


chandranvela07@gmail.com

416-844-7453

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனனத்தின் போதே அனாதையான இலங்கையின் அரசியலமைப்பு பேரவை இப்போது பெற்றோருடன் சச்சரவிடுகிறது?

**கிசாலி பின்ரோ ஜயவர்த்தன**




உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த [கடந்த] வாரம் வழங்கிய "இடைக்கால உத்தரவு" தொடர்பாக இலங்கை எதிர்பாராத விதமாக அரசியலமைப்பு நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. பல அடிப்படை உரிமைகள் தொடர்பான சவால்கள் தொடர்பாக இறுதி தீர்மானம் மேற்கொள்ளும் வரை, பொலிஸ் மா அதிபர் "அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை" பயன்படுத்துவதில் இருந்து கட்டுப்படுத்துவதற்கான இடைக்காலத்தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது. விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியும் அரசாங்கமும் (உருவகமாக) கடவுள் வழங்கிய இந்த அன்பளிப்பைப் பற்றி மகிழ்ச்சியுறுவதை கற்பனை செய்வது கடினம் அல்ல.

"வேறொரு தருணம், மற்றொரு இடம்?" என்று இருந்திருக்க முடியாது. பதில் பொலிஸ் மா அதிபரை நியமிப்பதில் இருந்து விலகிக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர் அறிவித்துள்ள நிலையில், தற்போது அவரது கைகள் பிணைக்கப்பட்டுள்ளன என்பதன் அடிப்படையில் அவரின் மறுப்பு நியாயமானது. ஒரு தேர்தல் வேட்பாளராக, அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதலுக்காக பொலிஸ் மா அதிபரை பரிந்துரைக்கும் எந்தவொரு முயற்சியும், "பதினான்கு நாட்களுக்கு மிகாமல்" (பிரிவு 41 (சி ) (2), விதி) செயல்படும் நியமனங்கள் அடுத்தடுத்த காலங்களுக்குச் செய்யப்படுவதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். "தேர்தல் மனுக்கள்" வாயிலாக.

அவர்களின் தரப்பில் தேர்தல் ஆர்வலர்கள், சிவில் சமூக வழக்கறிஞர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள், "பதில்" பொலிஸ் மா அதிபர் இல்லாததால், ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல், 2024 செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், அதில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று அறிவித்துள்ளனர். ஆனால் நிராகரிப்பு தொடருமானால், பிரச்சினை தீர்க்கப்படாது. உரிய நடவடிக்கையின் மூலம் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் வரை, தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தற்காப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

தற்போதைக்கு, நீதிமன்றத்தின் முற்றிலும் எதிர்பாராத "இடைக்கால உத்தரவுக்கு" இன்னொரு முறை, வேறொரு இடம் (1970களின் மெதுவான கதைக்கான பாடல் ) ஏன் அதிக வாய்ப்பாக இருந்திருக்க முடியாது என்று ஒரு விவேகமான "ஆணோ பெண்ணோ" யோசிக்கலாம். விரக்தியடைந்த குடிமகன் மீது இடி விழுந்த பழமொழி போல, சில மாதங்களில் தங்கள் வாக்கைப் பயன்படுத்துவதற்குப் போராடுகிறாரா? பரவாயில்லை, அந்த எரிச்சலூட்டும் கேள்வி இப்போது உறுதியாக நமக்குப் பின்னால் உள்ளது. இந்த உத்தரவால் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் களையப்பட வேண்டும்.

## அரசியலமைப்பு பேரவை யாருக்கு சொந்தமானது?

அந்த சூழலில், ஒரு பழக்கமான அச்சம் மீண்டும் தலை தூக்கியுள்ளது, அரசியலமைப்பு பேரவை (சிசி) நிறைவேற்றதிகாரத்தின் ஒரு பகுதியா அல்லது சட்டவாக்க மன்றத்தின் [பாராளுமன்றம்] ஒரு பகுதியா? அடிப்படை அரசியலமைப்பு தர்க்கம் இல்லாவிட்டாலும் அரசாங்கத்தின் நிலைப்பாடு அழகாக எளிமையாக உள்ளது. சாராம்சத்தில், வெள்ளிக்கிழமை சபையில் பிரதமர் உச்சரித்தபடி அரசியலமைப்புபேரவை பாராளு மன்றத்தின் ஒரு பகுதியாகும், பாராளுமன்றம் உச்சமானது மற்றும் பொலிஸ் மா அதிபர் தொடர்பான ஜனாதிபதியின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டபோது நீதிமன்றம் அரசியமைப்பு பேரவையை கேள்வி கேட்க முடியாது. ஆனால் அந்த வாதம், அரசியலமைப்பின் 17வது திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புபேரவையை உருவாக்கும்போது, சரத்து 126 மற்றும் அதன் பல உட்பிரிவுகளின் கீழ் அரசியலமைப்பு பேரவையின் முடிவுகள் அடிப்படை உரிமைகள் மனுக்களுக்கு உட்படுத்தப்படும் சூழ்நிலையில் சாத்தியமான எதிர்கால நடவடிக்கை குறித்து சிந்தித்தது என்ற உண்மையை புறக்கணிக்கிறது.

ஜனாதிபதிக்கு விதிவிலக்கு கொண்ட எமது சோகமான வரலாற்றைக் கருத்தில் கொண்டு அரசியலமைப்பு பேரவைக்கு அபாயகரமான நிலைமை வழங்கப்படக்கூடாது என்ற பொது ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கடுமையான எச்சரிக்கைகளுக்கு இது ஒரு இணக்கமான ஒப்புதலாகும். உண்மையில், நடைமுறையில் உள்ள ஒரு அரசியல் ஆட்சி (அல்லது அரசியமைப்பு பேரவை தானே) அரசியலமைப்பு பேரவை ஆனது ஒலிம்பஸில் உள்ள கடவுள்களைப் போன்று, எல்லா சவால்களிலிருந்தும் விடுபடக்கூடியது என்று கற்பனையாக வாதிடக்கூடிய ஒரு நாளின் சரியான எதிர்பார்ப்பில் அந்தக் சரத்து செருகப்பட்டது. அது நிச்சயமாக அப்படியல்ல, அந்த உண்மையை அரசாங்கம் சுருக்கமாக நினைவூட்ட வேண்டும்.

உண்மையில், 17 வது திருத்தத்திற்குப் பிறகு வந்த பல திருத்தங்களில் அதே எச்சரிக்கையுடன் இந்த அரசியலமைப்பு சரத்து பாதுகாக்கப்பட்டது. வேறுவிதமாக கூறுவது இப்போது அரசாங்கத்திற்கு இல்லை. ஒரு எரிச்சல் ஒருபுறம் இருக்க, ஜனாதிபதி மற்றும் அவரது பிரதமர் / அரசாங்கம் அவர்கள் வெளிப்படுத்தும் நிலைப்பாடுகள் குறித்து மனதில் தீர்மானிக்க வேண்டியதும் அவசியம். கடந்த வருட பிற்பகுதியில், உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் தொடர்பாக சபையில் சூடானவாதம் இடம்பெற்றது. அரசு வாதிடுகையில் (சில காரணங்களால்) உயர் நீதிமன்ற இடைக்கால உத்தரவால் தடைசெய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்திற்கு பரிந்துரைகளை அங்கீகரிக்கும் அதன் அதிகாரங்களை பிரயோகிப்பதிலிருந்தும் அரசியலமைப்பு பேரவையை தடைசெய்வதை உடனடி விடயமாக இடைக்காலத்தடையாக உயர் நீதிமன்றம் தடைசெய்திருந்தது.

## பிறக்கும்போதே அனாதையான அரசியலமைப்பு பேரவை

அப்போது அரசியலமைப்பு பேரவை "நிறைவேற்றதிகாரத்தின் ஒரு பகுதி" என்று ஜனாதிபதி அதிகளவு வலுவாக கூறியிருந்தார். இப்போது அரசியலமைப்பு பேரவைக்கு சிறப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்த, அரசியலமைப்பு பேரவை யானது சட்டவாக்க [பாராளு] மன்றத்தின் ஒரு பகுதி என்று அவரது பிரதமர் வாதிடுவதை நாம் காண்கிறோம். அதில் உள்ள வெளிப்படையான முரண்பாடுகளை நன்கு உணர்ந்து, ஜனாதிபதியே தனது 2023 நவம்பர் நிலைப்பாட்டை விளக்குவதற்காக பாராளுமன்றத்திற்குள் அனைத்து மேற்கொள்வதை மறுத்துவிட்டார், மாறாக, அவர் விவேகமான அமைதியை விரும்புவதாகத் தெரிகிறது.

முன்னதாக, புதியபொலி ஸ் மா அதிபர் (ஐஜிபி) மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிப்பதை அரசியலமைப்பு பேரவை "நாசப்படுத்துகிறது" என்று கூறிய அவர், அரசியலமைப்பு பேரவையின் செயற் பாட்டை "ஆராய்வதற்கு" ஒரு பாராளுமன்றத் தேர்வுக் குழுவை நியமிக்க முன்மொழிந்தார். அந்த அச்சுறுத்தலுக்குப் பின்வாங்கி, 17வது திருத்தத்தில் அரசியலமைப்பு பேரவையானது அரசியலமைப்பு ரீதியாக ஒரேமாதிரியான சிருஷ்டியாக கருதப்பட்டது என்பதை நான் இந்த பத்தியில் சுட்டிக் காட்டினேன் (பார்க்க, உரிமைகள் மீதான கவனம், "ஜனாதிபதி , பொதுமக்கள் நம்பிக்கை மற்றும் பாராளுமன்ற மூர்க்கத்தனம்," 2023 ஞாயிறு நவம்பர் 26).

நிச்சயமாக அரசியலமைப்பு பேரவை நிறைவேற்றதிகாரத்தின் செயற் பாட்டின் அம்சங்களைக் கொண்டுள்ளது, ஆனால் அதன் உறுப்பினர்கள், சட்டவாக்க [பாராளு] மன்றத்தின் பிரதிநிதிகள் மத்தியில் கணக்கிடப்படுகிறது. எனவே, இதுசில சட்டப் பிரிவுகளில் கருத்துக் கூறப்பட்டதற்கு மாறாக ஒரு "உறுப்பு" அல்லது இரண்டின் ஒரு பகுதி அல்ல, சிறந்த பெற்றோருக்கு வெகு தொலைவில் உள்ள நிறைவேற்று அதிகாரமும் சட்டவாக்க [பாராளு] மன்றமும், "நல்லாட்சி கைக்குழந்தையை" கவனமாக வளர்க்கும் என்ற நம்பிக்கையான ஏக்கத்தில் இருந்து "ஒரேமாதியான" அரசியலமைப்பு பேரவை 17வது திருத்தத்தின் கீழ் பிறந்தது.

## பதிலளிக்க முடியாத கேள்வியைக் கேட்டல்

அந்த எதிர்பார்ப்பு ஆரம்பத்திலிருந்தே பொய்த்துப் போனது, ஏனெனில் அரசியலமைப்பு பேரவை பிறக்கும்போதே கிட்டத்தட்ட அனாதையாக இருந்தது, பாராளுமன்றம் மன்றம் மற்றும் நிறைவேற்றதிகாரம் ஆகிய இரண்டும் ஒரு தரக் குறைவான அரசியல் கலாசாரத்திற்கு உண்மையாக இணங்கி அதன் செயற் பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கு ஒத்துழைத்தன. இரண்டரை தசாப்தங்களுக்குப் பிறகும், அரசியலமைப்பு பேரவையானது அதன் முன்னாள் சிவில் சமூகத்தின் பெரும்பான்மையானது சிறுபான்மையினராகக் குறைக்கப்பட்டு, பத்தாவது உறுப்பினர் இன்னும் மேசைக்கு வந்து பரவலான பொதுமக்களின் பாராட்டைப் பெறாத நிலையில் அதன் நிழலாகவே உள்ளது.

இதற்கிடையில், பெற்றோர்கள் இருவரும், அரசியல் அதிகாரப் போராட்டங்களை நிலைநிறுத்துவதற்காக, அரசியலமைப்பு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக அல்லாமல், தங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் போது, அந்த நோயுற்ற சிசுவை தனது சொந்தக் குழந்தை என்று கூறுகின்றனர். எனவே பிரிவின் இரு தரப்பிலும் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் "பகுதியா" அல்லது சட்டவாக்க [பாராளு] மன்றத்தின் "பகுதியா" என்று கேட்கும்போது, அதுவே பதிலளிக்க முடியாத கேள்வியின் வரையறையாகும். எவ்வாறாயினும்,அரசியலமைப்பு பேரவைக்கு அரசாங்கம் தடையற்ற சலுகைகளை வழங்குவது தெளிவான சட்ட முரண்பாடுகளை முழுமையாக கொண்டது என்பது தெளிவாகிறது.

இந்த [கடந்த வார] நீதிமன்றத்தின் உத்தரவு, "ஒரு வலுவானமுதற் பிரதிமையிலேயே வழக்கு" நிறுவப்பட்டுள்ளது என்று நீதிபதிகள் குழாம் மதிப்பிட்டதை அடுத்து வந்தது. இது (பொலிஸ் மா அதிபர்) நியமனம் அரசியலமைப்பின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு முரணானது. இதன் விளைவாக, "தடை" உத்தரவு, விண்ணப்பங்களின் இறுதித் தீர்மானம் வரும் வரை, அடுத்த விசாரணை திகதியான 11 நவம்பர் 2024 ஆனது வாக்கெடுப்பு திகதியை அதாவது 21 செப்டம்பர் 21ஐ அன்று கடந்து செல்லும் வரை "இடைக்கால" நடவடிக்கையாக இருந்தது.

## நிச்சயமற்ற தன்மை நிறைந்த கருத்துக்கணிப்பு

ஜனாதிபதி ஒரு பதில் பொலி ஸ் மா அதிபரை நியமிப்பதைக் குறிப்பிடும் போது நீதிமன்றம் சாத்தியப்பாட்டை வெளிப்படுத்தும் "மே" [May] என்ற வார்த்தையைப் பயன்படுத்தியமையும் அரசாங்கத்தால் அதற்குச் சாதகமாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஒருவேளை அதன் அமைச்சர்கள் (வழக்கறிஞர்களும்) அடிப்படை விளக்கக் கோட்பாடுகளுடன் தங்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம், அங்கு நிறைவேற்றதிகாரம் உட்பட ஒரு அதிகாரத்தின் மீது கடமை விதிக்கப்படும்போது சாத்தியபாடை வெளிப்படுத்தும் "மே" என்ற சொல் தேவையான வலுவுடன் வழங்கப்படுகிறது.

விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியும் பூமொட்டு சபை ஆதிக்கம் செலுத்தும் எண்ணற்ற வழிகள் உள்ளன (அவர்கள் ஒரு தேர்தலை விரும்புவது போல் விவிலியக் கொள்ளை நோய் தம்மீது வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்), இந்த களத்தை பயன்படுத்தி தேர்தல் செயல்முறையைத் தடுக்கலாம். அதன் விளைவாக "தேர்தல் மனுக்களுக்கு" வழிவகுக்கும் பிற சிக்கல்கள், தேர்தலின் செல்லுபடியாகும் தன்மையில் போட்டியிடுவதும் ஏற்படலாம்.

எந்த அளவீட்டிலும் வெகு தொலைவில் இல்லாத அல்லது அனுமானமாக இல்லாத இத்தகைய நிகழ்வுகள், காலம்தாழ்த்தி விவாதத்திற்கு எழாது என்று நம்பலாம்.

நன்றி - சண்டே டைம்ஸ்

# தமிழ் பொது வேட்பாளர் வெல்வாரா? வெல்ல மாட்டாரா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால் அவருக்கு அதிகப்படியான வாக்குகள் கிடைக்குமா? அவர் வெல்லாவிட்டால் என்ன நடக்கும்? அது தமிழ் மக்களின் ஆகப்பிந்திய தோல்விகரமான ஒரு மக்கள் ஆணையாக வெளியில் காட்டப்படாதா? தமிழ் மக்கள் தங்களை ஐக்கியப்படுத்தும் கோரிக்கைகளை தோற்கடித்து விட்டார்கள் என்று எடுத்துக் கொள்ளப்பட மாட்டாதா? என்று ஓர் அரசியல் கட்சியின் ஆதரவா-ளர் என்னிடம் கேட்டார்.

அவரிடம் நான் திரும்பி கேட்டேன் "நீங்கள் ஓர் அரசியல்வாதி. உள்ளூராட்சி சபையில் அல்லது மாகாண சபையில் அல்லது நாடாளுமன்றத்தில் போட்டியிடும் பொழுது உங்களுக்கு அந்த சந்தேகம் வருவது இல்லையா? இந்த தேர்தலில் நான் வெல்வேனா? நான் கட்டிய கட்டுப்பனம் எனக்கு கிடைக்குமா? எனது குடும்பம் உறவினர்கள் நண்பர்களாவது எனக்கு வாக்களிப்பார்களா? என்று நீங்கள் பயப்படுவது இல்லையா?"

அவர் சொன்னார் "பயம் இருக்கும். ஆனால் வெல்ல வேண்டும் என்ற உத்வேகம் இருக்கும். அதற்காக நான் உழைப்பேன். அதற்காக என்னால் முடிந்த அளவுக்கு நான் உழைப்பேன். என்னிடம் இருப்பவை அனைத்தையும் செலவழித்து நான் உழைப்பேன்" என்று.

"அவ்வாறான தேர்தல்களில் நீங்கள் அல்லது உங்களுக்கு வேண்டிய ஒருவர் போட்டியிடும் பொழுது வெற்றி பெற்றே தீர வேண்டும் என்று நிச்சயித்து உழைக்க முடிந்த உங்களால் ஏன் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரின் விடையத்தில் அவ்வாறு உழைக்க முடியாது? அதற்காக வேறு யாராவது உழைக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அது உங்களுடைய அரசியல் அல்லவென்று கருதுகிறீர்களா?" என்று கேட்டேன்.

அவர் சொன்னார்..." இது ஏனைய தேர்தல்களை போன்றது அல்ல. ஏனைய தேரதல்களில் கட்சி வாக்குகள் கிடைக்கும். வேட்பாளரின் தனிப்பட்ட செல்வாக்கு, வாக்குகளைக் கொண்டு வரும். அது போன்ற பல காரணங்கள் அங்கே வாக்குத் திரட்ட உதவும். ஆனால் தமிழ் பொது வேட்பாளரின் விடையத்தில் எப்படி வாக்கைத் திரட்டுவது?" என்று கேட்டார்.

நான் திரும்பக் கேட்டேன் "தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுவது தமிழ் பொது நிலைப்பாடு. தமிழ் பொது நிலைப்பாடு எனப்படுவது தமிழ் ஐக்கியம். தமிழ் ஐக்கியந்தான் தமிழ்த் தேசியம். தமிழ் மக்கள் கொள்கைக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று கருதுகிறீர்களா? என்று. இந்த கேள்வியை அதன் நடைமுறை அர்த்தத்தில் மறுவளமாக கேட்கலாம். தமிழ் மக்களை வாக்காளர்களாக, ஆதரவாளர்களாக, பிரித்து வைத்திருப்பது யார்? கட்சிகள் தானே? எனவே கட்சிகள் ஒன்றாக நின்று தமிழ் மக்களை ஒன்றாக வாருங்கள் என்று அழைத்தால் தமிழ் மக்கள் வராமலா விடப் போகிறார்?

இந்த கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. பொது வேட்பாளர் வெல்ல மாட்டார் என்ற ஐயத்தையும் பொது வேட்பாளர் வெல்லாவிட்டால் அது பெரிய நாசமாக முடியும் என்ற அச்சத்தையும் அதிகமாக வெளிப்படுத்தும் பலரும் ஏதோ ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் அல்லது அந்த கட்சியின் தீவிரமான செயற்பாட்டாளர்கள் தான். இந்தக் கேள்வி எங்கிருந்து வருகிறது?

எங்கிருந்து வருகிறது என்றால் தமிழ்த் தேசிய அரசியலின் தோல்விகரமான வாக்குத் திரட்டும் பாரம்பரியத்திலிருந்து வருகிறது.

இதுவரை காலமும் வாக்குத் திரட்டிய பெரும்பாலானவர்கள் அந்த வாக்குகளை தங்களுக்காகத் திரட்டினார்கள். அல்லது தங்கள் தங்கள் கட்சிகளுக்காக திரட்டினார்கள். தேர்தலில் வெற்றி பெற்றால் அந்த வெற்றியின் விளைவுகள் அல்லது பலன்கள் ஆதாயங்கள் ஒரு தனி நபருக்கோ அல்லது கட்சிக்கோ கிடைக்கும் என்று நம்பித்தான் உழைத்தார்கள். இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் அங்கே ஒரு சுயநலம் இருந்தது. தனிப்பட்ட வேட்பாளரின் சுயநலம் அல்லது ஒரு கட்சியின் சுயநலம். அது கொள்கைக்கு வாக்குத் திரட்டுவதல்ல.

ஆனால் தமிழ் பொது வேட்பாளருக்குள் அது கிடையாது. ஏனென்றால் தமிழ் பொது வேட்பாளர் என்பது ஒரு பொது நிலைப்பாட்டை நோக்கி தமிழ் வாக்குகளைத் திரட்டுவது. ஒரு பொதுநலத்துக்காக வாக்கு திரட்டுவது. கொள்கைக்கு வாக்குத் திரட்டுவது. அது சுயநலத்தோடு வாக்குகளைத் திரட்டுவதில் இருந்து வேறானது. இதுதான் பிரச்சனை. இதுவரை காலமும் தன்னை மையப்படுத்தி அல்லது தனது கட்சியை மையப்படுத்தி வாக்குகளை திரட்டிய ஓர் அரசியல் போக்கில் இருந்து வேறுபட்டு செயல்பட வேண்டியிருப்பது என்பது. கொள்கைக்கு வாக்குத் திரட்டுவது.

தேசத்துக்காக; தமிழ் மக்களை ஒரு பெரிய மக்கள் கூட்டமாக கூட்டிக்கட்டுவது என்ற கொள்கைக்காக வாக்குகளைத் திரட்ட வேண்டி வரும்பொழுது சந்தேகம் ஏற்படுகிறது, நிச்சயமின்மைகள் கலந்த பயம் ஏற்படுகின்றது. ஏனென்றால் தேசத்துக்காக, ஒரு பொது நிலைப்பாட்டுக்காக வாக்குத் திரட்டும் போக்கு எனப்படுவது இப்பொழுது குறைந்துவிட்டது. அதன் விளைவுதான் தமிழ் பொது வேட்பாளர் வெல்வாரா என்ற சந்தேகம்.

எல்லா தேர்தல்களிலும், போட்டியிடும் வேட்பாளர்களைப் பொறுத்தவரை இந்த சந்தேகம் இருக்கும். தேர்தல்களில் மட்டுமல்ல, எந்தவோர் அரசியல் நடவடிக்கையிலும் வெற்றி தோல்வி இரண்டையும் எதிர்பார்த்துத்தான் இறங்கலாம். வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இங்கு முக்கியம். தோற்றுப் போவோம் என்று பயந்து தன்னம்பிக்கை இழப்பது அரசியல் ஒழுக்கம் அல்ல.

சில மாதங்களுக்கு முன்பு தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக ஒரு கட்சி முக்கியஸ்தரோடு கதைத்தேன். அவர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு மிதவாத அரசியலுக்கு வந்தவர். அவர் என்னிடம் கேட்டார் "இந்த விடயம் வெற்றி அளிக்குமா? அவ்வளவு தொகையான வாக்குகளைத் திரட்ட நம்மால் முடியுமா?" என்று.

அவரிடம் நான் திரும்ப கேட்டேன் "முன்பு நீங்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது ஒரு தாக்குதலுக்குச் செல்லும்போது இதில் நான் தோற்றுவிட்டால் என்று பயந்து பின்வாங்குவீர்களா? அல்லது வெற்றி நிச்சயம் என்று மனதை திடப்படுத்திக் கொண்டு அந்த தாக்குதலுக்கு போவீர்களா?" என்று. அவர் பதில் சொல்லவில்லை.

மிதவாத அரசியல் என்றாலும் சரி ஆயுதப் போராட்ட அரசியல் என்றாலும் சரி ரிஸ்க் எடுக்காமல் வெற்றிகள் இல்லை. வழமையான ஒரு போக்கை மாற்றி ஒரு புதிய போக்கை உருவாக்க முயற்சித்தால் அங்கே ரிஸ்க் எடுக்க வேண்டியிருக்கும். கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் அரசியலானது நபர்களை, கட்சிகளை மையப்படுத்திய ஒன்றாகவே காணப்படுகின்றது. அதன் விளைவாகத்தான் தமிழ் மக்கள் வாக்காளர்களாக சிதறடிக்கப்பட்டார்கள். நபர்களை நலன்களை மையப்படுத்திய வாக்கு வேட்டை என்பது தமிழ் தேசிய அரசியல் கிடையாது. எந்த ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் தேசியவாத கட்சி அரசியல் எனப்படுவது மக்களைத் திரட்டுவதுதான். ஏனென்றால் தேசம் என்பது ஆகப்பெரிய மக்கள் கூட்டமாகும். எனவே மக்களை ஆகப் பெரிய கூட்டமாக கூட்டிக் கட்டுவதுதான் தேசியவாத அரசியலில். ஆனால் தமிழ்த் தேசிய அரசியலில் அது நடக்கவில்லை. கட்சி மைய அரசியலும் தனிநபர் மைய அரசியலும் மக்களைச் சிதறடித்து விட்டன. சிதறடிக்கப்பட்ட மக்களை தென்னிலங்கை கட்சிகள் மேலும் சிதறடிக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலின்போது தென்னிலங்கை மையக் கட்சிகள் பரிசுகளை வழங்கின; வாக்குறுதிகளை வழங்கின; போராட்ட கால நினைவுகளைத் தூண்டும் விதத்தில் அந்த காலகட்டத்தின் பாடல்களை பயன்படுத்தின. அவ்வாறு தமிழ் மக்களை கொள்கையல்லாத வேறு விடையங்களை நோக்கித் திரட்டலாம்; தமது வாக்கு வங்கியைப் பாதுகாக்கலாம் என்று தென்னிலங்கை மையக் கட்சிகள் கருதுமளவுக்கு தமிழ் மக்கள் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை.

தமிழ்த் தேசிய அரசியலில் கொள்கைக்காக வாக்களிக்கும் போக்கு பலவீனமடைந்து விட்டது. இப்பொழுது தனி நபர்களுக்கும் கட்சிகளுக்கும் நலன்களுக்குமாக வாக்களிக்கும் அரசியல் பாரம்பரியந்தான் மேலோங்கியிருக்கிறது. எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்குகள் கிடைக்காது என்று வன்னியைச் சேர்ந்த ஓர் அரசியல் செயற்பாட்டாளர் என்னைப் பல மாதங்களுக்கு முன்பு எச்சரித்தார்.

கொள்கைகளுக்காக வாக்களிக்கும் அரசியல் பாரம்பரியம் இல்லாமல் போகின்றது என்று சொன்னால் தமிழ்த் தேசிய வாக்கு வங்கி மெலிகிறது என்று பொருள். ஏனென்றால் தமிழ்த் தேசிய வாக்கு வந்து என்பது ஒரு கூட்டு மனோ-ாநிலைதான். தமிழ் மக்கள் மத்தியில் கடந்த ஒரு நூற்றாண்டு முழுவதிலும் தோன்றிய வாக்களிப்பு அலைகள் யாவும் இனமான வாக்களிப்பு அலை-லகள்; அல்லது தமிழ்த் தேசிய வாக்களிப்பு அலைகள்தான். தமிழ் மக்கள் தேர்தல்களில் பெரிய வெற்றிகளைப் பெற்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு இனமான அல்லது தமிழ்த் தேசிய வாக்களிப்பு அலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. எனவே தமிழ் மக்கள் மத்தியில் இதுவரை காலமும் தோன்றிய எல்லா வாக்களிப்பு அலைகளும் தமிழ்த் தேசிய வாக்களிப்பு அலைகள்தான். அதை மறுவளமாகச் சொன்னால், தமிழ்க் கூட்டு மனோநிலை என்பது தமிழ்த் தேசிய மனோ நிலைதான். அக்கூட்டு மனோநிலையை ஆக்கக்கூடியபட்சம் ஒன்றிணைத்து ஓர் அரசியல் ஆக்கசக்தியாக மாற்றுவதுதான் தமிழ்ப் பொது வேட்பாளரின் நோக்கம். வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கூட்டும் மனநிலையைத் திரட்டிக் கட்டத் தவறினால் அடுத்தடுத்து நடக்கக்கூடிய நாடாளுமன்ற, மாகாண, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அது மேலும் சிதறடிக்கப்படும். எனவே தமிழ் மக்களின் கூட்டு மனோ நிலையைப் பலப்படுத்தி தமிழ் மக்களை கொள்கைகளுக்காக வாக்களிக்குமாறு ஒன்றுபடுத்துவதற்கு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை விட வேறு தீர்க்கதரிசனம் மிக்க தெரிவுகள் உண்டா?

# கோழைத்தனமான தாக்குதல்களால் பாலஸ்தீனத்தின் விடுதலை பாதையினை முடக்க முடியாது

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



## இஸ்மாயில் ஹனியா படுகொலை மனித உரிமை மீறலாகும் எனவும் ரிஷாட் பதியுதீன் கண்டனம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (01-08-2024)

தமது மண்ணுக்கான உரிமை மீட்பு போராட்டத்தில் நிலைத்து நின்ற பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அரசியல் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியா படு-கொலை சம்பவமானது மிலேச்ச னத்தின் வெறியர்களின் முகங்களை காட்டுகிறது. இப் படுகொலைகளை மனிதத்துவம் கொண்ட எவராலும் அங்கீகரிக்க முடியாது.

ஆக்கிரமிப்பினை மட்டும் கொண்டு ஹமாஸ் மக்களையும், சிறுவர்களையும், கர்ப்பிணி பெண்கள் மற்றும் முதியவர்கள் என பாராது கொடூரமான முறையில் கொன்றொழிக்கும் இஸ்ரேலின் இந்த செயலை நான் பிரதிநிதித்துவம் செய்யும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆனது வன்மையாக கண்டிக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், இலங்கை - பலஸ்தீன உறவு என்பது பல ஆண்டுகள் நெருக்கமானது, இந்த உறவானது எம்மில் இருந்து பிரிக்க முடியாத தொன்று என்பதால் தான் நாம் இழப்புக்களின் வேதனை-யை உணர்கின்றோம்.

பாலஸ்தீனத்தின் போராட்டம் என்பது உலகளாவிய வல்லரசுகள் கூட நியாயம் கண்டுள்ள நிலையில் இஸ்ரேல் தொடர்ந்து கட்டுக்கடங்காது,காட்டும ிராண்டித்தனமாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் அம்மக்களை மேலும் பல இழப்புக்களுக்குள் தள்ளிவருகின்றது.

அப்பட்டமான மனித உரிமை மீறல்களாக இந்த படுகொலை காணப்படுவதாகவும், எல்லை மீறும் இஸ்ரேலின் இந்த மோசமான மனித படுகெ-ாலையை நிறுத்த உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டுவதுடன், இஸ்ரேலின் இத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் அமைப்பின் தலைவர் மர்ஹூம் இஸ்மாயில் ஹனியாவின் மறைவுக்கு எமது கட்சி ஆழ்ந்த கவலையி-னை வெளிப்படுத்துகின்றது.

அதே போல் ஷஹீதுடைய அந்தஸ்தை எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா அவருக்கு வழங்க பிரார்த்தனை செய்கின்றேன்.



# 2024 ஜனாதிபதித் தேர்தலும் சில சுவாரஷ்யங்களும்

**" எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் பிரதமராக 7 தடவைகள் பதவிவகித்தவரும் தற்போது ஜனாதிபதியாக இருபவருமான ஒருவர் சுயேட்சையாக போட்டியிடும் தேர்தலாகவும் ஒரேகட்சியை சேர்ந்த மூவர் ஒருவரையொருவர் எதிர்த்து போட்டியிடும் தேர்தலாகவும் ஏற்கனவே தேர்தலில் தோல்விகண்ட 4 வேட்பாளர்கள் முக்கிய வேட்பாளர்களாக போட்டியிடும் தேர்தலாகவும் முதல் தடவையாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடவுள்ள தேர்தலாகவும் சில சுவாரஷ்யங்களைக் கொண்டுள்ளது"**

------------------------------------------------------------------ - கே. பாலா

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தேர்தல், இழுபறிகள், சர்ச்சைகள், சதிகள், நிறைந்ததாக மட்டுமன்றி சில சுவாரஷ்யங்கள் நிறைந்த தேர்தலாகவும் மாறிப்போயுள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சர்ச்சைகள், சதிகள் தொடர்பில் ஏற்கனவே பல தடவைகள் பார்த்தும் படித்ததும் விட்டதனால் இதில் இந்த தேர்தலில் உள்ள சில சுவாரஷ்யங்களை மட்டும் பார்ப்போம். அதனைப் பார்க்க வேண்டுமானால் முதலில் இலங்கையில் இதுவரையில் நடந்து முடிந்த 8 ஜனாதிபதித்தேர்தல்கள் தொடர்பில் மீள் பார்வை செலுத்த வேண்டும்.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம், கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளை தெரிவு செய்வதற்காக இதுவரை 8 ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்படி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான முதலாவது தேர்தல் 1982-10-20 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ஜே.ஆர். ஜெயவர்த்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து எச்.எஸ். ஆர்.பி. கொப்பேக்கடுவ, ஜே.வி.பி.யிலிருந்து ரோஹன விஜே வீர, அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து ஜீ.ஜீ. பொன்னம்பலம், லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து கலாநிதி கொல்வின் சில்வா, நவசமாசமாஜக்கட்சியிலிருந்து வாசுதேவ நாணயக்கார ஆகியோர் களமிறங்கினர்.

இதில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் கொப்பேக்கடுவவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் ஜெயவர்த்தன 34,50811 வாக்குகளை ப்பெற்று வெற்றியடைய, கொப்பேக்கடுவ 25,48439 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் ஜே.வி.பி. வேட்பாளரான ரோஹன விஜே வீர 2,73428 வாக்குகளையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளரான ஜீ.ஜீ. பொன்னம்பலம் 1,73934 வாக்குகளையும் பெற்றிருந்தனர். இந்த தேர்தலில் 52.91 வீதம் வாக்குகள் பதிவாகியிருந்தன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரண்டாவது தேர்தல் 1988-12-19 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ரணசிங்க பிரேமதாச, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க. சிங்கள மக்கள் கட்சியிலிருந்து அபேகுணசேகர ஒஸ்வின் ஆகியோர் களமிறங்கினர். இதில் ரணசிங்க பிரேமதாசவுக்கும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் ரணசிங்க பிரேமதாச 25,69199 வாக்குகளை ப்பெற்று வெற்றியடைய, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 22,89960 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 50.43 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான மூன்றாவது தேர்தல் 1994-11-09 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து காமினி திஸாநாயக்க, பொதுஜன முன்னணியிலிருந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாதுங்கா உள்ளிட்ட 6 வேட்பாளர்கள் களமிறங்கினர் தேர்தல் களத்தில் காமினி திஸாநாயக்க கொல்லப்படவே அவரின் மனைவியான வஜிர ஸ்ரீமதி போட்டியிட்டார். வஜிர ஸ்ரீமதிக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா 47,09205 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, வஜிர ஸ்ரீமதி 27,15705 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 62.28 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான நான்காவது தேர்தல் 1999-12-21 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன முன்னணியிலிருந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா, ஜே.வி.பி.யிலிருந்து நந்தன குணதிலக உள்ளிட்ட 13 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமரதுங்கா 43,12157 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, ரணில் விக்கிரமசிங்க 36,02748 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். ஜே.வி.பி.யிலிருந்து களமிறங்கிய நந்தன குணதிலக 3,44173 வாக்குகளைப்பெற்றிருந்தார் இதில் வாக்களிப்பு வீதம் 51.12 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஐந்தாவது தேர்தல் 2005-11-17 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து மஹிந்த ராஜபக்ச, ஐக்கியதேசிய முன்னணியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 13 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதில்மஹிந்த ராஜபக்சவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் மஹிந்த ராஜபக்ச 48,87152 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, ரணில் விக்கிரமசிங்க 47,0636 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 73.73 ஆகப்பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஆறாவது தேர்தல் 2010-01-26 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து மஹிந்த ராஜபக்ச, புதிய ஜனநாயகக்கட்சியிலிருந்து முன்னாள் இராணுவத்தளபதியான சரத் பொன்சேகா உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதில் மஹிந்த ராஜபக்சவுக்கும் சரத் பொன்சேகவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் மஹிந்த ராஜபக்ச 60,15934 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, சரத் பொன்சேகா 41,73185 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் சுயேட்சையாகபோட்டியிட்ட தமிழ் வேட்பாளரான எம்.கே. சிவாஜிலிங்கம் 9,662 வாக்குகளைப் பெற்றிருந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 74.50 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஏழாவது தேர்தல் 2015-01-08 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக புதிய ஜனநாயகக்கட்சியிலிருந்து மைத்ரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட 19 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதில் மைத்ரிபால சிறிசேனவுக்கும் மஹிந்த ராஜபக்சவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் மைத்ரிபால சிறிசேன 62,17162 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, மஹிந்த ராஜபக்ச 57,68090 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 81.52 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான எட்டாவது தேர்தல் 2019-11-16 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான கோத்தபாய ராஜபக்ச, புதிய ஜனநாயகக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியிலிருந்து அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட 34 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதில் கோத்தபாய ராஜபக்சவுக்கும் சஜித் பிரேமதசாவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் கோத்தபாய ராஜபக்ச 69,24255 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, சஜித் பிரேமதாச 55,64239 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து போட்டியிட்ட அநுரகுமர திசாநாயக்க 4,18553 வாக்குகளையும் சுயேச்சையாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான எம்.கே.சிவாஜிலிங்கம் 12,256 வாக்குகளையும் பெற்றனர். இதில் வாக்களிப்பு வீதம் 81.52 ஆகப் பதிவானது.

இவ்வாறு இதுவரையில் நடந்து முடிந்த 8 ஜனாதிபதித் தேர்தல்களில் தற்போதைய ஜனாதிபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான நான்காவது தேர்தலில் 1999-12-21 ஆம் திகதி போட்டியிட்டு பொதுஜன முன்னணியிலிருந்து போட்டியிட்ட சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் தோல்வியடைந்தார். அதன்பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஐந்தாவது தேர்தலில் 2005-11-17 ஆம் திகதி போட்டியிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்சவிடம் தோல்வியடைந்தார்.

எனினும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்ற கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக 2021 ஆம் ஆண்டில் வெடித்த மக்கள் போராட்டத்தினால் எந்தத்தேர்தலிலும் போட்டியிடாமலே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவாகி தற்போது மீண்டும் ஜனாதிபதியாக தேர்தலில் போட்டியிடுகின்றார். அதாவது இருதடவைகள் மக்களினால் நிராகரிக்கப்பட்டவர் மூன்றாவது முறையாக மக்கள் ஆணை கேட்டு இந்த தேர்தலில் களமிறங்கியுள்ளார். அதிலும் முதலில் ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதி வேட்பாளராகவும் இரண்டாவது தடவையாக ஐக்கியதேசிய முன்னணி வேட்பாளராகவும் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க இந்த முறை சுயேட்சை வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாச நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான எட்டாவது தேர்தலில் 2019-11-16 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுடன் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்த தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக களமிறங்கிய சஜித் பிரேமதாச, நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளராக களமிறங்குகின்றார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமாரதிசாநாயக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான எட்டாவது தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளராக 2019-11-16 ஆம் திகதி போட்டியிட்டு ஜனாதிபதி வேட்பாளர்களான கோத்தபாய, சஜித் பிரேமதாச, ஆகியோரிடம் தோல்வியடைந்தார். எதிர்வரும் தேர்தலில் அவர் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுடனும் சஜித் பிரேமதசாவுடனும் போட்டியிடுகின்றார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஆறாவது தேர்தலில் 2010-01-26 ஆம் திகதி புதிய ஜனநாயகக்கட்சி வேட்பாளராக களமிறங்கி ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வேட்பாளரான மஹிந்த ராஜபக்சவிடம் தோல்வியடைந்தார் .எதிர்வரும் தேர்தலில் இவர் ரணில், சஜித், அநுர ஆகியோரை எதிர்த்து போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 19 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கிற்கு வரும் ஜனாதிபதி வேட்பாளர்கள் "கறுப்பு ஜூலைக்கு மன்னிப்பேனும் கேட்கவில்லை"

நாற்பத்தொரு வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் ஆரம்பித்து நாடு முழுவதும் அரச ஆதரவுடன் இடம்பெற்ற கறுப்பு ஜூலையின்போது, வெலிக்கடை சிறைச்சாலையில் 55ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் கொல்லப்பட்டமைக்கு, இந்த நாட்களில் வடக்கிற்கு வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறைந்தபட்சம் "மன்னிப்பையேனும் கேட்கவில்லை" என தமிழ் அரசியல்வாதி ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார்.

"நாங்கள் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுக்கக்கூடிய நேரத்தில் கூட, தென்னிலங்கையில் இருந்து வேட்பாளர்களாக இங்கு வரக்கூடியவர்கள் நடந்துமுடிந்த இவ்வாறான படுகொலைகளுக்கு மன்னிப்புக் கேட்டிருக்கின்றார்களா என்றால் இல்லை. அல்லது எவராவது இவர்களுக்கு ஏதாவது நட்டஈடு அல்லது உதவிகளை வழங்கியிருக்கின்றார்கள என்றால் இல்லை."

1983 கறுப்பு ஜூலை படுகொலைளின்போது வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் 2000 ஆம் ஆண்டு பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் உள்ளிட்ட இலங்கையின் ஏனைய சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினவுகூரும் வகையில், "வெலிக்கடைசிறை படுகொலை தினத்தில்" (ஜூலை 25) மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் கொல்லப்பட்ட அனைத்து தமிழ் மக்களையும் இந்நாட்டு அரசாங்கங்கள் பயங்கரவாதிகளாகப் பார்ப்பதாகத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென மேலும் குறிப்பிட்டுள்ளார்.






"இந்த நாட்டில் கொல்லப்பட்ட அனைத்து தமிழ் மக்களையுமே இந்த நாட்டின் அரசு பயங்கரவாதிகளாகவே பார்த்தது. ஆகவே நாங்கள் ஆயிரக்கணக்கக்கான மக்களை இந்த போராட்டத்தில் இழந்திருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் இராணுவத்தினரால், கடற்படையினரால் மேலும் பல்வேறு தரப்பினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளோம். ஆகவே இந்த நிலையில், படுகொலையில் இருந்து தப்பிவந்த நாங்கள் படுகொலையானவர்களை நினைவுகூர்வது, தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் தமது உரிமைகளுக்காக போராடினார்கள் என்பதை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும்."

2024 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால், தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாகக் கொழும்பில் அறிவிப்பதற்கு முன்னதாக, ஜூலை 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய, நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ச, 41 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலைக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வட மாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைபீட பீடாதிபதி எஸ்.ரகுராம், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, உயிரிழந்தவர்களின் உறவினர்கள், விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர, 1983 கறுப்பு ஜூலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளை, டெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், ஜனநாயக போராளிகள் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதே தந்தை செல்வா அரங்கில் நினைவுகூறியது.



இதேவேளை, யாழ்ப்பாண வணிகர் கழகம் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து நடத்திய கறுப்பு ஜூலை நினைவேந்தலில் மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் கலந்துகொண்டனர்.

25 - 27 ஜூலை 1983

83 கறுப்பு ஜூலை படுகொலையின் போது வெலிக்கடையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த டெலோ அமைப்பின் தலைவர் உட்பட 54 தமிழ் அரசியல் கைதிகள், அவர்களைப் பாதுகாக்க அழைக்கப்பட்ட படைகள் மற்றும் சிறை அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் அவர்களது அறைகளிலேயே சிங்களக் கைதிகளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி, மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்பட்ட குட்டிமணி உள்ளிட்ட 35 பேரின் சடலங்கள் சிறைச்சாலை முற்றத்தில் உள்ள புத்தர் சிலைக்கு முன் குவிந்திருந்த நிலையில், சடலங்களுக்கு மத்தியில் உயிருடன் இருப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டனர்.

அதன்பின்னர், மீண்டும் ஜூலை 27 ஆம் திகதி, தமிழ்க் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த முதல் மாடியில் உள்ள இளைஞர் அறையை சிங்களக் கைதிகள் முற்றுகையிட்டதில், காந்திய இயக்கத் தலைவர் வைத்தியர் ராஜசுந்தரம் உட்பட 18 பேர் கொல்லப்பட்ட நிலையில், உயிருக்குப் போராடி உயிர் பிழைத்தவர்களில் தற்போதைய மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனாகொட மகேஸ்வரன் என்கிற தம்பிப்பிள்ளை மகேஸ்வரன், ஈரோஸ் அமைப்பின் அந்தோணிப்பிள்ளை அழகிரி, காந்தி இயக்கத்தைச் சேர்ந்த எஸ். டேவிட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எஸ். டேவிட் இந்த அனுபவத்தைப் பற்றி பிற்காலத்தில் எழுதியதோடு, அந்தோனிப்பிள்ளை அழகிரி வெலிக்கடையில் நடந்த மனிதாபிமானமற்ற தாக்குதல் இத்தாலியில் உள்ள அலிதாலியா விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தை கடத்திய குற்றத்திற்காக வெலிக்கடை சிறையில் இருந்த சேபால ஏகநாயக்க தலைமையில் இடம்பெற்றது என, ஜேடிஎஸ் (JDS) இணையதளத்திற்கு தெரிவித்திருந்தார்.

டெலோ தலைவர் குட்டிமணியை நாடாளுமன்ற உறுப்பினராக முன்னிறுத்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முயற்சித்த போதிலும், அவர் ஆயுள் தண்டனை அனுபவித்து வருவதால், அவரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க அப்போதைய சபாநாயகர் பாக்கீர் மார்க்கர் மறுத்திருந்தார்.

25 ஒக்டோபர் 2000 பிந்துனுவெவ

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பின்னர், பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 பேரில் 27 பேர், 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி அதிகாலை வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்டதோடு மேலும் 14ற்கும் மேற்பட்டோர் காயமடைந்த இந்த சம்பவத்தில் பொலிஸார் மற்றும் கிராம மக்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது.

பிந்துனுவெவ படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 41 பேரில் பண்டாரவளை மற்றும் தியத்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட 19 பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குவர். எஞ்சியவர்கள் பிந்துனுவெவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

ஜூலை 1, 2003 அன்று, நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட நான்கு குற்றவாளிகளையும், மே 17 2005 அன்று, மேல்முறையீட்டு நீதிமன்றம் விடுவிக்க உத்தரவிட்டது.

எவ்வாறெனினும் 27 கைதிகள் வெட்டி படுகொலை செய்யப்பட்ட மற்றும் 14ற்கும் மேற்பட்ட கைதிகள் காயமடைந்த, பிந்துனுவெவ படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்த மலையக தோட்டத் தொழிலாளர் இளைஞர்களுக்கு எதிரான வழக்கு, இன்னும் சாட்சிகள் தாக்கல் செய்யப்படாத நிலையில் இடம்பெற்று வருவதாக ஜேடிஎஸ் தெரிவிக்கின்றது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
| --- | --- |
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Head- |
| aches | |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# ஸ்ரீ அருள்மிகு கற்பகவிநாயகர் தேவஸ்தானம்- பிரம்ரன்







## ஸ்ரீ நாராயண பெருமாள் அலங்கார உற்சவம் 2024

ஸ்ரீநாராயணப் பெருமாளின் அலங்கார உற்சவம் இலங்கை பொன்னாலை ஸ்ரீவரதராஜ பெருமாள் பட்சமாக ஆவணி ரோகினி நன்னாளை தேர்த்திருவிழாவாக வைத்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி வரை நடைபெறும். 01ம் நாள் (11 -8 -2024 ) ஞாயிற்றுக்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பம் 05ம் நாள் (15-08-2024 ) வியாழக்கிழமை சப்பரத் திருவிழா, 06ம் நாள் (16-08- 2024 ) வெள்ளிக்கிழமை வரலக்ஷிமி பூஜை, 10ம் நாள் (20-08-2024 ) செவ்வாய்கிழமை மஞ்சத் திருவிழா 17ம் நாள் (27-08-2024) செவ்வாய்கிழமை காலை தேர்த்திருவிழா 18ம் நாள் (28-08-2024) புதன்கிழமை காலை தீர்தத்திருவிழாவோடு
ஸ்ரீ நாராயணப்பெருமாள் அலங்கார உற்சவம் பூர்த்தியாகும்.
இவ்வலங்கார திருவிழாக் காலங்களில்
சகல அடியார்களும் ஆலயத்திற்கு வருகை தந்து
காத்தருளும் கண்ணபிரானின்
நல்லருள் பெற்றுய்வீர்களாக.





## விநாயகர் சதுர்த்தி (ஆவணி சதுர்த்தி)

## 06-09-2024 (ஆவணி மாதம் 6ஆம் திகதி) வெள்ளிக்கிழமை

*காலை 09 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் பால்க்குட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூஜையும், மாலை மூலமூர்த்திக்கு விஷேட அலங்கார பூஜையையும் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு விஷேட சஸ்ரநாம அர்ச்சனையும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் திருக்காட்சியும் சிறப்பாக நடைபெறும்.*
*காலையில் நடைபெறுகின்ற சங்காபிஷேகத்தின் போது பால்குடம் எடுக்க இருக்கின்ற அடியார்கள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவினை மேற்கொள்ளவும்*

UNIT 01 200 ADVANCE BLVD
BRAMPTON ON L6T 4V4
905 458 9701 / 416 471 0255

*என்றும் இறை பணியில் நிற்கும்*
*கனகுக சிவத்தொண்டர்*
*திரு இரா விஜயநாதன்*

கனடிய செய்திகள்
Canadian News

# "இளம் இசையாசிரியையான ஆதிரை சிவபாலன் ரொசான் அவர்கள் பாரம்பரிய இசைக்குடும்பத்தின் பெருமைக்குரிய வாரிசாகத் திகழ்கின்றார்"

## இசைச் செல்வி அபினா சிற்றம்பலம் அவர்களின் வயலின் அரங்கேற்ற நிகழ்வில் தமிழ்நாட்டின் வயலின் வித்துவான் மூர்த்தி அவர்கள் புகழாரம்



"இன்றைய அரங்கேற்றச் செல்வி அபினா அவர்களின் அரங்கேற்றம் ஒரு முழு நீள வயலின் கச்சேரி போன்று எனக்கு இனித்தது. கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டையும் அதனைத் தொடர்ந்து வயலின் இசையையும் கற்றுத் தேர்ந்த அபினா அவர்கள் இந்த அற்புதமான இசைக்கருவியின் நுணுக்கங்களை சிறப்புற உணர்ந்து கற்று தனது குருவான ஸ்ரீமதி ஆதிரை சிவபாலன் ரொசான் அவர்களுக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார். இதற்கு காரணம் இளம் இசையாசிரியையான ஆதிரை சிவபாலன் ரொசான் அவர்கள் பாரம்பரிய இசைக்குடும்பத்தின் பெருமைக்குரிய வாரிசாகத் திகழ்கின்றார். அவரது பேரனார் இராசலிங்கம் மாஸ்டர் அவர்கள் இலங்கையில் ஒரு புகழ்பெற்ற இசை ஆசிரியராகவும் இலங்கை வானொலியின் வித்துவானாகவும் திகழ்ந்தவர்கள். அவரது தாயார் தனது தந்தையாரிடம் கர்நாடக இசையை முழுமையாகக் கற்று தேர்ந்த ஒரு குரு ஆவார். அத்துடன் அவரது தாய் மாமனாராகிய மிருதங்க வாருதி திரு. வாசுதேவன் இராஜலிங்கம் அவர்கள் கனடாவின் ஒரு மதிக்கப்பெறுகின்ற திறமையான மிருதங்க வித்துவானாகத் திகழ்கின்றார். இவர்கள் இங்கு ஒரு கர்நாடக சங்கீர பரம்பரையை உருவாக்க வல்லவர்கள். அவர்களின் மாணவியான அபினா அவர்கள் தனத சாமர்த்தியத்தால் இன்றை அரங்கேற்றத்தில் முத்திரை பதித்துள்ளார்".

இவ்வாறு கடந்த 27ம் திகதி சனிக்கிழமையன்று றிச்மண்ட்ஹில் நகரில் அமைந்துள்ள அழகிய விழா மண்டபத்தில் நடைபெற்ற இசைச் செல்வி அபினா சிற்றம்பலம் அவர்களின் வயலின் அரங்கேற்ற நிகழ்வில் தமிழ்நாட்டின் வயலின் வித்துவான் மூர்த்தி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு புகழாரம் சூட்டினார்.

மேற்படி வயலின் அரங்கேற்றத் திற்கு தொகுப்பாளராக திருமதி. ஜனன்சி ஜெயரட்ணராஜா சிறப்பாகவும் அழகிய முறையிலும் பணியாற்றினார். சிறப்பு விருந்தினராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் அழைக்கப்பெற்றிருந்தார்.

பக்கவாத்தியக் கலைஞராக மிருதங்க வித்துவான் வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களும், கடம் வாசிப்பில் ரமணன் இந்திரகுமார் அவர்களும், கஞ்சிராக் கலைஞராக ரமணன் கிருஸ்ணராஜக் குருக்கள் அவர்களும் தம்புராக் கலைஞராக செல்வி அமிரா முரளிதரனும் தங்கள் பங்களிப்பை வழங்கி அபினா சிற்றம்பலம் அவர்களின் வயலின் அரங்கேற்றத்தை மேலும் மேன்மையுறச் செய்தனர்.

ஆரம்ப உருப்படியான "வர்ணம்" என்பதோடு தனது இசை ஆளுமையை சபையோருக்கு சமர்ப்பிக்கும் வகையில் ஆரம்பமே சபையில் அமர்ந்திருந்தவர்களுக்கு ஒரு உற்சாகத்தைத் தரும் வகையில் அமைந்து அபினாவிற்கு மாத்திரமல்ல பக்கவாத்தியக் கலைஞர்கள் அனைவருக்கும் கரகோசங்களைப் பெற்றுத் தந்தது.







அதனைத் தொடர்ந்து வந்த உருப்படிகளை தனது குருவான ஆதிரை சிவபாலன் அவர்கள் வழிகாட்டிக் கொண்டிருக்க அபினா சிற்றம்பலம் அவர்கள் ராகம் தானம் பல்லவி வரையும் தனது ஆழமான இசை பயிற்சி மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை சபையோருக்கும் பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கும் காட்டினார்.





தனது சக மாணவி ஒருவரின் "தாளம்" அவருக்கு மேலும் உதவிக் கரம் நீட்டியது என்றால் அதுவும் மிகையாகாது.





அபினா அவர்களின் வயலின் அரங்கேற்றத்திற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த, லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது உரையில் அன்றைய அரங்கேற்றம் பல சிறப்புக்களை பின்னணியாகக் கொண்டது என்றும் அவற்றில் இராஜலிங்கம் மாஸ்டர் அவர்கள் இசைப் பரம்பரை கனாவில் ஆயிரக்கணக்கான இசைக் கலைஞர் உருவாக்கும் காலம் நெருங்கிவருவதாக தான் உணர்வதாகவும், அந்தத் தொடர்ச்சியில் இசையின் மேன்மையினை நிருபிக்கும் வகையில் அபினா சிற்றம்பலம் அவர்களின் வயலின் அரங்கேற்றம் அவரது குருவான ஆதிரை சிவபாலன் ரொசான் அவர்களின் முதலாவது வயலின் அரங்கேற்றம் என்ற பெருமையை நிலை நாட்டுகின்றது என்று தெரிவித்தார்.



இறுதியில் பக்கவாத்தியக் கலைஞர் மற்றும் கலைஞர்கள் அனைவரும் அபினா அவர்களின் பெற்றோர் சிற்றம்பலம் தம்பதியினால் கௌரவிக்கப்பெற்றனர்.

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# ஆடிப்பூர சிறப்பு பூசை



03-8-2024 சனிக்கிழமை காலை 8:00 மணி முதல் ஆடிஅமாவாசையை முன்னிட்டு சிறப்பு பூசைகள நடைபெறும்.

மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 6-08-2024 செவவாய்கிழமை காலை 8:30 தொடக்கம் பூசைக்கள் அரம்பமாகி 12:30 மணி வரை சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.

அத்துடன் 11-08-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 11:00 மணியளவில் கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வர பூசையுடன் முடிவடையும். அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario**
**(416) 436-9647**

# உலகெங்குமிருந்து தமிழ் பேசும் சாதனையாளர்கள் கனடாவில் சங்கமமாகும் மாபெரும் "சர்வதேச விருது விழா" - வென்மேரி விருதுகள் - 2024

உலகெங்குமிருந்து தமிழ் பேசும் சாதனையாளர்கள் கனடாவில் சங்கமமாகும் மாபெரும் "சர்வதேச விருது விழா" – வென்மேரி விருதுகள் – 2024. மூன்றாவது ஆண்டு விருது விழா இது. முதலாவது விருது விழா யாழ்ப்பாணத்திலும், கடந்த ஆண்டு பிரான்ஸ் தேசத்திலும். தற்போது 3வது ஆண்டில் கனடாவிலும் நடத்தப்பெறுகின்றது.

ஒன்ராரியோ மாகாண முதல்வரும் தனது வாழ்த்துக்க்ளைத் தெரிவித்துள்ளார்.




மேலதிக விபரங்களுக்கு: அனுரா (647) 854-2927

# 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவில்லும்

தோற்றம்: 20-05-1940

மறைவு: 02-07-2024



**திருமதி. திலகமணி (பாப்பா) குமரகுருபரன்**

(மலேசியா, யாழ்ப்பாணம் திருநெல்வேலி)

கடும் மழையோடு காற்றும் ஓங்கி வீசிய நாளொன்றில்
தங்களைத் துணையாய் தாங்கி நின்ற மரம் சாய்ந்தது!
சடுதியாய் வீழ்ந்த விருட்சத்தின் நிழலின்றி
தெளிவோடு நீங்கள் எம்மைக் காத்து நின்றீர்கள் அம்மா!
இத்தனை ஆண்டுகள் தந்தையும் தாயுமாய் பாத்திரம் ஏற்று
இன்ப துன்பம் இரண்டையும் சகித்து இறைபதம் ஏகினீர்
சேர்ந்த இடத்தில் உங்களைச் சுற்றி தேவர்கள் இருப்பர்
தேக சுகத்தொடு விண்ணிலும் நீங்கள் நிச்சயம் வாழ்வீர்!

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி, ஊர்காவற்றுறை கரம்பொன், கொழும்பு, கனடா ரொரன்ரோ ஆகிய இடங்களில் வசித்து வந்தவருமான திருமதி. திலகமணி (பாப்பா) குமரகுருபரன் அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி.

01-08-2024 வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்தி கிரியைகள் நடைபெற்று, 3300 McNicoll Avenue (Middlefield & McNicoll) சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள Baba Banquet Hall மண்டபத்தில் 11-08-2024 ஞாயிற்றுக்கிழமையன்று ஆத்மசாந்திப்பிரார்தனையும், அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறும்.

அன்னாரின் பிரிவுத்துயரினால் நாம் வாடி நின்ற போது எமக்கு ஆறதல் தெரிவித்தவர்கள் உடனிருந்து இடர்கள் தீர்த்தவர்கள், அன்னையின் இல்லத்திற்கு வந்தவர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர்வளையங்கள் வைத்தவர்கள், தொலைபேசியில் அழைத்து ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டவர்கள், உணவளித்தவர்கள் இன்னும் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்ப சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு:
சிவகுமார் (சிவா - மகன்): (647) 504-6779
பரமேஸ்வரன் (ஈஸ்வரன் - மகன்): (416) 722-5802
குகன் (மருமகன்): (416) 624 9261

# வருடம் ஒன்று ஆனதையா உங்கள் வண்ண முகம் மறைந்து!

தோற்றம்: 15-01-1963

மறைவு: 15-08-2023



**அமரர். சர்வேந்திரராஜா சின்னராசா**

பெருங்குடியின் தனியொருவனே!
தற்பெருமையில்லா ராஜாவே!
ஓராண்டாய் இங்கு நாம் கதறுகின்றோம்
ஏன் என்று ஏன் அப்பா கேட்கவில்லை!
தீராத எங்களின் அழுகுரல் இன்னும்
உங்கள் செவிவந்து சேரவில்லையோ?

தலைவன் இல்லாத இல்லம் தத்தளிக்கின்றது - உங்கள்
மனைவி, மகள் வதனம் மலரமறுக்கின்றது
உன் உறவுகள் உன் முகம் தேடுகின்றன
உன் நிழலின்றி நண்பர்குழாம் வாடுகின்றன

சந்திக்கும் வாய்ப்பு இனி இல்லையப்பா!
எங்கள் இதயத்தில் என்றும் இணைந்திருப்பாய்!
தோன்றாத் துணையாய் நீ இருந்து
எங்களை வழிகாட்டிடுவாய்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இங்ஙனம்,
தங்களை இழந்து தவிக்கும் துணைவி, புதல்வி
மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்.

(13 பக்கம் தொடர்ச்சி)

## 2024 ஜனாதிபதித் தேர்தலும் சில சுவாரஷ்யங்களும்

கே. பாலா

இது ஒருபுறமிருக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்க ஐக்கியதேசியக் கட்சியின் தலைவராகவுள்ள நிலையில் அவரை எதிர்த்து களமிறங்கியுள்ள சஜித் பிரேமதச ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவராக இருந்தவர். அதன்பின்னரே அதிலிருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரானார். ஆக, இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதித்தலைவரும் ஒருவரையொருவர் எதிர்த்து போட்டியிடுகின்றனர். இதில் ஒருவர் போட்டியிட்டால் ஐக்கியதேசியக்கட்சியின் வாக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்கும் ஒருவருக்கு மட்டுமே செல்லும் ஏனெனில் இருவரும் ஐக்கியதேசியக் கட்சியை சேர்ந்தவர்கள் என்பதனால் இருவரும் பிரிந்தாலும் இருவரினதும் ஆதரவாளர்கள் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். இவர்கள் பாராளுமன்றத்தேர்தலில் பிரிந்து வாக்களித்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களும் ஒருவருக்கு வாக்களிக்கும் வாய்ப்பே இருந்தது. ஆனால் தற்போது தலைவரும் முன்னாள் பிரதித்தலைவரும் போட்டியிடுவதனால் வாக்குகள் சிதறும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்த்து அதேகட்சியின் முன்னாள் தவிசாளரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா களமிறங்குகின்றார். இதனால் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர், முன்னாள் பிரதித்தலைவர், அக்கட்சியில் அமைச்சராக இருந்தவர் என ஒரே கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய மூவர் ஒருவரையொருவர் எதிர்த்து போட்டியிடும் நிலை இத்தேர்தலில் ஏற்பட்டுள்ளது. சரத் பொன்சேகா இறுதி நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து விட்டு போட்டியிலிருந்து விலகுவதாக அறிவிக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

இதேவேளை இத்தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் இருதடவைகள் போட்டியிட்டு தோல்வியடைந்தவர், சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க, சரத் பொன்சேகா ஆகியோர் ஒவ்வொருதடவைகள் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள். ஆக இந்தத்தேர்தலில் ஏற்கனவே தோல்வியடைந்த வேட்பாளர்களே மீண்டும் வெற்றிக்காக பிரதான வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

இதேவேளை இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளை தெரிவு செய்வதற்காக இதுவரை 8 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்படி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான முதலாவது தேர்தல் 1982-ஆம் ஆண்டு நடைபெற்ற போது இந்த தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் ஜி.ஜி.பொன்னம்பலம் போட்டியிட்டிருந்தார்.

1982 ஆம் ஆண்டுக்கு பின்னர் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை தமிழ் வேட்பாளராக எம்.கே.சிவாஜிலிங்கம் போட்டியிட்டிருந்தார். அதன்பின்னர், 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுந்தரம் மகேந்திரன் போட்டியிட்டதுடன், இறுதியாக 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சுப்ரமணியம் குணரத்னம் ஆகிய தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். இந் நிலையிலேயே இந்தத்தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முதல் முயற்சி இடம்பெறுகின்றது.

அத்துடன் நாட்டின் பிரதமராக 7 தடவைகள் பதவிவகித்தவரும் தற்போது ஜனாதிபதியாக இருப்பவருமான ஒருவர் சுயேட்சையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்திய விந்தையும் இந்தத் தேர்தலிலேயே இடம்பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி நாட்டில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் பதவியில் இல்லாத நிலையில் நடைபெறும் தேர்தலாகவும் இது இடம் பிடிக்கவுள்ளது.

## நவற்கிரி மக்கள் ஒன்றுகூடல்

**NAVATKIRI MAKKAL GET-TOGETHER**

Sunday, August 4th, 2024
9:00 AM to 7:00 PM
Morningside Park
Picnic Area 2 வில்

நடைபெறும் ஒன்றுகூடலில் நவக்கிரி வாசிகளும் நலன்விரும்பிகளும் கலந்து கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

(416) 319-3139
(647) 818-6750
(437) 775-7656

ஆகிய இல்லககங்களை அழைக்கவும் அல்லது **navakkirimakkal@gmail.com** என்னும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்.

*நவக்கிரி மக்கள் ஒன்றியம் கனடா நிர்வாக சபையினர்,*

*நா. பாஸ்கரன்,* *தலைவர்*
*சி. பானுகோபன்* *செயலாளர்*

## கண்ணீர் அஞ்சலி #64




மலர்வு 06 - 12 - 1939
உதிர்வு 05 - 07 - 2024

### திருமதி. சாந்தமரியா தாவீதுப்பிள்ளை

எங்கள் OSTBA உறுப்பினர் **#62**
**July 5, 2024** அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION
OSTBA2019@GMAIL.COM WWW.OSTB5.CA
416-473-6880

Toronto சிட்டி கவுன்சிலர்

**PAUL AINSLIE**

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

**HELP IS AVAILABLE**

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
**விலங்கு சேவைகள்**
உயர்மாடி கட்டட சட்டங்கள்
**கட்டட அனுமதி பத்திரங்கள்**
பிள்ளை பராமரிப்பு சலுகை
**அவசர வீட்டு வசதிகள்**
தீயணைப்பு சேவைகள்
**கழிவுப் பொருட்கள் சேவை**
நூலகச் சேவை
**மாநகரத் தேர்தல்**
மாநகர அனுமதியும் சட்டங்களும்

**Ontario Works**
வாகனத் தரிப்பிடங்கள்
**பூங்காக்கள்**
காவல் துறை
**பொதுச் சுகாதாரம்**
வீதிகள்
**ஆதன வரிகள்**
பொதுப் போக்குவரத்து
**மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்**
மரங்கள்
**நீர் விநியோகம்**

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**

# விக்ரமபாகு கருணாரட்ன–ஈழத் தமிழர்களின் குரலாய் ஒலித்த சிங்களவர்

**- சிவா பரமேஸ்வரன்**

அவர் ஈழத்தமிழர்களின் அவலத்தை விற்று காசாக்கியவர் இல்லை. அந்த மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவரும் இல்லை. அந்த மக்களுக்காக நான் போராடுகிறேன், எனக்கு நிதி கொடுங்கள் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கையேந்தியது இல்லை. பிரபாகரன் படத்தைப் போட்டு கட்சி நடத்தியவரும் இல்லை. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பதால் இலங்கையில் இருக்க முடியாது என்று கூறி மேற்குலக நாடுகளில் தஞ்சம் கோரியவரும் இல்லை. சுருங்கச் சொன்னால் விக்ரமபாகு கருணாரட்ன ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் "நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் இல்லை".

கலாநிதி (முனைவர்) விக்ரமபாகு கரணாரட்ன பிறப்பில் சிங்களவராக இருந்தாலும், தனது வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களின் பக்கம் நின்று அவர்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் அபிலாஷ‘களை ஆதரித்து அதிலிருந்து இறுதிவரை மாறாதவர்.

இன்று ஈழ மக்களை ஒரு பணம் காய்ச்சி மரமாக கருதி, அவர்களின் போராட்டத்தை ஒரு வர்த்தகப் பொருளாக்கி அதன் மூலம் தமது வாழ்வையும், வயிறையும் வளர்த்துக்கொள்பவர்கள் மத்தியில் இலங்கையில் பெரும்பான்மையாக இருக்கும் சிங்கள சமூகத்தில் பிறந்து தமிழ் மக்களுக்காக தனது வாழ்நாள் முழுவதும் குரல் கொடுத்தார் என்பதை தமிழ்நாட்டில் எவ்வளவு பேர் அறிவார்கள்?

கடந்த வாரம் வயது முதிர்ச்சி காரணமாக கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தனது 81 ஆவது வயதில் காலமானார். அவருக்கு உதட்டளவிலான அஞ்சலி ஒரு சிலரால் தமிழகத்தில் செலுத்தப்பட்டது. அடிப்படையில் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன ஒரு கல்விமான். உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அவர் கலாநிதி பட்டம் பெற்றவர். இலங்கையின் முன்னணி இடதுசாரி தலைவர்களில் ஒருவர். நவ சம சமாஜ கட்சியை தோற்றுவித்தவர்களில் ஒருவர்.

ஈழத் தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு, தமிழர்கள் இலங்கையில் தமக்கே உரித்தான தனி தேசமாக வாழ்வதற்கு உரிமையுடையவர்கள் என்று மிகவும் தைரியமாக பொதுவெளியில் பேசி வந்தவர். அவர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததில்லை. ஆனாலும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் உறுப்பினர்கள் என அனைத்து தரப்பாலும் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு (டெசோ) இயகத்தை ஏற்படுத்தி அதன் சார்பில் சென்னையில் நடத்தப்பட்ட மாநாட்டில் பங்குபெற்றவர் விக்ரமபாகு கருணாரட்ண. ஆனால், அந்த மாநாட்டில் இந்தியா குறித்து விமர்சனங்களை வைத்ததால் அவர் பேசுவதிலிருந்து தடுக்கப்பட்டது வரலாறு. இது நடந்தது 12 ஆகஸ்ட் 2012 சென்னையில் நடைபெற்ற ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில்.

இலங்கையில் தமிழர்கள் படும் துன்பத்திற்கு பகுதியளவில் இந்தியாவே பொறுப்பு என்று அவர் பேசியதை அடுத்து அந்த கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. பின்னர் அப்போது பிரதமர் அலுவலக அமைச்சராக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வி. நாராயணசாமி "இலங்கையில் தமிழ் பிரிவினைவாதிகளை ஒரு போதும் இந்தியா ஆதரிக்காது" என்று கூறினார். அப்போது மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவையில் திமுக மூத்த தலைவர்களில் ஒருவரான டி ஆர் பாலு அமைச்சராக இருந்தார். இலங்கை அரசியல் சாசனத்தில் ராஜிவ் காந்தி தலைமையிலான அரசின் முன்னெடுப்பின் மூலம் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் (இலங்கை வாழ் தமிழர்களுக்க்கு அதிகாரப் பகிர்வை அளிக்கும் சட்டத் திருத்தம்) பிழையானது என்று அம்மாநாட்டில் பங்குபெற்ற புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் கூறியதை அடுத்து, அவர்கள் அப்படியான விமர்சனத்தை தவிர்க்குமாறு கூறப்பட்டனர்.

திமுக தலைவர் கருணாநிதியின் அழைப்பின் பேரிலேயே அவர் அம்மாநாட்டிற்கு வந்திருந்தார். அவருக்கான விசா அனுமதியை இந்திய அரசு மறுத்த போது திமுக தலைவரின் பரிந்துரையை அடுத்தே அவருக்கு இந்தியா வர அனுமதி வழங்கப்பட்டது. இதெல்லாம் ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்டம் தொடர்பிலான வரலாற்றின் ஒரு பகுதி.

இலங்கையில் நடைபெற்ற போரை "இனப்படுகொலை" என்று சென்னை மாநாட்டில் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதை ஈழ வியாபாரிகள் அறிந்திருப்பார்களா என்பது பெரிய கேள்விக்குறி. இதை கூற வேண்டியதற்கான காரணமும் உள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பிறகு ஓரளவிற்கு வலுவாக இடதுசாரி இயக்கங்கள் படிப்படியாக பலமிழந்து சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன. அந்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து, அவர்களின் அரசியல் அபிலாஷைகளை அடக்கி ஒடுக்க முற்பட்டன் விளைவே ஆயுதப் போராட்டத்திற்கு வழி வகுத்தது.

பெருபாலான சிங்கள அரசியல் தலைவர்கள் ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுத்த நிலையில், அவர்கள் தரப்பில் இருந்த நியாயத்தை உணர்ந்து அவர்களுக்காக இறுதிவரை குரல் கொடுத்தவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன.

ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்களில் எவ்வளவு பேர் அவரது வாழ்நாளில் அவரைப்பற்றி பேசியிருப்பார்கள் என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
CR102, CR 247, CR238, CR121,CR141,CR160, CR 31, CR 42, CR 39, CR 52, CR 78, CR 115

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# மன்னாரில் வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையில் "எமது காலம்" எனும் கருப்பொருளில் "பயணிக்கும் வரலாற்று" அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்





- எஸ்.ஆர்.லெம்பேட் (30-07-2024)

வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையில் "எமது காலம்" எனும் கருப்பொருளில் "பயணிக்கும் வரலாற்று" அருங்காட்சியகம் மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள தோடு, எதிர்கால தலைமுறையினர் தெரிந்து கொள்ள ஆவணப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கைக்கான செயல்திட்ட நடவடிக்கை கூட்டம் 30-07-2024 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மன்னார் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பழைய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் SCOPE அமைப்பின் திட்ட ஆலோசகர் சுஜான் நாணயக்கார, தேசிய பணிப்பாளர் நவாஸ் முகமட், குறித்த அமைப்பின் வரலாற்று கருத்தாடல் ஆலோசகர் தர்ஷிகா கதிர்வேல், திட்ட ஒருங்கிணைப்பாளர் முகமட் சுஹைல், திட்ட ஒருங்கிணைப்பாளர் தரிந்த மல்லவராச்சி, திட்ட முகாமையாளர் சௌமியா அமரசிங்க மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்கள பிரதி நிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் மன்னார் நகரில் 8 நாட்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடு திட்டம் மற்றும் மன்னார் மாவட்டம் தொடர்பான வரலாறு, மற்றும் மன்னார் மாவட்ட எல்லைகள், மன்னார் மாவட்டத்தின் சிறப்பு, சமயம், கலாச்சாரம், பண்பாடுகள், கலை, இன்னும் பல்வேறு வரலாற்று சிறப்புகள் தொடர்பான ஆய்வுகள் தரவுகள் மற்றும் பல்வேறு தரப்பினர் களையும் அறிந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்தாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் வரலாற்று ரீதியான பதிவுகள் அறியப்படாத நிலையில் குறித்த நிகழ்வின் ஊடாக மக்கள் பயன் பெறும் விதத்தில் குறிப்பாக மாணவர்கள் இலகுவாக அறிந்து கொள்ளும் விதத்தில் பயணிக்கும் அருங்காட்சியகம் முன்னெடுக்கும் படி மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவ படுத்தியவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

குறிப்பாக வளவாளர்கள் தமிழில் தமது கருத்துக்களை ஆவணப்படுத்தல் களை முன் வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் பயணிக்கும் அருங்காட்சியகம் திட்டத்தினூடாக பல்வேறு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் மத சகவாழ்வு தொடர்பான தெளிவூட்டும் செயலமர்வு




- எஸ்.ஆர். லெம்பேட் (30.07.2024)

மன்னாரில் தேசிய சமாதானப் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சர்வ சமயக் குழுக்களுக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மத ரீதியான வன்முறைகளை தடுப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு மன்னாரில் தனியார் விருந்தினர் விடுதியில் 30-07-2024 செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஒழுங்கமைப்பில் மாவட்ட ரீதியாக இயங்கி வரும் சர்வ சமய குழுவினர் மற்றும் அரச உத்தியோகஸ்தர்களின் பங்குபற்றுதலுடன் தேசிய சமாதானப் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்டு நிகழ்வு இடம்பெற்றது.

சமய சகவாழ்வு உட்பட மன்னார் மாவட்டத்தில் மத ரீதியாக காணப்படும் பிரச்சினை தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்படும் மத ரீதியான வெறுப்பு பேச்சை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த செயலமர்வில் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டது.





இவ் செயலமர்வில் மதகுருமார்கள், ஊடகவியளாலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் தமது விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமஸ்டி முறையிலான தீர்வை முன்வைக்க வேண்டும்

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ

- எஸ்.ஆர்.லெம்பேட் (01-08-2024)



வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று எதிர் கொண்டு வரும் அரச இனவாத அடக்கு முறையில் இருந்து மீண்டு கௌரவமான உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழ வேண்டுமாயின் நிலையான சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வே அவசியம் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் வடமாகாண இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

அரசியல் தீர்வுக்கான 100 நாட்கள் செயல் முனைவின் இரண்டாம் வருடத்தையொட்டி ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வு குறித்து யாழ்ப்பாணத்தில் வைத்து 01-08-2024 அன்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி 2022 ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி, சுழற்சி முறையிலான 100 நாட்கள் செயல் முனைவினை ஆரம்பித்து, 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டோம்.

இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டு வரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழ வேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வு அவசியம்.

ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஸ்டி முறையிலான தீர்வு ஒன்றை யே நாம் திடமாக வலியுறுத்தி நிற்கிறோம்.

இலங்கையில் நாம் சிறுபான்மையினர் அல்ல. இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத் தினராவோம்.எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஸ்டி முறைமையின் மூலம் உறுதி செய்து கொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்கு முறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றனர்.

எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயல்படுவோம். அதற்காக, அனைவரும் ஜனநாயக வழி நின்று செயல்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும்.

சிங்கள அரசியல் தலைமைகளுக்கு நாம் பகிரங்கமான கோரிக்கையை முன் வைக்கிறோம். ஜனாதிபதி தேர்தல் போட்டி இடப்போகும் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்.

சமஸ்டி கொள்கையை முன்னெடுக்கும் நபரே இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக வரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களான எமது மொழி, மத, அரசியல், பொருளாதார உரிமைகளை பாதுகாத்து முன்னெடுக்கும், இனவாதத்தை எதிர்க்கும் வேட்பாளருக்கே தமிழ் (வடக்கு கிழக்கு), முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் வாக்களிப்போம். சமஷ்டி யே தீர்வு என அவர் மேலும் தெரிவித்தார். தீர்வு என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கு மாகாணத்தில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் தாய் ஒருவர் பயங்கரவாத தடைப் பிரிவு பொலிஸாரால் விசாரணை

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தனது அன்புக்குரியவர்களைக் கண்டறியும் நோக்கில் நீண்டகாலமாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தாய் ஒருவர், பயங்கரவாதப் பொலிஸாரினால் அழைக்கப்பட்டு நீண்ட நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஜூலை 30 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மூன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர், அன்றைய தினம் மாலை மட்டக்களப்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமல்ராஜ் அமலநாயகி, கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டதாக தெரிவித்து பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் (CTID) மட்டக்களப்பு பிரிவு அதிகாரிகள், தம்மிடம் காட்டப்பட்ட சிங்கள கடிதக் கோப்புகளில் தான் பயங்கரவாதி என அடையாளப்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

"அனுப்பட்டிருந்த அந்த பைலில் முற்றுமுழுதாக நான் ஒரு பயங்கரவாதியென எழுதப்பட்டிருந்தது.

முழுமையாக எங்களை ஒரு பயங்கரவாதியாக முத்திரை குத்தி எங்களுக்கு உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தி, இந்த போராட்டத்தை நிறுத்த வேண்டும்."

ஜூலை கடைசி வாரத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் 8 மாவட்டங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி போராட்டம் நடத்தப்பட்டதுடன், ஜூலை 30ஆம் திகதி, வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு தலைமைத் தாங்கிய வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி, சிவானந்தன் ஜெனிட்டா, ஜனநாயக ரீதியில் போராடும் தமிழ்த் தாய்மார்களிடம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எந்த அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என கேள்வி எழுப்பியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத் தலைவி பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். பிடிஏ என்றால், நாங்கள் பயங்கரவாதிகளா எங்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய? ஜனநாயக ரீதியில் எமது உறவுகள் எங்கே எனக் கேட்டு போராடிக் கொண்டிருக்கின்ற பெண்களாக இருக்கின்ற நிலையில் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, ஜூலை 31 ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கி, போராடும் தாய்மாரை விசாரணை செய்வதை விடுத்து, தங்களின் அன்புக்குரியவர்களை கண்டுபிடிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வலியுறுத்தினார்.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் போராடிக் கொண்டிருக்கும் தலைவிமாரை பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்து 4, 5 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்திக்கொண்டிருக்கின்றனர். ஜூலை 30, 2024 மட்டக்களப்பு மாவட்டத்தின் அமலநாயகி என்ற மட்டக்களப்பு மாவட்டத் தலைவியை 4 மணித்தியாலங்கள் விசாரணை செய்துள்ளனர். அவ்வாறான விடயங்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வாறான விடயங்களை நிறுத்தி எங்களது உறவுகளை மீட்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."






## ஒழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுடன் உறவு

15 வருடங்களுக்கு முன்னர் அழிக்கப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்த விடுதலைப் புலிகளுடன் அவருக்கு தொடர்புள்ளதா என பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் மட்டக்களப்புப் பிரிவினர் தம்மிடம் கேள்வி எழுப்பியதாக வல்லிபுரம் அமலநாயகி என அழைக்கப்படும் அமலராஜ் அமலநாயகி தெரிவிக்கின்றார்.

"சர்வதேச அளவில் சரி உள்நாட்டு அளவில் சரி எல்டிடிஈ உறுப்பினர்களோடு உங்களது தொடர்புகள் எவ்வாறு இருக்கிறது, அவர்களுடன் நீங்கள் தொடர்பில் இருக்கின்றீர்களா? எனக் கேட்டார்கள். நான் சொன்னேன், தடை செய்யப்பட்ட இயக்கம் அல்லது அந்த இயக்கம் இல்லையெனக் கூறி நீங்கள்தானே சொன்னீர்கள். பிறகு எப்படி எல்டிடிஈ என்ற பெயர் வருமென எனக்குத் தெரியாது. அதனை நீங்கள்தான் தேடிப் பார்க்க வேண்டும். அவ்வாறு எல்டிடிஈ என்ற பெயர் சொல்லிக்கொண்டு வருபவர்களுடன் எமக்குத் தொடர்பு இல்லை. அந்தப் பக்கத்தை நாங்கள் பார்க்கவும் இல்லை. அதனை நீங்கள் தேடிக் கண்டுபிடியுங்கள் எனச் சொன்னேன்."

## புலம்பெயர் நிதியுதவி

வலிந்து காணாமலாக்கப்பட்ட தனது அன்புக்குரியவர்களைக் கண்டறியும் நீண்ட போராட்டத்திற்கு புலம்பெயர் நாடுகளில் இருந்து பணம் கிடைக்கிறதா என தன்னிடம் கேள்வி எழுப்பிய பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் அதிகாரிகள், புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சிப்பவர் என்ற கோணத்திலும் தன்னிடம் விசாரணை நடத்தியதாக சுட்டிக்காட்டுகின்றார்.

"டயஸ்போரா இந்த போராட்டத்திற்கு காசு தருவதில்லையா எனக் கேட்டார்கள். இதுவரை தரவில்லை எனச் சொன்னேன். தொடர்பு இருந்தால் தாங்கள் என்றேன்.

இந்த விசாரணையின்போது என்னை பயங்கரவாதியாகவும், எல்டிடிஈ அமைப்பை மீள் உருவாக்கும் ஒருவராகவும், கடந்த காலத்தில் இவ்வாறான போராட்டங்களை செய்து அரசாங்கத்திற்கு அவதூறு ஏற்படுத்தும் ஒரு அமைப்பாகவும் கருதுகிறார்கள், அதுதான் அவர்களின் அபிப்பிராயமாக இருந்தது."



இவ்வாறான விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் 2017 பெப்ரவரி மாதம் முதல் தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி கோரி தொடர்ச்சியாக போராடும் தாய்மார்களுக்கு அச்சம் ஏற்படும் என அரசாங்கம் நம்புவதாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தவிசாளர் குறிப்பிடுகின்றார்.

"சர்வதேச ரீதியான அழுத்தங்கள் இவர்களுக்கு வருவதால் எங்களை இப்படியான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தி, உதாரணமாக நான் ஒரு விசாரணைக்கு வந்தால் நான்கு தாய்மார் அச்சத்தில் இதனை (போராட்டத்தை) விட்டுவிடுவார்கள். இந்த போராட்டத்தை அழிக்க வேண்டும் என்பதே ஒரேயொரு நோக்கம். இப்படியொரு காணாமல் போனமை என்ற விடயம் இல்லை என்றதையும் ஏற்படுத்தி, மறப்போம், மன்னிப்போம் என்ற அடிப்படையில் கொண்டுபோக வேண்டுமென்பதே இவர்களின் நோக்கம்."

பயங்கரவாதத் தடுப்புப் மற்றும் விசாரணைப் பிரிவினர் தாம் பிறந்த வைத்தியசாலை முதல் தமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் தனிப்பட்ட தகவல்களைப் பெற்றதாகக் கூறும் அமலநாயகி, பல்வேறு சந்தர்ப்பங்களில் தாம் நடத்திய போராட்டங்கள் தொடர்பான ஆறு புகைப்படங்களைக் காட்டி அவைத் தொடர்பான தகவல்களை கேட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

## பெறுமதி இரண்டு இலட்ச ரூபாயா?

கடந்த ஜூலை 29ஆம் திகதி திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவி செபஸ்டியன் தேவி, மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமலநாயகி போன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய தாய்மார்களுக்கும் பயங்கரவாத பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்படலாம் என எச்சரித்தார்.

"ஜனாதிபதி ஆணைக்குழுக்களை கொண்டு வந்தார்கள் அதிலும் எதுவும் நடக்கவில்லை. இன்று மட்டக்களப்பு மாவட்டத் தலைவியை விசாரணைக்கு அழைத்துள்ளார்கள். நாளை எங்களையும் அழைக்கலாம்."

மன்னாரில் ஜூலை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு தலைமைத் தாங்கிய, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மன்னார் மாவட்டத் தலைவி மனுவெல் உதயச்சந்திரா, காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் பெறுமதி இரண்டு லட்சம் ரூபாயா? என, காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்திடம் (OMP) கேள்வி எழுப்பினர்.

"நாங்கள் வீதியில் நின்று கத்திக் கொண்டிருக்கின்றோம் ஆனால் யாருமே எங்களை திரும்பிப் பார்ப்பது போல் தெரியவில்லை. நீதி கிடைக்குமா தெரியவில்லை. ஒவ்வொரு அம்மாவும் இறந்துகொண்டிருக்கினறாள். அப்படி இறக்கையில் ஒவ்வொரு சாட்சியும் இறந்துகொண்டு போகுது. அதைத்தான் இந்த அரசாங்கமும் விரும்புது. ஓஎம்பியை கொண்டுவரும்போது நான்கு பொறிமுறைகளை கொண்டுவந்தார்கள். அதில் உண்மையை கண்டறிவதாக சொன்னார்கள். உண்மையை கண்டறிய அவர்கள் என்ன செய்தார்கள். நட்டஈடுக்காக மாத்திரமே ஓஎம்பி முன்னிற்கிறது. நட்டஈட்டை பெற்றுக்கொண்டு இந்த அம்மாக்கள் வீட்டில் இருக்க வேண்டுமென்றே அவர்கள் நினைக்கின்றார்கள். எமது பிள்ளைகளின் பெறுமதி இரண்டு இலட்சமா? நாங்கள் நான்கு இலட்சம் தருகிறோம் எங்கள் பிள்ளைகளை தேடித்தாருங்கள் என்றுதான் நாம் கோருகின்றோம்."

# எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் சிலர் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிப்பு

- நடராசா லோகதயாளன்

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைவதும், அவர்கள் கைது செய்யப்பட்டு இந்திய அரசின் அழுத்தம் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்படும் வழமையான விடயமாகிவிட்டது.

அவ்வகையில் வட பகுதி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 64 இந்திய மீனவர்களில் 20 பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் 11 படகுகளில் எல்லை தாண்டிய சமயம் கைது செய்யப்பட்ட 64 மீனவர்களின் 11 வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (30) விசாரணைக்கு கொண்டு வரப்பட்டது.

இதில் 4 வழக்குகளின் 25 மீனவர்களிற்கு எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் விளக்க மறியல் நீடிக்கப்பட்டது. இதேபோன்று இரு வழக்குகளின் 13 மீனவர்களிற்கு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.


5 வழக்குகளின் 26 மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் இன்றைய தினம் இடம்பெற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தீர்ப்பளிக்கப்பட்ட 26 மீனவர்களில் மூவர் இரண்டாவது தடவை எல்லை தாண்டியமையினால் அவர்கள் மூவரதண்டனையுடன் ஓர் ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதோடு 3 படகுகளின் உரிமையாளர்கள் படகில் இருந்தமையினால் படகுகள் அரச உடமை ஆக்கப்படுவதோடு தலா 4 மில்லியன் ரூபா குற்றப் பணம் விதிக்கப்பட்டது.

குற்றப்பணம் விதிக்கப்பட்டவர்கள் அதனை செலுத்த தவறினால் தலா 6 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் எஞ்சிய 20 மீனவர்களிற்கும் 5 ஆண்டுகளிற்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையுடன் விடுவித்து நீதிவான் உத்தரவிட்டார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழம் பெற்றுத்தராவிட்டாலும் நான் பெற்றுத் தருவேன் என அஸ்ரப் கூறினார்" – சுமந்திரன் எம்.பி.



**- நடராசா லோகதயாளன்**

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அண்ணன் அமிர்தலிங்கம் போன்று தமிழ் மற்றும் முஸ்லிஅம் மக்கள் ஒற்றுமை மீண்டும் ஏற்பட்டால் சமஸ்டி நோக்கிய நகர்விற்கு இலகுவான வழியமைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம் ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

கறுப்பு ஜீலை நிகழ்வின் 41வது ஆண்டு நினைவு கூறல் யாழில் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நினைவேந்தல் நிகழ்வுகள் நம்பிக்கை தருவதாகவும் அமைய வேண்டுமே அல்லாமல் வெறுமனே ஒப்பாரிகளுடன் மட்டும் முடிவடையக் கூடாது.

1977 ஆம் ஆண்டு பிரச்சார மேடைகளில் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த அஷ்ரப் கூறும் போது தமிழ் மக்களுக்கு அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழம் பெற்று தராவிட்டாலும் தம்பி அஷ்ரப் பெற்றுத் தருவேன் என மேடைகளில் முழங்கினார்.

இதேபோன்று மறைந்த தொண்டமான் சமஸ்டித் தீர்வை எட்டுவதில் ஒரு அங்கமாக செயற்பட்டவர் என்ற நீதியில் வடக்கு கிழக்கில் வாழும் மலையகத் தமிழ மக்களையும் ஒன்றிணைத்து செயல்படும்போதே எமது இலக்கை உறுதியாகக் கொண்டு செல்ல முடியும்.

அஷ்ரப் மற்றும் அமிர்தலிங்கம் இடையே காணப்பட்ட ஒற்றுமையும் தமிழின உணர்வும் எந்தளவு தூரம் இருவரிடமும் காணப்பட்டது என்பதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை.

தற்போது சிலர் ஒற்றுமை எனக் கூறுகிறார்கள் தேர்தல் காலங்களில் வருகின்ற ஒற்றுமை பின்னர் பிரிந்து அரசியல் செய்வது இதுதான் எங்களிடம் காணப்படுகின்ற ஒற்றுமை.

அஷ்டப் அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஒற்றுமை தமிழ் முஸ்லிம் மக்களிடம் ஏற்படுத்துவது சமஸ்தி நோக்கிய பயணத்தை பலமாக்கும்.

தமிழ் மக்களுக்கு சமஸ்தி கட்டமைப்பு வேண்டும் வீரப் பேச்சுக்கள் பேசுவதால் பயனேதும் கிட்ட போவதில்லை மூளையை உபயோகித்து எமது அரசியலை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் 75 வீதமான சிங்களவர்கள் மீதமுள்ள 25 வீதமான தமிழ் பேசும் மக்களை ஒன்றனைத்தால் பாராளுமன்றத்தில் சுமார் 50 ஆசனங்களையாவது பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை இருந்தால் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் பேசும் மக்கள் காணப்படுவார்கள்.

நாங்கள் வாக்களிக்காத விட்டால் தெற்கு பலமாக அமைந்து விடும் இரண்டுக்கும் மேற்பட்டவர்கள் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் சந்தர்ப்பங்களில் எமது வாக்குகள் பேரம் பேசும் சக்தியாக மாறும்.

இந்தப் பேரம் பேசும் சக்தியாக அரசியல் தலைமைகள் சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்கும்போது எமது மக்களுக்கு பயன்பெறக்கூடியதாக அமையும்.

ஆகவே சமஷ்டி தீர்வை நோக்கிய பயணத்தில் அதனை அடைவதற்கு சாம்பலில் இருந்து புறப்படும் பீனிக்ஸ பறவை போல நாங்கள் எழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்

# பருத்தித்துறையில் இரண்டு தமிழ் பேசும் பொலிசார் பணி நீக்கம்

**- நடராசா லோகதயாளன்**

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் இரண்டு தமிழ் பேசும் பொலிஸார் சந்தேக நபரை தாக்கிய குற்றச் சாட்டில் பணியிலிருந்து நீக்கம் பருத்தித்துறையைச் சேர்ந்த சீனிவாசம் கிருபாகரன் எனபவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டதுடன், தாக்குதலுக்கு உள்ளான சந்தேக நபர் பருத்தித்துறை வைத்தியசாலையின் இலக்கம் 07 இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் தொடர்பில் பருத்தித்துறை குற்றப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் வீரசுதன் குடிபோதையில் இருப்பதை உறுதி செய்த பின்னர், அந்த அதிகாரி கைது செய்யப்பட்டார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்ட இரண்டாவது அதிகாரி திருச்செல்வம் சம்பவத்தன்று சம்பவ இடத்திலிருந்து வெளியேறினார்.

இவை தொடர்பான மேலதிக விசாரணைகளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் கங்கசந்துராய மேற்கொண்டு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரும் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இருந்தபோதும் இரு பொலிஸாரையும் காங்கேசந்துறைக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் விசாரணை முடியும் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



# "பொருளாதாரத்தை தமிழ் மக்கள் ஆயுதமாக பயன்படுத்த வேண்டும்" சாணக்கியன் எம்.பி வலியுறுத்தல்

**- நடராசா லோகதயாளன்**

இன்று எமது கையிலே ஆயுதம் இல்லை. இதற்காக தமிழ் மக்கள் பொருளாதாரத்தை ஆயுதமாக எடுக்க வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

கறுப்பு ஜீலை நிகழ்வின் 41ஆம் ஆண்டு நினைவு கூறல் யாழில் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலே வழமையாக கறுப்பு ஜுலை நினைவேந்தல் அனுஸ்டிக்கப்படும் இருப்பினும் நான் இம்முறை யாழ்ப்பாணத்தில் பங்கேற்கின்றேன்.

கறுப்பு ஜீலை நிகழ்வுகள் 1983ஆம் ஆண்டு இடம்பெற்றது.

நானோ 1990 ஆம் ஆண்டுதான் பிறந்தேன். பிறக்க முதல் இடம்பெற்ற வரலாற்றை அறிந்துள்ளோம். நாட்டின் அரசினால் வடக்கு கிழக்கு உள்பட பல வன்முறைச் சம்பவங்கள் இடப்பெற்றன.

இது இன்றும் தொடர்கின்றது. அது பல வடிவில் நடக்கின்றது. இதில் அதிக விடயங்களை நாம் தடுத்தும் உள்ளோம் குறிப்பாக மட்டக்களப்பில் தேர்தலிற்கு பின்பு மகாவலி அதிகார சபையால் 10 ஆயிரம் பேர் குடியேற்றம், வனவளம் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு ஊடான நில அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களை தடுத்தோம். எதுவுமே செய்யவில்லை எனக் கூறமுடியாது.

இதேநேரம் இந்த நாட்டில் கடற்றொழில் அமைச்சராக தமிழ் அமைச்சர் இருப்பதனால் தமிழ் மீனவர்களிற்குப் பிரச்சணை இல்லை என சிங்கள மீனவர்கள் நினைக்கின்றனர். உண்மையில் தமிழ் அமைச்சர் இருப்பதே தமிழ் மீனவர்களிற்கான பெரிய பிரச்சணை.

இவை இவ்வாறிருக்க இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் என்பது வாக்களிக்கும் வரை தேர்தல் நடக்குமா என்றால் அது எனக்கு சந்தேகம்தான்.

இந்த ஜனாதிபதி வந்த பின்பு காணி விடுவோம் என்பர் ஆனாலும் காணி பிடிக்கின்றனர். இராணுவ முகாமை எடுப்போம் என்பர் ஆனால் முகாமிற்கு காணி எடுப்பர் அவ்வாறானால் என்னதான் நடக்கின்றது.

இவை இவ்வாறானால் நாட்டிலே ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றால் 2005 இற்குப் பின்பு இரஜபக்சாக்கள் இல்லாத ஒரு தேர்தலாக இம்முறை இடம்பெறும் தேர்தலாக அமையும்.

இன்று எமது கையிலே ஆயுதம் இல்லை. இதற்காக தமிழ் மக்கள் பொருளாதாரத்தை ஆயுதமாக எடுக்க வேண்டும் என்றார்.

# இலங்கைச் சிறையிலுள்ள இந்திய மீனவர்களுக்கான நிதியுதவியை அதிரித்தது தமிழ்நாடுஅரசு

**- நடராசா லோகதயாளன்**

இலங்கையின் வட கடல் பகுதியில் சட்டவிரோதமாக மீன்படித்த காரணத்தால் இலங்கையில் சிறையில் உள்ள இந்திய மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவித் தொகையை 250 ரூபாவில் இருந்து 350 ரூபாவாக உயர்த்த தமிழக முதல்வர் மு.க.ஸ்ராலின் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை சிறையில் சிறை வைக்கப்படும் இந்திய மீனவர்களிற்கான உதவி அதிகரிக்கப்படும் அதே நேரம் கடற்படையால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றங்களினால் அரச உடமையாக்கப்படும் விசைப்படகுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையான 5 லட்சம் ரூபாவினை 6 லட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு அரச உடமையாக்கப்படும் நாட்டுப்படகுகளின் உரிமையாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் நிவாரணத் தொகையான ஒரு லட்சம் ரூபாவனை 2 லட்சமாக உயர்த்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்க அனுமதி வழங்கக் கோரி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்ராலின் வேண்டுகோள் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

# சமஸ்டி, சுயாட்சி ஆகியவற்றை உறுதியளித்தால் ஆதரவு குறித்து பரிசீலனை என்கிறார் சிறீதரன்

**- நடராசா லோகதயாளன்**

ஜனாதிபதி வேட்பாளர்களில் யாராவது சமஸ்டியை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் தமிழர்கள் சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பாக தேர்தல் விஞ்ஞானத்தில் வலியுறுத்தினால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக தமிழ் அரசுக் கட்சி பரிசீலனை செய்யும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே தினம் இவ்வாறு தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாதம் 10, 11 திகதிகளில் மத்திய குழு கூடி பொது வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தேர்தல் விஞ்ஞானத்தில் சமஸ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா என்று முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

விக்கினேஸ்வரன் வடமாகாண சபையே நடாத்த முடியாதவர் என்று சுமந்திரன் நேற்றைய தினம் குறிப்பிட்டது தொடர்பாக ஊடக வியலாளர் கேள்வி கேட்ட போது எமது கட்சியைச்சேர்ந்தவரின் கருத்திற்கு வியாக்கினம் வழங்குது சரியான விடயம் அல்ல. இதற்கு விக்கினேஸ்வரன் தான் வழங்க வேண்டும்.

இன்றைய கால சூழல் அனைவரையும் ஒன்றிணைத்து செல்ல வேண்டும் ஒற்றுமையை குழப்பி அதனை விட்டு பேசிக்கொண்டு இருந்தால் அடிப்படை அரசியல் கொண்டு செல்வதில் பிரச்சனை உள்ளது. மகிந்த ராஜபக்ச பிள்ளையானை நம்பி பொலிஸ் அதிகாரம் கொடுக்கலாமா என்று கேட்டிருந்தார்.

அதற்காகவே முன்னாள் நீதியரசரை களம் இறக்கி பொலிஸ் அதிகாரம் நிதி அதிகாரம் வழங்குமாறு கோரியிருந்தோம் எல்லாருடைய விருப்பத்திலேயே அந்த தெரிவு இடம்பெற்றது என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வாழைச்சேனையில் ரீ 56 ரக துப்பாக்கி இரண்டு மற்றும் வாளுடன் மௌலிவி ஒருவர் கைது

கனகராசா சரவணன்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பதுறியா நகரில் மௌலவி ஒருவரை 30-07-2024 செவ்வாய்க்கிழமை இரவு இரு ரீ 56 ரக துப்பாக்கி ரவைகள் வாளுடன் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவ அரலகங்வில விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலன்னறுவ இராணுவப் புலனாய்வுப்பிரிவினர்களுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினையடுத்து அதிரடிப்படை சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணியுமான வருன ஜெயசுந்தரவின் ஆலோசனைக் கமைய அரலகங்வில விசேட அதிரடிப் படையினர் சம்பவதினமான அன்று இரவு 10 மணிக்கு குறித்த மௌளவியின் வீட்டை சுற்றுவளைத்து சோதனையிட்டனர்.



இதன் போது வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரு ரீ 56 ரக துப்பாக்கி துப்பாக்கி ரவைகள் 59, மெகசீன் 2, பைனோ 1, வாள் 1 ஆகியற்கை கைப்பற்றியதுடன் அவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட மௌலவியை மன்னம்பிட்டி விசேட அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டுவருவதுடன் இவரை கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் ஒப்படைப்பற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர்.

# மட்டக்களப்பில் மண் அகழ்வு அனுமதிக்கு 15 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய இராஜாங்க அமைச்சரின் செயலாளர் உட்பட இருவர் ஊழல் ஆணைக்குழுவால் கைது



மட்டக்களப்பில் ஆற்று மண் அகழ்வதற்கான அனுமதி வழங்க கட்டிட ஒப்பந்தகார் ஒருவரிடம் 15 இலச்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் செயலாளர் மற்றும் அவரது கட்சி இணைப்பாளர் உட்பட இருவரை வியாழக்கிழமை (1) கல்லடி கடற்கரையில் மறுவேடத்தில் இருந்த இலஞ்சஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த கட்டிட ஒப்பந்தம் செய்துவரும் கம்பனி ஒன்று மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப்பகுதியான பிரதேசத்தில் உள்ள பகுதியில் 63 ஆயிரம் கீப் ஆற்று மண் அகழ்வதற்காக அனுமதியை பெறுவதற்காக கம்பனி உரிமையாளர் இராஜாங்க அமைச்சரின் மண்ணுக்கு பொறுப்பான இணைப்பாளரை நாடியுள்ளனர்.

இணைப்பாளர் இது தொடர்பாக அமைச்சரின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து இவர்கள் இருவரும் இணைந்து அதற்கான அனுமதியை அமைச்சரிடம் பெற்றுதருவதாகவும் அதற்கு 15 இலச்சம் ரூபா இலஞ்சமாக தருமாறு கோரியுள்ளார்.

இந்த நிலையில் கட்டிட கம்பனி ஒப்பந்தகாரர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினை நாடியதையடுத்து அவர்களின் ஆலோசனைக்கமைய ஆற்று மண் அனுமதிக்காக இலஞ்சம் கோரிய பணத்தை தருவதாக அமைச்சரின் இணைப்பாளர் செயலாளருக்கு அறிவித்தனர்.

இதனை தொடர்ந்து சம்பவதினமான 01-08-2024 அன்று காலையில் மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் (பீச்) பகுதியில் இலஞ்சஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு அமைச்சரின் செயலாளர் மற்றும் இணைப்பாளர் ஆகிய இருவரும் வாகனம் ஒன்றில் வந்தடைந்து அங்கு காத்திருந்த கட்டிட ஒப்பந்தகாரரிடம் இலஞ்சம் கோரிய பணத்தை வாங்கும்போது அங்கு மாறு வேடத்தில் இருந்த இலஞ்சஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் அவர்களை சுற்றிவளைத்து கைது செய்ததுடன் 15 இலச்சம் ரூபா பணத்தை கைப்பற்றினர்.

இதில் கைது செய்த இருவரையும் பொலன்னறுவை பொலிஸ் தலைமையத்திற்கு கொண்டுசென்று விசாரணையின் பின்னர் நீதிமன்றி ஆஜர்படுத்தி கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த அமைச்சரின் சகோதரனும் அவரின் முன்னாள் செயலாளரும் கடந்த 2022ம் ஆண்டு காணிவிவகாரம் ஒன்றிற்கு ஒருவரிடம் மட்டக்களப்பு நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து 15 இலச்சம் ரூபா இலஞ்சமாக வாங்கிய நிலையில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆதரவில்

நூல் வெளியீட்டு விழா

அன்புடையீர்,

ஆகஸ்ட் 24, 2024 சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு பைரவி நுண்கலைக்கூடக் கல்லூரி மண்டபத்தில் (27 Casebridge Ct Unit 5, Scarborough, ON M1B 4Y4 ) 'பூவழகு கனிச்சுவை'(கவிதைத் தொகுதி) , 'குறுக்கெழுத்துப் புதிர்ப் போட்டித் தொகுதி (பாகம் 11) ஆகிய எனது இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்து ஆதரவு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் .

அன்புடன்

மார்க்கம் சந்திரன்

(சந்திரன் வேலாயுதபிள்ளை)

chandranvela07@gmail.com

416-844-7453

# வடக்கு பாடசாலைகளுக்கு இடையேயான நீச்சல் போட்டியில் ஊர்காவற்றுறை நம்பாட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு 18 பதக்கங்கள்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையேயான நீச்சல் போட்டியில் ஊர்காவற்றுறை நம்பாட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை 18 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான நீச்சல் போட்டி கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் டென்ஸில் ராஜ் 2 தங்கம் 1 வெள்ளி, கனிமுகிலன் 2 தங்கம் 1 வெள்ளி, கனிஷ்ரா 1 தங்கம், யனுஷன் 3 வெள்ளி, நிஷாந்த் 1 வெள்ளி, 1 வெண்க லம். சனுசா 1 வெள்ளி பதக்கங்களை கைப்பற்றினர்.

நிலே நீச்சல் போட்டியில் 14 வயது மற்றும் 16 வயது பிரிவில் ஆண்கள் அணிகள் தலா இரண்டு வெள்ளிப் பதக்கங்களை பெற்றன.

ஒட்டுமொத்தமாக இந்தப் போட்டியில் 5 தங்கப் பதக்கங்களையும் 11 வெள்ளிப்பதக்கங்களையும். 2 வெண்கல பதக்கங்களையும் தம்பாட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை கைப்பற்றி சாதனை படைத்தது.



# சாவகச்சேரி நீதிமன்றுக்கு வந்தது வைத்தியர் அர்ச்சுனாவின் வழக்கு!

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மீதான வழக்குகள் 31/07 புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி அ.யூட்சன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வைத்தியர்களை தொலைபேசியில் அச்சுறுத்தியமை, பேசித் தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட 5வழக்குகளே குறித்த தினத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வைத்தியர் அர்ச்சுனா சார்பாக சட்டத்தரணி ஸெ லஸ்ரின் ஆஜராகியிருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனா ஊழல் - மோசடிகளை தடுக்கும் முகமாகவே கடமை நேரத்தில் வைத்தியர்கள் வெளியே செல்வதனைத் தடுத்திருந்தார் எனவும் - வைத்தியர்கள் கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றிவிட்டு பின்னர் மேலதிக நேரக் கடமை என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தை சூறையாடுவதாகவும் அவர் தனது வாதத்தின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்போது இரு தரப்பு விவாதங்களையும் கவனத்தில் எடுத்த நீதிபதி 5வழக்குகளையும் எதிர்வரும் செப்டம்பர் 11ஆம் திகதிக்கு தவணையிட்டுருந்தார்.



அதேநேரம் வைத்தியர் அர்ச்சுணா சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்து தனது தொலைபேசி மற்றும் பணத்தை பறித்தமைக்காக வைத்தியர்கள் மீது தொடுத்த வழக்கும் குறித்த தினத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிர்வரும் செப்டம்பர் 11 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு முன்பள்ளிகள் இணைந்து நடத்திய "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டு விழா!





பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தினேஸ் முன்பள்ளி, வளர்பிறை முன்பள்ளி, உதயதாரகை முன்பள்ளி மற்றும் அறத்தி நகர் முன்பள்ளி என நான்கு முன்பள்ளிகள் இணைந்து செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா (30-07-2024) கச்சார்வெளி செல்வபுரம் தினேஸ் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வானது பிற்பகல் 2.30 மணியளவில் விருந்தினர்கள் மாலை அனுவத்து அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றி தேசிய கொடி மற்றும் பாடசாலை கொடிகள் ஏற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆரம்ப முன்பருவ அபிவிருத்தி பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் பொ.விஜயநாதன், சிறப்பு விருந்தினர்களாக உப அதிபர், கிராம அலுவலகர்கள் மற்றும் முன்பள்ளி பிரதேச இணைப்பாளர் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பளை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர், ஏழ்மைக்கை கைகொடுக்கும் உறவுகள் இணைப்பாளர், நலன் விரும்பிகள் பெற்றோர்கள் மாணவ செல்வங்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி இருவர் படுகாயம்!

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் ஏ-9வீ தியில் யாழ். நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தாயும் மகளும் இத்தாவில் பாடசாலை ஒன்றிற்கு திரும்ப முற்பட்ட வேளை எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அங்கிருந்த இளைஞர்களால் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ஆங்கில தின போட்டி ஒன்றிற்காக தனது மகளை பாடசாலைக்கு ஏற்றி சென்ற வேளையே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் வீதியில் மயங்கி விழுந்த முதியவர் பரிதாபமாக உயிரிழப்பு!

வீதியில் மயங்கி விழுந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி 01-08-2024 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசித்து வந்த க.கியூமர் (வயது 75) என என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 27ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வு ஒன்றுக்கு சென்றுவிட்டு, மோட்டார் சைக்கிளில் கடற்கரை வீதியூடாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார். இதன்போது அவருக்கு திடீரென தலைச்சுற்று ஏற்பட்டு கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் 27ஆம் திகதி இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். தலையில் அடிபட்டதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# அரச பயங்கரவாதிகளினால் கொல்லப்பெற்ற ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ். ஊடக அமையத்தின் எற்பாட்டில் ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் 01-08-2024 அன்று யாழ். ஊடக அமையத்தில், யாழ் ஊடக அமைய த்தின் தலைவர் து.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

மறைந்த ஊடகவியாளர் சகாதேவன் நிலக்சனின் திருவுருவப்படத்திற்கான பிரதான சுடனினை ஊடக அமையத்தின் செயலாளர் நிதர்சன் எற்றிவைத்தார்.

பிரதான மலர் மாலையினை ஊடக அமையத்தின் முன்னாள் செயலாளர் அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

ஏனைய ஊடகவியாளர்கள், மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினர்.





பருத்தித்துறை - மாதனை

# அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார்

புனராவர்த்தன நவகுண்டபக்ஷ

# மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

## 06.09.2024

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 31.08.2024 சனிக்கிழமை<br>அதிகாலை 5.30 மணிமுதல்<br>காலை 06.30 மணிவரை | 05.09.2024 வியாழக்கிழமை<br>காலை 09.00 மணிமுதல்<br>மாலை 04.00 மணிவரை | 06.09.2024 வெள்ளிக்கிழமை<br>காலை 0649 மணிமுதல்<br>காலை 08.43 மணிவரை |

விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

இலங்கை திருநாட்டில் வடபகுதி சமுத்திரம் புடைசூழ பருத்தித்துறை மாதனைப் பகுதியில் கற்பகம் என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கும், வர்ண வேலைகள், சிற்ப வேலைகள் கொண்ட பரிவார மூர்த்தங்களுக்கும், இராஜ கோபுர சகித தூபிகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது. நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆவணி மாதம் 21ம் நாள் (06.09.2024) வெள்ளிக்கிழமை கன்னி இலக்கினமும் அத்த நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 06.49 மணியிலிருந்து 08.43 மணிவரையுள்ள சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

அத்தருணம் நடைபெறுகின்ற அனைத்து கிரியைகளிலும் ஆசார சீலர்களாக அடியவர்கள் வந்து, தங்களால் இயன்ற நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி, போன்றவற்றைச் செய்து விநாயகப் பெருமானுடைய திருவருட் பேற்றினைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ விநாயகப் பெருமானைத் தொழுவோமாக!

## கிரியைகள் விபரம்

01ம் நாள் — ஆவணி மாதம் 15ம் நாள் சனிக்கிழமை 31.08.2024 காலை 05.30 மணிக்கு விநாயகர் வழிபாடு. அனுக்ஞை. திரவிய சுத்தி. தனபூஜை. திரவிய விவாகம். கணபதி ஹோமம். பிரம்மச்சாரி பூஜை. கணபதி தாளம். இயந்திர பூஜை. பிரசாதம் வழங்குதல்

02ம் நாள் — ஆவணி மாதம் 16ம் நாள் ஞாயிற்றுக்கிழமை 01.09.2024 காலை 09.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. நவக்கிரக பூஜை. நவக்கிரக ஹோமம். தீபாராதனை. கோளறுப் பதிகம் பாராயணம். இயந்திர பூஜை. விபூதி பிரசாதம் வழங்கல் மாலை 05.00 மணிக்கு கிராம சாந்தி. பிரவேசபலி. பிரசாதம் வழங்கல்.

03ம் நாள் — ஆவணி மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை 02.09.2024 மாலை 04.00 மணிக்கு ரக்ஷோக்ன ஹோமம். திஷா ஹோமம். இயந்திர பூஜை. விபூதிப் பிரசாதம் வழங்குதல்.

04ம் நாள் — ஆவணி மாதம் 18ம் நாள் செவ்வாய்க்கிழமை 03.09.2024 காலை துர்க்கா லக்ஷ்மி. சரஸ்வதி கும்பபூஜை. சூக்த பாராயணம் ஹோமம். இயந்திரபூஜை. விபூதி பிரசாதம் வழங்கல். மாலை 04.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. வாஸ்து சாந்தி. விபூதி பிரசாதம் வழங்குதல்.

06.09.2024 மாலை 06.00 மணிக்கு பூஜை, வசந்தமண்டப பூஜை, விசேட மங்கள வாத்திய சகிதம் விநாயகப் பெருமான் வீதி வலம் வருதல்

05ம் நாள் — ஆவணி மாதம் 19ம் நாள் புதன்கிழமை 04.09.2014 காலை 05.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. தூபி ஸ்தாபனம். இயந்திர பூஜை. கோ பூஜை. தீபஸ்தாபனம். கங்கா பூஜை. சூரிய சங்கிரணம். மருத் சங்கிரணம். விபூதி பிரசாதம் வழங்கல். மாலை 04.00 மணிக்கு விநாயகர் வழிபாடு அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். தர்மத்வஜம். பிரசன்ன அபிஷேகம். கடஸ்தாபனம். கலாகர்ஷணம். யாத்திர ஹோமம். யாத்திர தானம். கும்ப யாக சாலை பிரவேசனம். யாகபூஜை. நவ அக்னி விபஜனம். 07.30 மணி தொடக்கம் 09.00 மணிவரை இயந்திர ஸ்தாபனம். விம்பஸ்தாபனம். அஷ்டபந்தனம். தீபாராதனை. திருமுறை பாராயணம். விபூதி பிரசாதம் வழங்கல்

06ம் நாள் — ஆவணி மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை 05.09.2024 காலை 08.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. விசேஷ சந்தி. பூத சுத்தி. யாகசாலா பிரவேசனம். யாக பூஜை. பாபநா அபிஷேகம். எண்ணெய்க்காப்பு சாத்துதல். திரவிய ஹோமம். தீபாராதனை. வேதத் திருமுறை பாராயணம். மாலை 06.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. விம்பசுத்தி. ரக்ஷா பந்தனம். நியாசம். யாகபூஜை. ப்ரசாதுதி. தீபாராதனை. வேதத் திருமுறை பாராயணம். குருமார் உபசாரம். விபூதி பிரசாதம் வழங்குதல்.

07ம் நாள் — ஆவணி மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை 06.09.2024 காலை 05.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. யாக பூஜை. மகா பூர்ணாகுதி. தீபாராதனை. அந்தர்பலி. பகிர்பலி. வேதத்திருமுறை. பாராயணம். ஆசீர்வாதம். யாத்திராதானம். கும்பங்கள் புறப்பாடு. காலை 06.49 மணிமுதல் 08.43 மணிவரை தூபி. இராஜகோபுர விமானங்கள் அபிஷேகம். மூல ஆலய மூர்த்தி. பரிவார மூர்த்தங்களுக்கும் மகா கும்பாபிஷேகம். கோ பூஜை. தசதர்சனம். திருமறைக் காட்டுப்பதிகம். மகாதீபாராதனை. எஜமான் அபிஷேகம். குருமார் சம்பாவனை. ஆசியுரை. மகா அபிஷேகம். பூஜை. விபூதி பிரசாதம் வழங்குதல்.

## பிரதிஷ்டா குருமணிகள் விபரம்

**ஆலய குரு**
பிரம்மஸ்ரீ நந்தகோப சர்மா
உபய கதிர்காமம்

**பிரதிஷ்டா பிரதமகுரு**
சிவப்பிரம்மஸ்ரீ ஸதாசிவ சுரேஸ்வரக்குருக்கள்
(சிவாகம பிரதிஷ்டா ஞானபானு, சிவாகம கிரியாநிதி சக்தியாகம ஜோதி)
லண்டன் ஈழபதீஸ்வர ஆலயம்.
அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம்
மாதனை ஸ்ரீ காளியம்மன் ஆலயம் ஆலய குரு.

**சர்வசாதகம்**
சிவப்பிரம்மஸ்ரீ ப.சனாதனசர்மா
(சாவகச்சேரி)
சிவப்பிரம்மஸ்ரீ சு.இராஜசேகரக்குருக்கள்
(இந்தியா. லண்டன்.)
சிவப்பிரம்மஸ்ரீ சிவாகம வித்யாநிதி
A.சந்தோஷ் சிவம் (MA)
(சைவாகம ஆச்சார்யா)
சிவப்பிரம்மஸ்ரீ சிவாகம சிரோன்மணி
K.சாமித்துரை குருக்கள் (பழனி)

**ஏனைய குருமார் விபரம்**

| | |
|---|---|
| சிவப்பிரம்மஸ்ரீ வே.ரமேஸ் குருக்கள் | (கண்டி) |
| சிவப்பிரம்மஸ்ரீ சி.சிவகுமாரக் குருக்கள் | (கல்வியங்காடு) |
| சிவப்பிரம்மஸ்ரீ சோ.துஷ்யந்தக் குருக்கள் | (பருத்தித்துறை) |
| சிவப்பிரம்மஸ்ரீ சி.வபுதாசக் குருக்கள் | (திக்கம்) |
| சிவப்பிரம்மஸ்ரீ செ.ரவிச்சந்திரக் குருக்கள் | (கோப்பாய்) |
| சிவப்பிரம்மஸ்ரீ செ.சுகுமாரக் குருக்கள் | (மல்லாகம்) |
| சிவப்பிரம்மஸ்ரீ சோ.லக்ஷ்மிநாராயண குருக்கள் | (சித்தங்கேணி) |
| சிவப்பிரம்மஸ்ரீ சிவ. பிரபாகர குருக்கள் | (திக்கம்) |
| சிவப்பிரம்மஸ்ரீ ம.குருநாதக் குருக்கள் | [illegible] |
| சிவப்பிரம்மஸ்ரீ சோ.கிரிதரக் குருக்கள் | (கொழும்பு) |
| சிவப்பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கை. ரதாங்கன் குருக்கள் | (மல்லாகம்) |
| சிவப்பிரம்மஸ்ரீ சு.துரைராஜசர்மா குருக்கள் | |
| சிவப்பிரம்மஸ்ரீ இ.ஜெய கிருஷ்ணன் குருக்கள் | (இணுவில்) |

**ஆசி வழங்கும் குருக்கள்**
சிவப்பிரம்மஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள்
(தர்ம சாஸ்தா குருகுல அதிபர். இணுவில்.)
சிவப்பிரம்மஸ்ரீ சுவாமிநாத ரவிக்குருக்கள்
(மாயபுரம் பாடசாலை குருகுல அதிபர். இந்தியா.)
சிவப்பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்
(முத்தமிழ் குருமணி கன்னாகம். கதிரமலை சிவன்கோயில்)

**கட்டட வேலை**
சௌவிரத்தன அன்ட் சன்ஸ்
கம்பொல

**திருப்பணி வேலைகள்**
மாதனையூர் மக்கள்

**சிற்பவேலை மற்றும் வர்ணவேலை**
சோமாஸ் சிற்பக்கலையகம்
தம்பிகாலை. தமிழ்நாடு. இந்தியா.
ஸ்ரீ முருகன் சிற்பாலயம்
கரவெட்டி

**பூமாலை அலங்காரம்**
ந.சிவநேசக் குருக்கள்
அல்வாய்

**ஒலி அமைப்பு**
சித்தி விநாயகர் ஆலயத்தினர்
தம்பருவளை. தும்பளை.

**யாகசாலை**
திரு.த.குகதாசன்
(நல்லூர்)

**ஒலி அமைப்பு**
கலைமகள் சவுண்ட்
அல்வாய்

**மங்கள வாத்தியம்**
M. அமல்ராஜ் குழுவினர்
பருத்தித்துறை.

**அருளுரை வழங்குபவர்கள்**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகர் ஞானசம்பந்த பரமாச்சாரி சுவாமிகள்
(நல்லை திருஞான சம்பந்த ஆதீனம்)

**உதவிகுருமார் விபரம்**

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ ம.ஸ்ரீவிஷ்ணுசர்மா | (தெல்லிப்பளை) |
| பிரம்மஸ்ரீ ல. சோமாஸ்சர்மா | (சித்தங்கேணி) |
| பிரம்மஸ்ரீ சி.ரமேஸ்சர்மா | (திருநெல்வேலி) |
| பிரம்மஸ்ரீ பா.பிரவின்சர்மா | (உருத்திரபுரம்) |
| பிரம்மஸ்ரீ ச.திவிசர்மா | (கண்டி) |

**தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்**

பிரசுர அன்பளிப்பு
கவிசஜா அச்சகம் - வவுனியா.

அடியவர்கள் கும்பாபிஷேகக் கிரியா காலங்களில் கலந்துகொண்டு வழிபாடாற்றுவதுடன் அபிஷேக, பூஜா, ஹோம திரவியங்களை உபகரித்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்

கவிசஜா அச்சகம் - வவுனியா - 024-2227228 / 0776144410

# "இலங்கை கடலில் உயிரிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தை நாம் வலியுறுத்தி வருகின்ற போதும் இந்திய அரசும் அந்நாட்டு மீனவர்களும் அதனைக் கேட்பதாக இல்லை."

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (01-08-2024)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த மையின் ஏற்பட்ட கைது நடவடிக்கையின் காரணமாக இந்திய மீனவரின் உயிரிழப்பு சம்பவம் இடம்




பெற்றுள்ள போதும், குறித்த சம்பவங்கள் இடம் பெறக் கூடாது என இந்திய மீனவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதும் இதுவரை இவர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் 01-08- 2024அன்று வியாழன் (1) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் சீ.எப்.சிறிலங்கா என அழைக்கப்படும் இலங்கை கடற்பரப்பில் நுழைந்து நெடுந்தீவு கடற்பரப்பில் சென்ற நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்ய முயன்ற போது துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் விடையங்களில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகை உடன் நிறுத்தப்பட வேண்டும். இதனால் ஏற்படக்கூடிய பாரிய இழப்புக்கள், கைது நடவடிக்கைகள், மீனவர்களாகிய உங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பியல் சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் ஏற்கனவே உங்களுக்கு வலியுறுத்தி வருகிற விடயங்களையே மீண்டும் கூற விரும்புகிறேன்.

கடலிலே பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுகின்ற பாதுகாப்பு தரப்பினர் அடிக்கடி கடலிலே கைது செய்கின்ற நடவடிக்கை களை மேற் கொள்ளுகின்றனர்.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர் ஒருவரை கைது செய்ய முயன்ற போது கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

அதே போன்றுதான் நள்ளிரவு நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எமது எல்லையினுல் அத்துமீறி வந்ததன் காரணமாக இப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பினுல் அத்துமீறி நுழைந்து மீன் வளங்களை சூறையாடுவதற்கும், கடல் வளங்கள் காவு கொள்ளபடுவதையும் தடுப்பதே கடற்படையினரின் கடமை. அங்கே கடமை ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடமையின் நிமித்தம் ஒருவரின் கைதின் போது காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டிய விடையம். எனினும் எல்லை தாண்டி வருகின்ற விடையத்தை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதும் இந்திய அரசாங்கமும் சரி,இந்த நாட்டு மீனவர்களும் சரி காது கொடுத்து கேட்பதும் இல்லை.

தொடர்ந்து இவ்வாறான ஒரு சம்பவங்கள் இடம் பெறக் கூடாது என்பதற்காகவே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இனியாவது அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லை தாண்டி வருகின்ற போது இடம் பெறுகின்ற கைதுகள், இவ்வாறான துன்பியல் நிகழ்வு களை எதிர் காலத்தில் இரு நாட்டு மீனவர்களும் சந்தித்து விட கூடாது என்பது தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவமானது தமிழக மீனவர்களின் செயற் பாட்டினாலேயே நிகழ்ந்துள்ளது. இதற்காக அங்கே பாரிய அளவில் போராட்டங்கள் இடம் பெறுகின்றது. இந்த போராட்டம் அவர்களின் உரிமை சார்ந்தது.

அதில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. இருந்தாலும் எமக்கு மன வேதனையை ஏற்படுத்துகிறது. அங்குள்ள பெண்கள் மற்றும் தாய்மாரின் அழு குரல் களை ஊடகங்கள் மூலம் காண்கின்றோம். வேதனையை ஏற்படுத்துகிறது.

இவ்வாறான சம்பவங்களை தடுக்க தொடர்ந்து நாங்கள் இந்திய மீனவர்களை கலந்துரையாடலுக்கு அழைக்கின்றோம். பேச்சுவார்த்தையை ஏற்படுத்தி அதனூடாக ஒரு தீர்வை எட்டுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# முனைவர் பட்டம் பெற்றவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் புதிய செயலாளராக பதவியேற்றுள்ள தமிழ் கல்வியாளருமான வாசுகி நகுலராஜாவை கௌரவிக்கும் இணைய வழி நிகழ்வு

(பின் பக்கத் தொடர்ச்சி)



கனடாவில் தமிழ் மொழி மற்றும் கலை இலக்கியம் ஆகிய துறைகளில் நன்கு அறியப்பெற்றவரும் ஒன்றாரியோ அரசுப் பணியில் உயர் பதவியொன்றை வகிப்பவரும் தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் புதிய செயலாளராக பதவியேற்றுள்ள தமிழ் கல்வியாளருமான வாசுகி நகுலராஜாவை கௌரவிக்கும் இணைய வழி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று காலை கனடா நேரப்படி ஆரம்பமானது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் ரவி கனகசபை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த இணைய வழி பாராட்டு வைபவத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், மற்றும் தமிழ் ஆர்வலர்கள் தமிழாசிரியைகள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

அங்கு உரையாற்றிய அனைவரும் முனைவர் வாசுகி நகுலராஜா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் ரிவிஜ தொலைக்காட்சியில் நடத்திய சிறுவர்களுக்கான தமிழ் மொழி தொடர்பான நிகழ்ச்சியின் பயன்பற்றியும் அவர் தொட ர்ச்சியாக கனடிய தமிழர் சமூகத்தின் பயன் கருதி அர்ப்பணிப்போடு ஆற்றி வரும் பணிகள் பற்றியும் உரையாற்றினார்கள்.

குறிப்பாக ரிவிஜ தொலைக்காட்சியில் முன்னர் பணியாற்றிய வி. என். மதியழகன் அவர்கள் வாசுகி நகுலராஜாவின் பன்முகப் புலமை பற்றியும் ரிவிஜயில் அவர் நடத்திய சிறுவர்களுக்கான மொழி சார்ந்த நிகழ்ச்சியின் வெற்றி பற்றியும் புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து பலர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அவர்களில் பலர் திருமதி வாசுகி நகுலராஜாவின் துணைவர் நகுலராஜா அவர்கள் பற்றியும் அவர்கள் இருவரும் பெற்று வளர்த்து உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ள புதல்விகள் இருவர் ஆகியோர் பற்றிய சிறப்புக்களையும் வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியில் திருமதி வாசுகி நகுலராஜா தனது பதிலுரையில்பல பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

# போரிலா உலகு வேண்டும்

வேண்டாம் இனியொரு வக்கிரப்போர்
விதவைகள் எண்ணிக்கை வியாபிக்க வேண்டாம்
ஊனமுற்றோர் உலகில் உருவாக வேண்டாம்
நாட்டு நகரங்கள் நாசமாக வேண்டாம்
சுதந்திர பூமி சுடுகாடாய் மாறவேண்டாம்
அனாதைக் குழந்தைகளின் அழுகை ஒலி வேண்டாம்
அவல ஓலம் அற்றுப் போகட்டும்
காடு கனிகள் கந்தக நிலமாய் மாறவேண்டாம்
பஞ்சம் பட்டினி பாரில் பரவவேண்டாம்
இரத்த ஆறு எங்கும் ஓடவேண்டாம்
எலும்பும் தசையும் இறைய வேண்டாம்
இடப்பெயர்வு இவ்வுலகில் வேண்டாம்
இருக்கப் படுக்க இடமின்றி அலையவேண்டாம்
அணு ஆயுதங்கள் அகிலத்தில் ஒழியட்டும்
அவற்றை ஆக்கும் நாடுகள் அருகட்டும்
ஆயுதம் விற்கும் அறமிலா நாடுகள்
அறவழிக்கு அவசரமாய்த் திரும்பட்டும்
போட்டிகள் குறைந்து புது எண்ணம் மலரட்டும்
சண்டாளர் சன்னதம் சத்தமின்றி ஒழியட்டும்
சன்மார்க்க நெறி தரணியெங்கும் ஓங்கட்டும்
சமத்துவம் எங்கும் சங்கொலித்து மலரட்டும்.

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# இவ்வார ராசிபலன்

**02-08-2024 வெள்ளி தொடக்கம் 08-08-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** பணிவான பேச்சு பணம் வரவு தரும் வாரம். விவேகம் கூடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மதிநுட்பத்தோடு செயல்படுவீர்கள். நட்டமில்லாமல் நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். உளுந்து தானம் செய்வதால் சிறந்த பலனை அடையலாம். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழிலமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும் வகையில் அமையும். ஊக்கம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாளைய கனவு நனவாகும். குதூகலம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 4,9,2,7
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,X




**ரிஷபம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். தனம் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். நன்மைகள் பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் நிறைந்திருக்கும். திருப்தியான காலம். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். உடல் சோர்வு ஏற்பட்டு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Y




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும் வாரம். முன்னேற்றமான காலமாக அமையும். மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மையுண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். எதிர்ப்புக்கள் விலகும். வசந்தம் தேடி வரும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செய்தி அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலைபளு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றித் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. சிறப்புக்கள் சேரும். வெறுப்புகள் அகலும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். தொட்டது துலங்கும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் கடுமையாகும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். உறவினர் பகை மாறும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,9,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். விரோதங்கள் விலகும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய் வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். ஆண்களின் அதிகாரம் உயரும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தன லாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். தடைகள் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். குதூகலமான மனநிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**கன்னி:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். விரக்திகள் மறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச்சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கடுமையான காலம். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உள்ளம் மகிழும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான தருணம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். மனக்குழப்பம் தீரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். வேலை பளு குறையும். சந்தோஷம் அலைமோதும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் கச்சைகள் தீரும். மனம் அமைதி தேடி அலைவீர்கள். காதலில் வெற்றிக் காண்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. போட்டி பொறாமைகள் விலகும். திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சீராகும். முகப்பொலிவு கூடும். திட்டமிட்ட செயல் வெற்றிப் பெறும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். அரசு வழி ஆதாயம் பெருகும். பணியில் உயர்வு உண்டு. வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். மன அமைதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z




**துலாம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். பணியில் உயர்வு உண்டு. அறிவாற்றல் பளிச்சிடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிடைக்கும். பொறாமைகள் விலகும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். விலை உயர்ந்தப் பொருட்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பொருளாதாரம் உயரும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். புண்ணியம் சேரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். பித்தளை தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் விலகும். திருமணப் பேச்சு வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். நிர்வாகத் திறமை கூடும். எதிர்பார்ப்புக்கள் கூடும். பொறுப்புக்கள் கூடும். முன்கோபத்தைத் தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணத்தட்டுப்பாடு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். அற்புதமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பணவரவும், மனநிறைவும் தரும் வாரம். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் முன்னேற்றம் அடைவீர்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வரம் தரும் காலம். நட்பு வட்டம் விரிவடையும். ஆசைகள் நிறைவேறும். பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன்சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும்.

(தொடர்ச்சி 30 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1106

## மாணிக்கப்பிள்ளையார் கோயில் அட்டன், மலையகம்

*" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலாற் கூப்புவர் தம் கை. "*

ஈழத்திருநாட்டின் இதயம் போன்று மலையகம் காணப்படுகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாக இப்பகுதி விளங்குகின்றது. மலைகளும் குன்றுகளும் உயர்ந்தோங்கி நிற்க, அவற்றிடையே சலசலத்து ஓடும் ஆறுகளும் அருவிகளும் எழில் பெருக்க, பச்சைப்பசேலென்ற இயற்கை எழிலோடு, கண்கவர் பூமியாக விளங்குவது மலையகப் பிரதேசமெனில் அது மிகையாகாது. பச்சைமலைக்குன்றின்மேல் பரிவார மூர்த்திகள் சகிதமாக எழுந்தருளியுள்ள மாணிக்கப்பிள்ளையார் கோயில், அருளும் அற்புதமும் ஒருங்கே அமைந்த கோயிலாகக் காணப்படுகின்றது. இந்தியாவில், தமிழகத்திலுள்ள திருச்சி உச்சிப்பிள்ளையார் மலைமீது எழுந்தருளியதைப்போன்று, அட்டன் மாணிக்கப் பிள்ளையார் கோயிலும் அமைந்து காணப்படுகின்றது. சமதரையிலிருந்து நூற்றியெட்டுப் படிகளேறி உச்சியை அடைந்து, ஆலயத்தைத் தரிசிக்கும் முறையில் இக்கோயில், உயர்வான பிரதேசத்திலே அமைந்து காணப்படுகின்றது.

இந்துசமயத்திலே யாவற்றிற்கும் மேலான பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறுவகைப்படும். இவை அறுவகைச் சமயங்களெனப் போற்றப்படுகின்றது. இறைவனை எந்த வடிவிலே நாம் வழிபடுகின்றோமோ அந்த வடிவிலே இறைவன் அருள்புரிவர். ஆறுவகைச் சமயங்களிலே கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படும். இவர்களைக் காணாபதர் என்றழைப்பர். ஈழத்திலே ஏனைய இந்துமத வழிபாடுகள் பெற்ற பிரபல்யத்தை விநாயக வணக்கம் பெறவில்லை. எனினும் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்கு முன், கணபதியை வணங்கியே ஆரம்பிப்பது இந்துமரபாகக் காணப்படுகின்றது.

கோபுரம், விமானம் என எதுவுமே இல்லாமல் அரசமரத்தடியில் வானமே கூரையாகக்கொண்டு எழுந்தருளி இருக்கும் தெய்வம் பிள்ளையார். சர்வலோக மாதாபிதாவின் மூத்தபிள்ளையாதலால், இவரைப் பிள்ளையார் என அழைப்பர். பிரணவத்திலிருந்தே சகல பிரபஞ்சங்களும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் வடிவமாகக் கருதப்படுவபவர் பிள்ளையார். பிள்ளையாரின் ஆனைமுகம் மற்றும் வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகத் தோன்றும்.

ஈழத்திலே இந்துக்கள் மட்டுமன்றி, பௌத்தர்களும் கணபதியை வழிபாடு செய்கின்றனர். மற்றும் யாவா, பர்மா, கம்போடியா, திபெத், மங்கோலியா, யப்பான், நேபாளம், சீனா போன்ற நாடுகளிலும், வெவ்வேறு பெயர்களில் கணபதி வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். வேதகாலத்தில் கணபதி வழிபாடு காணப்பட்டுள்ளமையை “கணாம் த்வாம் கணபதிம் அவாமஉற” என்று யசுர் வேதத்திலுள்ள சத ருத்திரியத்திலும், வாஜ சநேஜ சம்உறிதையிலும் விநாயகர் பற்றிய குறிப்புக்களும், அதில் கணபதிக்கு வணக்கம் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் ஐதரேய பிராஹ்மணத்திலே, விநாயகர் விக்கினங்களைத் தீர்த்து வைப்பவர், சாந்தப்படுத்துபவர் என்ற குறிப்புள்ளது. கணபதி உபநிடதத்திலே விநாயகரைப்பற்றிக் கூறும்பொழுது எல்லாம் நீயே, படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் நீயே என்றும் கூறப்பட்டுள்ளதோடு, ஏரம்பஉபநிடதத்திலும் விநாயகரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டு, விநாயக வணக்கத்தின் தொன்மையைப் புலப்படுத்துகின்றது.

விநாயகர் வழிபாடு தொன்மையான வழிபாடு என்பதையும், விநாயகரின் பெருமையையும் இதிகாச புராணங்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளன. விநாயகர்புராணம், முக்கலபுராணம், கணேசபுராணம், பவிஷ்யபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், போன்ற புராணங்கள் மூலமும், கணேசகீதை, கணேசகல்ப்பம், விநாயகபரத்துவம், விநாயகர் கவசம், இராமாயணம், மகாபாரதம், போன்ற சமய இலக்கியங்களின் மூலமும் விநாயகப் பெருமானின் பெருமையை அறியலாம்.

வேதகாலத்திலிருந்து இன்றுவரை அற்புதங்களாலும், மகிமைகளாலும், இடர்நீக்கும் தெய்வமாக மக்கள் மனதில் நிலைத்த பிள்ளையார், ஈழத்தின் மத்தியபகுதியில் அமைந்துள்ள அட்டன் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து, பல அற்புதங்களைக் காலத்திற்குக் காலம் நிகழ்த்தி வருகின்றார். இங்கு எழுந்தருளியுள்ள மாணிக்கப்பிள்ளையாரை அவர் புரிந்த அற்புதங்களின் காரணமாக, “ஆலயக்கல்சுமந்த ஆனைமுகப் பெருமான்” என்றும், “பாலஸ்தாபனம் செய்யவந்த பரமனின் பிள்ளை” என்றும் பல்வேறு திருநாமங்களைச் சூட்டி, இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சியடையவர்.

மாணிக்கப்பிள்ளையார் கோயில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமைகளையும் ஒருங்கேகொண்டு காணப்படுகின்றது. பாறையைக் குடைந்து தோண்டிய ஊற்றுக் கிணறு உள்ளே அமைந்திருப்பது, ஆலய மகிமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. மலையகமெங்கும் பல்வேறு வணக்கமுறைகள் சிறப்புப்பெற்று விளங்கியபோதிலும், 1963 ஆம் ஆண்டளவில், அட்டன்பிரதேசத்தில் மாணிக்கப்பிள்ளையாருக்கு ஆலயமொன்றை அமைக்க வேண்டுமென, இப்பிரதேச இந்துமகாசபை ஆலயநிர்வாகக்குழுவினர் தீர்மானித்திருந்தனர். சபையினரின் தீர்மானத்தின்படி, மாணிக்பிள்ளையார் ஆலயத்தை நிறுவுவதற்கான அடிக்கல்நாட்டும் விழாவிற்குரிய சுபநேரங்கள் பெரியவர்களால் கணிக்கப்பட்டது.

இத் திருப்பணியை ஆரம்பித்து வைப்பதற்காக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல சிற்பாச்சாரியார் ஒருவரை ஆலய நிர்வாகம் ஏற்பாடு செய்தது. இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதம் தெரிவித்திருந்த சிற்பாச்சாரியார், சுகவீனம் காரணமாகக் குறிப்பிட்ட நாளன்று வருகை தருவதில் தாமதம் ஏற்பட்டது. சகல ஏற்பாடுகளும் நிறைவுபெற்று ஆலய அடிக்கல் நாட்டும் திருநாளை எதிர்பார்த்திருந்த நிர்வாகத்தினரும், பக்தர்களும் மனச்சோர்வோடு எல்லாம் அவன் செயல் என்று ஆனைமுகத்தானை உளமாரப் பிரார்த்தனை செய்தவண்ணமிருந்தனர்.

தொடரும்...




# அரச ஆதரவுடனேயே தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றன என்கிறார் சுமந்திரன்



அரச ஆதரவுடனேயே தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் 28-07-2024 அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வாரம் முழுவதும் நாங்கள் கறுப்பு யூலை என்று அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். கடந்த 40 வருடங்களுக்கு மேலாக, 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே 24 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரைக்கும் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய வன் செயல்களை நினைவு கூருகிற ஒரு வாரமாக இதனை நாங்கள் அனுஷ்டிக்கிறோம்.

இந்த வாரத்திலே பல காலமாக பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் நடத்தப்பட்டு வந்து இறுதியிலே 83 ஆம் ஆண்டு மிக மிக மோசமான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அரச இயந்திரங்களினாலே அரசாங்கங்களுடைய நிகழ்ச்சி நிரலிலே தான் இந்த வன்முறைகள் காலத்துக்கு காலம் நடைபெற்று வந்திருக்கின்றன.

50 ஆம் ஆண்டுகளிலே அதன் பின்னர் 71 ஆம் ஆண்டு 81 ஆம் ஆண்டு என்று சொல்லி தொடர்ச்சியாக தெற்கிலே வாழ்கிற தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அந்த வன்முறைகளிலே முக்கிய விடயத்தை அவர்கள் கண்ணும் கருத்துமாக அவதானித்திருக்கிறார்கள். அது தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை சீரழிக்கிறது எங்களுடைய வர்த்தகர்கள் பொருளாதாரத்தை நிமிர்த்தி வைத்திருந்தவர்கள் அவர்களுடைய வர்த்தக ஸ்தாபனங்கள் கடைகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த அரச நிகழ்ச்சி நிரலிலே தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை அழிப்பது ஒரு பெரிய முக்கிய பங்காக இருந்திருக்கிறது.

இப்பொழுது நாடு வங்குரோத்து அடைந்திருக்கின்றது தங்களுடைய பொருளாதாரத்தையும் சீரழித்து விட்டார்கள் எங்களை அழிப்பதாக நினைத்துக்கொண்டு இறுதியிலே நாட்டினுடைய பொருளாதாரத்தையும் சீரழித்திருக்கிறார்கள். எங்களுடைய வர்த்தகர்களுடைய பொருளாதாரத்தை அழித்தது மட்டுமல்ல அதன் பிரதி பலனாக பல ஆற்றல் உள்ளவர்கள் நாட்டை விட்டு வெளியே போய்விட்டார்கள். அவர்கள் தனவந்தர்களாக வாழுகிறார்கள் இந்த வன்முறைகளினாலேதான் நாட்டிலே அதற்கு பிறகு மூன்று தசாப்த யுத்தமும் நடந்து அதற்கும் பல விதமான செலவீனங்கள் ஏற்பட்டன.

வன்முறைகள் நடைபெறுகிற காலத்திலே கொழும்பில் வாழ்ந்தவன் என்ற ரீதியிலே எனக்கு நேரடியான அனுபவங்கள் உண்டு 77 ஆம் ஆண்டிலே அரசாங்கம் வன்முறையாலே பாதிக்கப்பட்டவர்களை தொடர்ச்சியாக தலைநகரிலே வைத்து பாதுகாக்க முடியாது என்று சொல்லி எங்களையெல்லாம் விமானத்திலே இலவசமாக அனுப்பி வைத்தார்கள் 83 ஆம் ஆண்டு பயங்கர வன்முறை நடந்த போது நாங்கள் எங்கள் வீடுகளை விட்டு ஓடி வேறு இடங்களிலே புகலிடம் எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது முதலாவதாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட அகதிக் கப்பலிலே வந்தவன் நான். மூன்று நாட்களாக தொடர்ச்சியாக எதுவித உணவுமில்லாமல் வந்திருந்தேன் ஏனென்றால் 29 ஆம் திகதி அந்த கப்பல் துறைமுகத்திலே இருந்து புறப்பட இருந்த வேளையிலே மிக மோசமான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு பலர் கொல்லப்பட்டார்கள் ஆகையினாலே இனிமேலும் கப்பல் துறைமுகத்திலே இருப்பது பாதுகாப்பில்லை என்று சொல்லி உண்வு இல்லாமலே கப்பல் புறப்பட்டது.

நாங்கள் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த பிறகுதான் மூன்று நாட்களுக்கு பிறகு முதல்தடவையாக உணவு உட்கொண்டோம் இப்படியான பலவிதமான துன்பங்கள் தொல்லைகளை விட மோசமான துன்பங்கள் பலருக்கு ஏற்பட்டிருக்கின்றன. எங்களுடைய மக்கள் உயிரை இழந்திருக்கிறார்கள் உடமைகளை இழந்திருக்கிறார்கள்.

என்னுடைய அனுபவத்திலே நான் சொன்னதைப் போல விமானம் மூலமாகவும் கப்பல் மூலமாகவும் அரசாங்கமே எங்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பது என்பது எங்களுடைய தாயக பூமியிலேதான் நாங்கள் பாதுகாப்பாக இருப்போம் என்று அரசாங்கமே ஏற்றுக்கொண்ட ஒரு விடயம். பல இடங்களிலே நான் தெற்கிலே சிங்கள மக்களோடு பேசுகிற போது இதை சொல்லியிருக்கிறேன். தாயகம் என்று சொல்லுகிற போது அது சிலருக்கு பிடிப்பதில்லை நான் இந்த உதாரணங்களைத்தான் சொல்லி சொல்லுகிறேன் இது என்னுடைய தாயகம் ஆனபடியினால் தான் இங்கே நான் பாதுகாப்பாக இருப்பேன் என்று அரசாங்கமே ஏற்றுக்கொண்டு என்னை என்னுடைய வீட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறது இந்த இரண்டு தருணங்களிலும் ஆகையினாலே நாங்கள் வடக்கு கிழக்கை எங்களுடைய தாயகம் என்று சொல்லுவதை மாறி மாறி வந்த இலங்கை அரசாங்கங்களே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதுதான் உண்மை ஆகையினால் தான் எங்களுடைய பாதுகாப்பான பிரதேசங்களில் நாங்கள் எங்களை ஆளுகிறதான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம்.

இந்த வாரத்திலே விசேடமாக கறுப்பு ஜூலை அனுஷ்டிக்கிற போது இந்த வன்முறைகளிலே சிக்குண்டு உயிரை இழந்தவர்களையும் உடமைகளை இழந்தவர்களையும் பல விதமான பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட வர்களையும் நாங்கள் உணர்வோடு நினைவு கூர வேண்டும் என்றார்.


## இவ்வார ராசிபலன்

*(28 பக்கம் தொடர்ச்சி)*

**விருச்சிகம்:** குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். தாய் வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். முன் கோபத்தைக் குறைக்க வேண்டும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 2,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Q




**தனுசு:** சிறப்புக்கள் சேரும் வாரம். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிட்டும். பொருளாதாரம் உயரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். ஆனந்தம் பெருகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக்கடன் வசூலாகும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச்செலவு அதிகரிக்கும். காரிய வெற்றி கிட்டும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பூமிவாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டாகும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**மகரம்:** சாதனை படைக்கும் வாரம். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டாகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். காரியங்கள் கைகூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. லாபம் தரும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்துமாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனிதாபிமானம் உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கி விடும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர்கள். திருமண முயற்சி நல்லதாக அமையும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,2,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** விரக்திகள் மறையும் வாரம். நீண்ட நாளைய கனவு ஒன்று நனவாகும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். நாவடக்கம் தேவை. விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி பெருகும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றம் ஏற்படும். வம்பு தும்புகள் ஒழியும். ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் நிதானம் தேவை. வியாபாரத்தால் நன்மை உண்டு. மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். எதிர்ப்புகள் தவிடுபொடியாகும். குழப்பங்கள் நீங்கும். உணவு பிரியம் அதிகாக்கும். பாராட்டு பெருகும். மனநிம்மதி பெருகும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. இன்னல்கள் அகலும்.
வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,T




**மீனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். தொழில் போட்டி மறையும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. தேவைகள் அதிகரிக்கும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவனம் தேவை. போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பானச் செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,H

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL
COMMERCIAL
INDUSTRIAL
CONSTRUCTION
VACANT LAND




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
Subramaniam
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1478 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday August 2, 2024




## முனைவர் பட்டம் பெற்ற தமிழ் கல்வியாளர் வாசுகி நகுலராஜாவை கௌரவிக்கும் இணைய வழி நிகழ்வு

கனடாவில் தமிழ் மொழி மற்றும் கலை இலக்கியம் ஆகிய துறைகளில் நன்கு அறியப்பெற்றவரும் ஒன்றாரியோ அரசுப் பணியில் உயர் பதவியொன்றை வகிப்பவரும் தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் புதிய செயலாளராக பதவியேற்றுள்ள தமிழ் கல்வியாளருமான வாசுகி நகுலராஜாவை கௌரவிக்கும் இணைய வழி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று காலை கனடா நேரப்படி ஆரம்பமானது.
(தொடர்ச்சி 27ம் பக்கம்)

## உலகெங்குமிருந்து தமிழ் பேசும் சாதனையாளர்கள் கனடாவில் சங்கமமாகும் மாபெரும் "சர்வதேச விருது விழா" — வென்மேரி விருதுகள் — 2024

ஒன்றாரியோ மாகாண முதல்வரும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் (உள்ளே 17ம் பக்கம் பார்க்கவும்)

## "இலங்கை கடலில் உயிரிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்தி வருகின்ற போதும் இந்திய அரசு அதனைக் கேட்பதாக இல்லை."

### வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம். ஆலம்



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த மையின் ஏற்பட்ட கைது நடவடிக்கையின் காரணமாக இந்திய மீனவரின் உயிரிழப்பு சம்பவம் இடம் பெற்றுள்ள போதும்,குறித்த சம்பவங்கள் இடம் பெறக் கூடாது என இந்திய மீனவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதும் இதுவரை இவர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.
மன்னாரில் 01-08-2024 அன்று வியாழன் மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
(தொடர்ச்சி 27ம் பக்கம்)

## "மாறிமாறி வந்த அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றியது என்பதும் தமிழ்க் கட்சிகளும் மக்களை ஏமாற்றினார்கள் என்பதும் உண்மை" ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

ஏழு கட்சிகள் சிவில் அமைப்புகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் எனக் கூறப்படுவது தோல்விக் கலக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமே தவிர தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஒப்பந்தம் அல்ல என ஈழ மக்கள் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
யாழ் ஊடக அமையத்தில் 30.07.2024 அன்று 30.07.2024 இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சமீபத்தில் சிவில் அமைப்புகள் என்று கூறிக்கொள்பவர்களும் சிதறுண்டுபோய் இருக்கின்ற ஏழு குழுக்களும் செய்துகொண்ட ஒப்பந்தமானது மாறிமாறி வந்த அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றியது என்பதற்கு அப்பால் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள் என்பதற்கான உதாரணமாகும். (தொடர்ச்சி 6ம் பக்கம்)



## மட்டக்களப்பில் மண் அகழ்வு அனுமதிக்கு 15 இலட்சம் ரூபா இலஞ்சம்

### இராஜாங்க அமைச்சரின் செயலாளர் உட்பட இருவர் கைது



மட்டக்களப்பில் ஆற்று மண் அகழ்வதற்கான அனுமதி வழங்க கட்டிட ஒப்பந்தகார் ஒருவரிடம் 15 இலச்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் செயலாளர் மற்றும் அவரது கட்சி இணைப்பாளர் உட்பட இருவர் வியாழக்கிழமை 1ம் திகதி கல்லடி கடற்கரையில் மறுவேடத்தில் இருந்த இலஞ்சஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
(தொடர்ச்சி 24ம் பக்கம்)

## மார்க்கம் தமிழ் மூத்தோர் சங்கத்தினரால் கௌரவிக்கப்பெற்ற தமிழீழப் பெண்கள் உதைபந்தாட்டக் குழுவின் கனடிய வீராங்கனைகள்

கடந்த யூன் மாதம் முதல்வாரத்தில் நோர்வே நாட்டில் நடைபெற்ற நாடற்றவர்களான சிறுபான்மையினங்கள் சார்ந்தவர்களுக்கான உலக உதைப்பந்தாட்டப் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி அந்த போட்டியில் இரண்டாவது இடத்தைத் தட்டிக் கொண்ட தமிழீழப் பெண்கள் உதைபந்தாட்டக் குழுவில்
அங்கம் வகிக்கும் ஐந்து கனடிய வீராங்கனைகளைக் கௌரவிக்கும் அழகிய நிகழ்வொன்றை கனடா-மார்க்கம் தமிழ் மூத்தோர் சங்கத்தினர் கடந்த 26-07-2024 வெள்ளிக்கிழமை மார்க்கம் நகரில் அமைந்துள்ள ஆர்மடேல் சன சமூக நிலைய மண்டபத்தில் நடத்தினர்.
சங்கத்தின் தலைவர் திரு சுந்தரலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
(தொடர்ச்சி 3ம் பக்கம்)

